# தமிழரசு

ஜூலை - 2003






# இந்த இதழில்...


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2034
ஆனி – ஆடி
ஜூலை 2003
மலர் : 35 இதழ் : 1
விலை ரூ.10



- **மலர்ந்த முகங்கள் மகிழ்ச்சி பொங்கும் விழிகள்**
  (திருவேற்காடு இலவசத் திருமண விழாவில்
  மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை) ........ 2
- **கை நிறையத் திட்டங்கள், மனம் நிறைய வாழ்த்துகள்**
  (திருவள்ளூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் தொடக்க விழாவில்
  மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை) ........ 5
- **திருக்குறள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் சிறந்த புத்தகம்**
  (அருங்காட்சியக விழாவில் மேதகு குடியரசுத்தலைவரின் உரை) ........ 16
  - **அறிவு வளர்ச்சிக்கு ஆக்கப்பூர்வமாகச் செயலாற்றும் சென்னை அருங்காட்சியகம்**
    (மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை) ........ 18
  - **சென்னை, அரசு அருங்காட்சியகம் ஆற்றிவரும் அரும் பணிகள்** ........ 22
  - **தொழில் வளர்ச்சிக்கு நல்ல தருணம்** ........ 24
  - **தகவல்களை அறிய தொடுதிரைக் கணினி** ........ 29
  - **நிதிச் சீர்திருத்தத்திற்கு முன்னுரிமை**
    (புதுடில்லியில் நடைபெற்ற திட்டக்குழு ஆலோசனைக் கூட்டத்தில்
    மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை) ........ 30
  - **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் தமிழ்நாட்டில் இரண்டாவது பசுமைப் புரட்சி**
    (மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, தமிழ்நாடு வேளாண்மைப்
    பல்கலைக்கழகத்தின் சார்பில் டாக்டர் பட்டம் வழங்கியபோது படிக்கப்பட்ட தகுதியுரை) ........ 37
  - **விவசாயிகளின் நல்வாழ்வே அரசின் குறிக்கோள்**
    (கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில்
    மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை) ........ 39
  - **குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் – விருதுநகர்** ........ 45
  - **தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் புதிய இணையதளம்** ........ 47
  - **சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்** ........ 49
  - **ஈரோடு மாவட்டத்தில் 'அனைவருக்கும் கல்வித் திட்டம்'** ........ 51
  - **காவல்துறையின் செயல்பாடு (மாண்புமிகு முதலமைச்சர் ஆய்வு)** ........ 53
  - **தஞ்சாவூர் மாவட்டத்தில் சிறப்பு மருத்துவ முகாம்** ........ 55
  - **தூத்துக்குடியில் ரூ.4000 கோடி செலவில் அனல் மின் நிலையம்**
    (மாண்புமிகு முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம்) ........ 57
  - **காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்துறைப் பணி விளக்க முகாம்** ........ 58
  - **தருமபுரியில் தமிழ்வழி புவி தகவல் அமைப்பு** ........ 60
  - **மாற்றுப்பயிர் பலநோக்குத் திட்டம்**
    – மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிக்கை ........ 63
  - **தொழில்நுட்பக் கல்வியில் தமிழகம் முன்னணி** ........ 66
  - **வளர்ச்சிப் பாதையில் தேனி மாவட்டம்** ........ 69
  - **விழுப்புரம் மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள்** ........ 71
  - **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துணிச்சல் மிக்க நடவடிக்கைகள்** ........ 73
  - **திருநெல்வேலி மாவட்டத்தில் கல்வி வளர்ச்சி** ........ 74
  - **அரியலூரில் அதிசயப் பொருட்கள் கண்டுபிடிப்பு** ........ 76
  - **உதகையில் மலர்க்கண்காட்சி** ........ 78
  - **பெண்ணினம் பெருமையுறும் வகையில் சாதனை படைத்தவர்** ........ 80


| | | |
|---|---|---|
| *முதல் பக்க அட்டை* | : | சென்னை அரசு அருங்காட்சியகம் 151ஆவது ஆண்டு நிறைவு விழா |
| *இரண்டாம் பக்க அட்டை* | : | திருவேற்காட்டில் நடைபெற்ற 1053 இலவசத் திருமண விழா |
| *நான்காம் பக்க அட்டை* | : | கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா |

# "மலர்ந்த முகங்கள் மகிழ்ச்சி பொங்கும் விழிகள்"

18–6–2003 அன்று இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சார்பில் நடத்தப்பட்ட 1053 இலவசத் திருமண விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை



"வேதங்கள் போற்ற வேற்காட்டில் வீற்றிருந்து கருணை பொழியும் கருமாரியின் திருவருளால், திக்கெட்டும் வியக்கும் இந்தத் திருமண நிகழ்ச்சி இன்று இங்கு நடைபெறுகிறது.

ஒன்றல்ல, இரண்டல்ல, நூறல்ல, ஓர் ஆயிரமும் அல்ல, ஆயிரத்து ஐம்பத்து மூன்று திருமணங்கள் அன்னையின் திருத்தலத்தில் இன்று அமோகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

*எங்கு நோக்கினும் மலர்ந்த முகங்கள்!*
*மகிழ்ச்சி பொங்கும் விழிகள்!*

ஒரு திருமணம் என்றாலே தெருவே களை கட்டும்.

இங்கேயோ–1,053 திருமணங்கள்!

எங்கும் குதூகலம்! எங்கும் கோலாகலம்!

இந்த 1,053 திருமணங்களையும் ஒரு சேர நடத்தி வைத்ததில் நான் உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் திருவேற்காட்டிற்கு வந்து இன்று திருமணம் புரிந்து கொண்டு இல்வாழ்வைத் தொடங்க இருக்கும் மணமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாபெரும் இனிய திருமண விழாவில், ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த 719 இணைகளுக்கும், மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த 165 இணைகளுக்கும், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த 144 இணைகளுக்கும், பழங்குடி இனத்தைச் சார்ந்த 22 இணைகளுக்கும், இதர வகுப்பைச் சேர்ந்த 3 இணைகளுக்கும் இன்று திருமணம் நடந்தேறியுள்ளது.



உங்கள் அன்புச் சகோதரியின் அரசு இந்தத் திருமணங்களை தாய் மனதோடு எப்படி எப்படி எல்லாம் சிறப்பாக நடத்தலாம் என்று கவனத்துடன் திட்டமிட்டு சிறப்பாக இன்று நடத்தி இருக்கிறது.

கடந்த ஆண்டு, இரண்டு கிராம் தங்கத்தில் பொன் திருமாங்கல்யம் வழங்கப்பட்டது. இந்த முறை, அந்தத் தங்கத்தின் அளவு 4 கிராம் ஆக கூடுதல் ஆக்கப்பட்டுள்ளது. இந்த திருமாங்கல்யத்துடன் சேர்த்து, மொத்தம் 18 சீதனப் பொருட்கள் புதுமணத் தம்பதிகளுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த ஆண்டில் ஒரு திருமணத்திற்கு 4,500 ரூபாய் செலவழிக்கப்பட்டது. இந்த ஆண்டோ, அதனை மிஞ்சி ஒரு திருமணத்திற்கு, 5,500 ரூபாய் செலவழிக்கப்படுகிறது.

1053 இல்லங்களில் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு இன்று திருவிளக்கு ஏற்றி வைத்து இருக்கிறது. இந்த விளக்குகள் ஆயிரம் ஆயிரம் காலம், ஒளி வீசித் திகழ வேண்டும் என்று இந்த தெய்விகத் திருத்தலத்தில் நின்று வாழ்த்துகின்றேன்.

சாதி மத பேதமற்ற ஓரிடத்தில் நடைபெற்ற சமத்துவத் திருமணம் இது! ஆண்டவன் முன் பேதமில்லை என்பதை உணர்த்த அனைத்து மணமக்களுக்கும் சமமான இடம் தந்துள்ள திருக்கோயில் திருமணம் இது!

“கல்யாணம் பண்ணிப் பார், வீட்டைக் கட்டிப் பார்” என்பது பழமொழி. கல்யாணம் பண்ணிப் பார்ப்பது அவ்வளவு கஷ்டம் என்பதால் நமது முன்னோர்கள் அனுபவ பூர்வமாக இந்தப் பழமொழியைச் சொல்லி வைத்தார்கள்.

வசதியற்ற நிலையில் திருமண வயதைத் தாண்டியும் திருமணம் செய்ய முடியாமல் ஏழை எளிய பெண்கள் வாடிக் கொண்டிருக்கும் நிலைமையை எண்ணிப் பார்த்த நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இலவசத் திருமணத் திட்டத்தை 1982–ஆம் ஆண்டு கொண்டு வந்தார். தமிழ்நாடு அரசின், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் வசதி மிக்க திருக்கோயில்களில் சிறிய அளவில் இந்த இலவசத் திருமணத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

ஆலயங்கள் வழிபாட்டுக் கூடங்களாக மட்டுமல்லாமல் அறச்சாலைகளாகவும் விளங்க

> “தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக்க இணையற்ற முயற்சிகளை இடையறாது மேற்கொண்டு வரும் உங்கள் அன்புச்சகோதரியின் அரசு, அன்னதானத்திட்டம், ஆன்மிகக்கல்வி போன்ற பல்வேறு திட்டங்கள் மூலமாக ஓர் ஆன்மிகப்புரட்சியை நடத்தி வருகின்றது.”

வேண்டும். அப்படித்தான் முன்பு நமது ஆலயங்கள் விளங்கின. ஏழைப் பெண்களுக்கு, இலவசத் திருமணம் நடத்துவதைக் காட்டிலும் உயரிய அறச் செயல் வேறு ஒன்றும் இல்லை. இதை உணர்ந்து தான் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், கடந்த ஆண்டு இதே திருவேற்காட்டில் 1,008 திருமணங்களை, அரசின் சார்பில், இந்து சமய அறநிலையத் துறை மூலம் ஏற்பாடு செய்து, மிகச் சிறப்பாக நடத்தி வைத்தேன். அதைப் போலவே, இந்த ஆண்டும் 1,053 இலவசத் திருமணங்களை இன்றைக்கு, சீரோடும் சிறப்போடும் நடத்தி

இருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், 1,008 திருமணங்களை செய்விப்பது புதிய சாதனை அல்ல. இப்போது அரசின் சார்பில், இலவசத் திருமணங்கள் நடைபெறுகின்றன. எனது கடந்த ஆட்சிக் காலத்தில், அதாவது 1991 முதல் 1996 வரை, முதன்முறையாக நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இதை விட பெரிய



அளவில், இலவசத் திருமணங்களை நடத்தி உள்ளோம்.

முதலில், சிதம்பரத்தில் ஒரே இடத்தில் 2,500 இலவசத் திருமணங்களை நடத்தினோம். அதற்குப் பிறகு, திருச்சி மாநகரத்தில் ஒரே பந்தலில் 5,004 இலவசத் திருமணங்களை நடத்தினோம்.

இதயதெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இலவசத் திருமணத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அதை மாநிலமே வியக்கும் வண்ணம், மகத்தான அளவில் கழகத்தின் சார்பிலும், கழக அரசின் சார்பிலும், நடத்திக் காட்டிய பெருமையை உங்கள் அன்புச் சகோதரியாகிய எனக்கே காலம் வழங்கி இருக்கிறது. நல்லது செய்வதற்கும் ஒரு கொடுப்பினை வேண்டும். எல்லாருக்கும் இந்தச் சிறப்பு அமைந்து விடாது.

"தவமும் தவம் உடையார்க்கு ஆகும்", என்பது தானே வள்ளுவரின் வாய் மொழி! நான் செய்து வரும் இப்படிப்பட்ட நல்லவற்றை மற்றவர்களும் செய்திருக்க முடியும். ஆனால், செய்யவில்லை. ஏனென்றால், இவற்றை எல்லாம் செய்வதற்கு ஆட்சிப் பொறுப்பும், மக்கள் அளித்த அதிகாரமும் மட்டும் போதாது – கூடவே இதயம் என்பதும் இருக்க வேண்டும்!

இந்த நேரத்தில், ஒரு வாழ்வியல் உண்மையை நான் உங்களுக்கு கூற விரும்புகிறேன்.

மகிழ்ச்சியை உருவாக்காத எவருக்கும் மகிழ்ச்சியை அனுபவிக்க உரிமையில்லை.

ஏழைகளை மகிழ்ச்சிப்படுத்துங்கள். அதைப் போலப் பல மடங்கு மகிழ்ச்சி நீங்கள் தேடாமலேயே வந்து சேரும்.

இன்று, இல்லறத்தில் அடி எடுத்து வைக்கும் மணமக்கள் அனைவருக்கும் இதையே திருமண வாழ்த்துச் செய்தியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநில மாக்க இணையற்ற முயற்சிகளை இடையறாது மேற்கொண்டு வரும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, அன்னதானத் திட்டம், ஆன்மிகக் கல்வி போன்ற பல்வேறு திட்டங்கள் மூலமாக ஓர் ஆன்மிகப் புரட்சியையே நடத்தி வருகின்றது.

இத்தகைய முற்போக்கு முயற்சிகள் தொடரும்!

இந்த பொற்காலம் தொடரும்!

என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

இந்த 1053 திருமணங்கள் இத்தனை சிறப்போடு நடந்தேற அனைத்து ஏற்பாடுகளையும் செய்த இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களையும், இந்து சமய அறநிலையத் துறை அலுவலர்களையும் உடன் சேர்ந்து ஒத்துழைத்த அனைத்துத் துறை அலுவலர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

வாழிய மணமக்கள்! வாழ்க பல்லாண்டு!
என மீண்டும் வாழ்த்தி விடை பெறுகிறேன்". ★

# கை நிறையத் திட்டங்கள் மனம் நிறைய வாழ்த்துகள்

**மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 4.7.2003 அன்று திருவள்ளூர் மாவட்ட அரசு விழாவில் ஆற்றிய உரை.**



சிறப்புகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட திருவள்ளூர் மாவட்டத்தின் தலைநகரமாகிய திருவள்ளூரில் உங்கள் அனைவரையும் நேரில் கண்டு, நெஞ்சார வாழ்த்துகள் கூறி, நிறைவேற்றிவைக்கப்பட்டத் திட்டங்களைத் திறந்து வைத்து, நிறைவேற்றப்படவுள்ள திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கான நல்லதொரு வாய்ப்பு இன்று எனக்குக் கிடைத்திருப்பது குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தின் தலைநகருக்குத் தண்ணீர் அளிக்கும் புகழ் பெற்ற பூண்டி நீர்தேக்கத்தையும், பழவேற்காடு என்னும் அழகிய சுற்றுலாத் தலத்தையும், திருத்தணி, திருவள்ளூர், திருவேற்காடு, திருஆலங்காடு, திருஒற்றியூர், பெரியபாளையம் ஆகிய தமிழகத்தின் சிறப்புமிக்க ஆன்மிக திருத்தலங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனிச் சிறப்பைக் கொண்ட மாவட்டம் இந்தத் திருவள்ளூர் மாவட்டம்.

இங்கே நெல் விளையும், எள் விளையும், கம்பு விளையும், கரும்பு விளையும், கடலை விளையும், மிளகாயும் விளையும். ஏரிப் பாசனமும், கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்றுப் பாசனமும் கொண்டு பொன் விளையும் பூமியாக இந்த மண்ணை உருவாக்கும் உழவர் பெருமக்களைக் கொண்டது இந்த மாவட்டம்.

3424 சதுர கிலோ மீட்டர் பரப்பையும், கிட்டத்தட்ட 23 இலட்சம் மக்கள் தொகையையும், 69 சதவிகிதம் எழுத்தறிவையும் கொண்டு விளங்கும் திருவள்ளூர் மாவட்டம், தமிழகத்தின் வடகோடி மாவட்டமாக, ஆந்திரத்தின் எல்லைக்கு அருகே அமைந்திருக்கிறது.

மூன்று வருவாய்க் கோட்டங்களையும், எட்டு வருவாய் வட்டங்களையும், 840 வருவாய்க் கிராமங்களையும், 6 நகராட்சிகளையும், 19 பேரூராட்சிகளையும், 14 ஊராட்சி ஒன்றியங்களையும், 539 ஊராட்சிகளையும், மூன்று நாடாளுமன்றத் தொகுதிகளையும், எட்டு சட்டமன்றத் தொகுதிகளையும் கொண்ட திருவள்ளூர் மாவட்டம், வேளாண்மைத் தொழிலையும், நெசவுத் தொழிலையும் மட்டுமல்லாமல் பெரும் தொழிற்சாலைகளையும் கொண்ட பெருமைக்குரிய மாவட்டமாக விளங்கி வருகிறது.

ஸ்ரீ சாலிஹோத்திர மகரிஷி என்னும் முனிவர் தியானத்தில் அமர்ந்து இருக்கையில் உண்ண உணவும், இருக்க இடமும் கேட்டு அந்தணர் ஒருவர் அவரிடம்



வந்தாராம். உணவைப் பெற்றுக் கொண்ட பிறகு ‘எவ்வுள்’, அதாவது ‘எங்கே தங்குவது ?’ என்று கேட்டாராம். அதன் பிறகு, அந்த இடத்தில், தானே வீரராகவப் பெருமாள் என்பதை வெளிப்படுத்தினாராம். இவ்வாறு, திரு + எவ்வுள் + ஊர் ஆக, அதாவது திருஎவ்வுள்ளூராக இந்த ஊர் பெயர் பெற்றது என்றும், திருஎவ்வுள்ளூர் எனும் பெயரே, பின்னால் திருவள்ளூர் என்று திரிந்தது என்றும், ஒரு வரலாறு கூறுகிறது. பெருமாள் தன்னை வெளிப்படுத்திய திருநாளான அமாவாசை அன்று பக்தர்கள் பெருந்திரளாகக் கூடி அருள்மிகு வீரராகவப் பெருமாளை வழிபடுகின்ற மரபு இன்றும் தொடர்கிறது.

இந்தப் புராண வரலாற்றைப் பற்றிச் சிந்திக்கும் போது, இந்த ஊரின் உயர்வைப் பற்றி எனக்கொரு சிந்தனை தோன்றுகிறது. கோயில் கட்டி, குடமுழுக்கு செய்து, இறைவனை அந்த இடத்தில் எழுந்தருளச் செய்வது தான் எல்லா இடங்களிலும் வழக்கம். ஆனால், திருவள்ளூரில் அப்படி நடைபெறவில்லை. பெருமாளே நேரில் வந்து “எனக்கு உரிய இடம் எங்கே ?” என்று கேட்டுத் தங்கிய இடம் தான் இந்தத் திருவள்ளூர். அதாவது, ஆண்டவன் தானே தேடி வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கின்ற ஊர் இந்தத் திருவள்ளூர் என்றால், இது எவ்வளவு புண்ணியம் செய்த ஊராக இருக்க வேண்டும்! – இது தான் எனது சிந்தனை.

பெருமாளே தேடி வந்த ஊர் மக்களாகிய உங்களைப் பார்க்க உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் இன்று வந்து இருக்கிறேன்.

எங்கு சென்றாலும் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் வெறும் கையோடு செல்வதே இல்லை. இன்று, உங்களைத் தேடி நான் வந்திருக்கிறேன் என்றால், கை நிறையத் திட்டங்களோடும், நலத் திட்ட உதவிகளோடும், மனம் நிறைய வாழ்த்துக்களோடும் வந்திருக்கிறேன் என்று தான் பொருள்.

ஒன்றல்ல, இரண்டல்ல, 245 கோடி ரூபாய் மதிப்புள்ள முடிவுற்ற பணிகள், புதிய பணிகள், நலத்திட்ட உதவிகள் ஆகியவற்றை, திருவள்ளூர் மாவட்டப் பெருமக்களுக்கு வழங்குவதற்காக நான் இன்று வந்திருக்கிறேன்.

## முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தல்

சீர்மிகு இவ்விழாவில், இன்றைய தினம், திருவள்ளூர் மாவட்ட மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில், மொத்தம் 124 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 9,792 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்ததில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். நெடுஞ்சாலைத் துறையின் கீழ், 8 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பில் 16 சாலை மேம்பாட்டுப் பணிகளை நான் இந்த விழாவிலே திறந்து வைத்துள்ளேன். ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குச் சாலைகள் எந்த அளவுக்கு முக்கியமானவை என்பதை உணர்ந்து உள்ளது எங்களுடைய அரசு. உலக வங்கி, தமிழ் நாட்டின் சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2160 கோடி ரூபாய் ஒப்பளித்துள்ளது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுப்பணித்துறை – நீர்வள ஆதார அமைப்புத் திட்டத்தின் கீழ் மொத்தம் 9 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பில் 6 முக்கியமான பணிகளை இந்த விழாவிலே திறந்து வைத்துள்ளேன். குறிப்பாக 88 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட 4 சிறு பாசன ஏரிகள் சீரமைக்கும் திட்டம் – 2 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்டுள்ள மாதவரம் நகர வடிகால் வாய்க்கால்கள் சீரமைக்கும் பணி –மற்றும் பொன்னேரி வட்டத்தில் உள்ள வள்ளூர் அணைக்கட்டின் முன்புறக் கரைகளைச் சீரமைக்கும் 5 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டப்பணி ஆகியவற்றை இந்த விழாவிலே திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

கோடைக்காலத்தில் குறிப்பாக வறட்சி நிலவுகின்ற இன்றைய சூழ்நிலையில் மக்களுடைய குடிநீர்த் தேவைகளைப் போர்க்கால அடிப்படையில் நிறைவு செய்வதை நான் எனது தலையாய கடமையாகக் கருதுகிறேன். அந்த வகையில் திருவள்ளூர் மாவட்டத்தில் 14 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பில் தனிவிசை மின் திட்டங்கள், சிறுவிசை மின் திட்டங்கள், கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் பள்ளிகளுக்கான குடிநீர்த் திட்டம் ஆகியவை மொத்தம் 94 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப்பட்ட 1,117 குடிநீர்த்திட்டப் பணிகளை இந்த விழாவிலே திறந்து வைத்ததில் நான் மிக்க மனநிறைவு அடைகின்றேன்.

தமிழகத்தில் விரைந்த தொழில் வளர்ச்சியை உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையிலான எனது அரசு ஏற்படுத்தி, சாதனைச் சரித்திரம் படைத்து வருவது உங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். குறிப்பாக மகளிருக்கான தொழில் வளர்ச்சியில் நான் காட்டி வருகின்ற ஆர்வத்தையும் நீங்கள் அறிவீர்கள். அந்த வகையில், இன்றைய தினம், அம்பத்தூர் வட்டத்தில் உள்ள திருமுல்லைவாயில் அருகில், 218 ஏக்கர் பரப்பில் அமைக்கப் பெற்றுள்ள, 8 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, முழுவதும் பெண்களுக்கான சிட்கோ தொழில் பூங்காவினை இந்த இனிய விழாவிலே திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதில் 342 தொழில் மனைகள் உருவாக்கப்பட்டு, பெண் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட உள்ளன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதே விழாவில், தமிழ்நாடு மின்சார வாரியத்தினால், பொன்னேரி வட்டத்தில் உள்ள மேலூரில், 5 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் 50,000 மக்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டு உள்ள 110 கிலோ வோல்ட் திறனுள்ள மேலூர் துணை மின் நிலையத்தினையும் – ராமாபுரம், மணப்பாக்கம், முகலிவாக்கம், ஆழ்வார்திருநகர், போரூர் மற்றும் கே.கே. நகர் ஆகிய பகுதிகளில் சரியான மின் அழுத்தத்தை வழங்கும் வகையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 110 கிலோ வோல்ட் திறனுள்ள 10 கோடி ரூபாய் மதிப்புடைய ராமாபுரம் மின் நிலையத்தையும், திறந்து வைத்துள்ளேன்.




பேரூராட்சித் துறையின் சார்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 12 கோடியே 83 இலட்சம் ரூபாய்

**உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் உங்களுக்கு ஒரு அறிவுரை கூற விரும்புகிறேன். கிடைக்கின்ற ஒரு சொட்டு தண்ணீரைக் கூட நீங்கள் வீணாக்கக் கூடாது. மழை பெய்தால் அந்த மழை நீரை நீங்கள் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும். இனி வரும் காலங்களில் இதை விட கடுமையான வறட்சி காலங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆகவே மழை பெய்தால் அதைப் பொக்கிஷமாகக் கருதி நீங்கள் ஒரு சொட்டு தண்ணீரைக் கூட வீணாக்காமல் அதை சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும்.**

மதிப்புடைய 841 பணிகள் – நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 7 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 223 பணிகள்– மற்றும் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில், 71 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 4 பணிகள்– பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, வருவாய்த் துறை, சுற்றுலாத் துறை மற்றும் காவல் துறை ஆகியவற்றின் சார்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 3 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 26 பணிகள் ஆகியவற்றை, இந்த இனிய விழாவிலே நான் திறந்து வைத்துள்ளேன்.

இவற்றோடு, ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில், 43 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள், சாலை மேம்பாட்டுப் பணிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடங்கள், மகளிருக்கான ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் மற்றும் கிராம நிருவாக அலுவலர்களுக்கான கட்டடங்கள், தார்ச் சாலைகள், சிமெண்ட் சாலைகள் உள்ளிட்ட 7,512 கட்டுமானப் பணிகளை, இந்த விழாவில் திறந்து வைத்ததில், நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த நேரத்தில், வாழ்க்கையின் அடிப்படை உண்மை ஒன்றை, கதை ஒன்றின் மூலம் உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

மலைப் பகுதியில் ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டில் ஒரு சின்னஞ்சிறு பையன் இருந்தான். அவன் ஒரு நாள் அம்மாவிடம் சண்டை போட்டுக் கொண்டு, 'நான் உன்னை வெறுக்கிறேன்; – நான் உன்னை வெறுக்கிறேன்,'' என்று சொல்லிக் கொண்டே வெளியே ஓடினான். ஓடிப் போனவன் வீட்டிற்கு வெளியே ஓரிடத்தில் நின்று கொண்டு "நான் உன்னை வெறுக்கிறேன்'' என்று உரக்கக் கத்தினான். உடனே பல இடங்களில் இருந்தும் "நான் உன்னை வெறுக்கிறேன்'', என்று திரும்பத் திரும்ப சப்தம் வந்தது. அவன் இருந்தது ஒரு மலைப் பகுதி! அந்தப் பள்ளத்தாக்கு முழுவதும் அவனது குரல் எதிரொலித்தது. ஆனால், பாவம் சின்னஞ்சிறு பையனாகிய அவனுக்கு அது அவனது குரலின் எதிரொலிதான் என்று தெரியவில்லை. உடனே வேகமாக ஓடிச் சென்றான்; வீட்டில் அம்மாவைக் கட்டிக் கொண்டு தயங்கித் தயங்கிப் பேச ஆரம்பித்தான். 'ஏன் இப்படி பயப்படுகிறாய்'? என்று அம்மா கேட்டாள். "இந்த மலையில் நிறைய கெட்ட பையன்கள் இருக்கிறார்கள். அந்தப் பையன்கள் எல்லோரும் 'நான் உன்னை வெறுக்கிறேன்! நான் உன்னை வெறுக்கிறேன்' என்று கத்துகிறார்கள்'' என்று அந்தச் சிறுவன் பதில் சொன்னான். அவனுடைய தாய்க்கு என்ன நடந்திருக்கும் என்று புரிந்தது. அவள் புத்திசாலி. அவள் என்ன நடந்தது என்பதையும் விளக்கிச் சொல்லவில்லை. அவள் மகனைப் பார்த்துச் சொன்னாள்: "இப்போது நான் சொல்கிறபடி செய்! நீ முன்னால் நின்ற இடத்தில் நின்று கொண்டு, 'நான் உன்னை நேசிக்கிறேன்' என்று உரக்கச் சொல்!'' என்று கூறி அனுப்பி வைத்தாள்.

அந்தச் சிறுவன், பயந்து கொண்டே போனான். முன்பு நின்ற இடத்தில் நின்றான். "நான் உன்னை நேசிக்கிறேன்'', என்று உரக்கக் கத்தினான். உடனே, "நான் உன்னை நேசிக்கிறேன், நான் உன்னை நேசிக்கிறேன்!'' என்று பல்வேறு குரல்கள் கேட்டன. பையனுக்கு இப்போது சந்தோஷம்!

இந்தக் கதை நமக்குச் சொல்வதென்ன?

நீங்கள் இந்த உலகத்திற்கு எதைக் கொடுக்கிறீர்களோ அது தான் உங்களுக்குத் திரும்ப வரும். இது தான் இந்தக் கதை உணர்த்துகின்ற செய்தி! உணர்த்துகின்ற உண்மை.

வாழ்க்கையின் இந்த அடிப்படை உண்மையைக் கூட இன்னும் பலர் புரிந்து கொள்ளவே இல்லை. சில தலைவர்களுக்கோ இதை எடுத்துச் சொன்னாலும் புரிந்து கொள்ள முடிவதில்லை.

நாம் திட்டினால் இந்த உலகம் நம்மைத் திட்டுகிறது. நாம் வாழ்த்தினால் இந்த உலகம் நம்மை வாழ்த்துகிறது. முதிர்ந்த வயதிலும் இதைக் கூட தெரிந்து கொள்ளாத தலைவர்கள் இன்றும் இருக்கிறார்கள்.

அவர்கள், நீதிமன்றம் போனால், நீதிபதிகள் சரியில்லை என்பார்கள்; பேட்டி கொடுத்தால், பத்திரிகையாளர்கள் சரி இல்லை என்பார்கள்; மருத்துவமனைக்குப் போனால், டாக்டர்கள் சரியில்லை என்பார்கள்; மருத்துவமனையை விட்டு வெளியே வந்தாலோ மருத்துவமனையே சரி இல்லை என்பார்கள். சட்ட சபைக்குப் போனால் ......? அந்தப் பிரச்சினையே எழவில்லை; அவர்கள் சட்ட சபைக்குப் போவதே இல்லையே? குறை சொல்வதும், குற்றம் சொல்வதுமே தனது பிறவிப் பயன் என்று நினைக்கும் இவர்களை யாராலும் திருத்த இயலாது. இப்படிப்பட்ட அசூசை




மனிதர்களை, எதற்கு எடுத்தாலும் அகராதியைத் துணைக்கு அழைக்கின்ற அரை குறை அகராதிப் பண்டிதர்களை எல்லாம் மீறித்தான் – இவர்கள் அன்றாடம் ஏற்படுத்தும் தடைகளை எல்லாம் தாண்டித்தான் – உங்கள் அன்புச் சகோதரியின் அரசு மக்கள் நலப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு மாபெரும் சாதனைகள் படைத்து வருகிறது; புதிய புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

## அடிக்கற்கள் நாட்டுதல்

திருவள்ளூர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அரசின் பல்வேறு திட்டங்களின் பயன்களை மக்கள் அதிக அளவில் பெற வேண்டும் என்பதற்காக, இன்றைய தினம், இந்த இனிய விழாவிலே, 104 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 469 பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டியுள்ளேன் என்பதை மன நிறைவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நெடுஞ்சாலைத் துறையில் திருவூர் – செவ்வாய்ப்பேட்டை – கீழானூர் சாலையில் 2 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில் பாலம் – பழவேற்காடு லைட் ஹவுஸ் சாலையில் ஏரியின் குறுக்கே 5 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பில் உயர் மட்டப் பாலம் ஆகியவற்றிற்கும் – பொதுப் பணித்துறை நீர்வள ஆதார அமைப்புத் திட்டத்தின் கீழ் 1 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பில் திருத்தணி, அருங்குளம் அருகே கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி – பள்ளிப்பட்டு பொம்மராஜபேட்டை அருகே புதிய ஏரி அமைக்கும் பணி ஆகியவற்றிற்கும் – பொதுப்பணித் துறையின் கட்டடப் பிரிவின் சார்பில், 4 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில், மாவட்டத்தில் மொத்தம் 18 பல்வேறு துறைகளுக்கான கட்டடங்களுக்கும் அடிக்கற்கள் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணியால், ஆற்றுப் படுகையில் நிலத்தடி நீர் மட்டம் உயரவும், திருத்தணி வட்டத்தில் உள்ள பல கிராமங்களின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்யவும் இந்தப் பணி உதவிடும். அது மட்டுமன்றி, பள்ளிப்பட்டு பொம்மராஜபேட்டையில் அமைக்கப்படவுள்ள புதிய ஏரியின் வாயிலாக 80 ஏக்கர் புஞ்சை நிலம் பாசன வசதி பெறவும் அதன் மூலம் 90 மெட்ரிக் டன் கூடுதல் தானிய உற்பத்தி கிடைக்கவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. வறட்சி நிலவுகின்ற

இப்பகுதிக்கு இப்பணிகள் பேருதவியாக இருக்கும் என்பதை அறிந்து நான் மனதிருப்தி அடைகின்றேன்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக, இன்றைய தினம் 11 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில், ஊத்துக்கோட்டை, பூந்தமல்லி மற்றும் பள்ளிப்பட்டு ஆகிய மூன்று நகர குடிநீர் அபிவிருத்தி திட்டங்களுக்காக என்னால் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. இந்த மூன்று கூட்டுக் குடிநீர் திட்டங்களின் வாயிலாக இப்பகுதி வாழ் மக்களின் தண்ணீர்த் தேவை பெரிய அளவிற்கு நிறைவு செய்யப்படும் என்பதை அறிந்து நான் மிக்க மன மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் பொன்னேரி வட்டத்தில் உள்ள அகரம் கிராமத்திலும் திருவள்ளூர் வட்டத்தில் உள்ள பூண்டி கிராமத்திலும் மொத்தம் 3 கோடி ரூபாய் மதிப்பில் 33 கிலோ வோல்ட் திறன் உள்ள இரண்டு துணை மின் நிலையங்களுக்கு நான் அடிக்கற்கள் நாட்டியுள்ளேன். இதன் வாயிலாக பொன்னேரி வட்டத்தில் அகரம் உள்ளிட்ட 12 கிராமங்களிலும் திருவள்ளூர் வட்டத்தில் உள்ள பூண்டி உள்பட 9 கிராமங்களிலும் உள்ள மக்கள், கூடுதல் மின் வசதியினால் பயன்பெறுவார்கள் என்பதை இந்த நல்ல நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவை மட்டுமன்றி, திருவள்ளூர் மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் குடியிருப்புக்கு 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – திருவள்ளூர் மாவட்டத்தின் பேரூராட்சித் துறையின் சார்பாக 1 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கும் – கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 132 பணிகளுக்கும் – பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஆகியவற்றின் சார்பில் 8 இடங்களில் விடுதிக் கட்டடங்களுக்காக 2 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – வருவாய்த் துறையின் சார்பில் 99 இலட்சம் ரூபாய் செலவில் பள்ளிப்பட்டு வட்டாட்சியர் அலுவலகக் கட்டடப் பணிக்கும் – 40 இலட்சம் ரூபாய் செலவில் திருவள்ளூர் வட்டார போக்குவரத்து அலுவலகக் கட்டடத்திற்கும் – இந்த இனிய விழாவிலே அடிக்கற்கள் நாட்டியதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கிராமப்புறங்களில் சுகாதார மேம்பாட்டுப் பணிகளை முடுக்கி விடுகின்ற வகையில், திருவள்ளூர் மாவட்டத்திற்காக 20 கோடி ரூபாய் மதிப்பில் முழு சுகாதாரத் திட்டத்தினைத் துவக்குகின்ற வகையில் இந்த விழாவில் அடிக்கல் நாட்டியுள்ளேன். கிராமிய சாலை



மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 3 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் 19 சாலைப் பணிகளுக்கான அடிக்கற்களையும் இந்த விழாவிலே நாட்டியுள்ளேன்.

இவை மட்டுமன்றி, நகராட்சி நிருவாகத் துறையைப் பொறுத்த வரையில், அம்பத்தூர் நகராட்சியில் 10 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில், 92 பணிகளுக்கும் – ஆவடி நகராட்சியில் 1 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில், 14 பணிகளுக்கும் – கத்திவாக்கம் நகராட்சியில் 84 இலட்சம் ரூபாய் செலவில் 7 பணிகளுக்கும் – மாதவரம் நகராட்சியில் 1 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் 18 பணிகளுக்கும் – திருவள்ளூர் நகராட்சியில் 10 இலட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த துப்புரவு வளாகப் பணி



ஒன்றிற்கும் – திருவொற்றியூர் நகராட்சியில் 28 கோடி ரூபாய் மதிப்புள்ள பாதாள சாக்கடைத் திட்டம் உள்ளிட்ட 35 பணிகளுக்கு, 31 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், அடிக்கற்கள் நாட்டி உள்ளேன் என்பதை மிக்க மன நிறைவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆக மொத்தம் 104 கோடியே 38 இலட்சம் ரூபாய் அளவிற்கு இன்றைய தினம் மொத்தம் 469 பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டப்பட்டு உள்ளன. அனைத்துப் பணிகளையும் விரைந்து முடிக்க அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் நான் உத்தரவு இட்டுள்ளேன் என்பதையும் அவை முடிந்த பிறகு நானே மீண்டும் இங்கே வந்திருந்து, முடிந்த பணிகளைத் திறந்து வைப்பேன் என்பதையும், மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திருவள்ளூர் மாவட்டத்தில் கடலும், ஏரியும் சந்திக்கும் இடமான பழவேற்காடு, இம்மாவட்டத்தின் அழகிய பகுதியாக விளங்குகின்றது. கடல் வழியாக வந்த டச்சுக்காரர்கள் 'புலிகட்டா' என்று பழவேற்காட்டை அழைத்தனர். 'புலிகட்டா' என்ற பெயர் ஆங்கிலத்தில் 'புலிகாட்' என்று பின்னால் வழங்கப்பட்டது. டச்சுக்காரர்களின் வணிகத் தலமாக பழவேற்காடு சிறப்புடன் விளங்கியது; மேலும் கப்பல் கட்டும் தளமாகவும் அது திகழ்ந்தது என்று வரலாறு கூறுகிறது.

பழவேற்காட்டில் உள்ள டச்சு இடுகாட்டில் அழகிய சமாதிகள் உள்ளன. அப்படிப்பட்ட சமாதி ஒன்றில் டச்சு மொழியில் எழுதப்பட்ட ஒரு வாசகம், நமது கவனத்தைக் கவரும் வகையில் அமைந்து இருக்கிறது.

"Here Rests He Who Had No Rest" என்பது, அந்த டச்சு மொழி வாசகத்தின் ஆங்கிலப் பொருள்.

"ஓய்வே அறியாத ஒருவர்,
இங்கே ஓய்வெடுக்கிறார்" –

"உறக்கமே கொள்ளாத ஒருவர் இங்கே உறங்குகிறார்" என்பது அதன் பொருள்.

எங்கோ தொலை தூர தேசத்தில் இருந்து இங்கு வந்து, பழவேற்காட்டை ஒரு பெரிய வணிக மையம் ஆக்குவதற்கு, எவ்வளவு முயற்சி, எவ்வளவு ஊக்கம், எவ்வளவு உழைப்பு இருந்திருக்க வேண்டும்!

அந்தக் கல்லறை வாசகம் என்ன சொல்லுகிறது?

'ஓய்வே எடுக்காதவர் இங்கே ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்' என்று சொல்கிறது.

ஓய்வே அறியாத அந்த உழைப்பல்லவா மேல் நாட்டவரைக் கடுமையான கப்பல் பயணம் மேற்கொள்ள வைத்தது? வணிகப் பேரரசுகளை அவர்கள் அமைக்க வழி கோலியது?

நமது மண்ணில், நாம் அப்படி ஒரு ஓய்வறியா உழைப்பை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் கடுமையாக உழைக்கிறேன்.

தமிழகத்தில் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் தங்கள் உழைப்பாற்றலால் உயர வேண்டும்; நாட்டை உயர்த்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்'

– அதாவது, சோர்வு இல்லாமல், முயற்சியில் குறைவு இல்லாமல் முயல்கின்றவர், ஊழையும் ஒரு காலத்தில் தோல்வியுறச் செய்வார் என்பது வள்ளுவப் பெருமானின் வாக்கு.

## மகளிர் சுய உதவிக் குழுக்கள்

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமானால், அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும், தன்னம்பிக்கையையும் பெற வேண்டும். அத்தகைய இலட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காகத் தான், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை முதன் முதலாக நான் 1992–ஆம் ஆண்டில் தொடங்கிய போது, ஆரம்பத்தில் அந்தக் குழுக்களில் உள்ள மகளிருக்கு கடன் வழங்க, வங்கிகள் பெரிதும் தயக்கம் காட்டின. ஆனால், இன்றைய தினம் இந்தச் சூழ்நிலை தலைகீழாக மாறியுள்ளது. தமிழகம் எங்கும் உள்ள இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களிடம், பல கோடி ரூபாய் சேமிப்பு நிதியாக இருப்பதைப் பார்த்து, இன்றைக்கு வங்கிகளே தங்களிடம் அந்த சேமிப்பு நிதியை வைப்பு நிதியாகச் செலுத்தி வைக்குமாறு கோருவதற்காக இந்த மகளிரைத் தேடிச் செல்லும் நிலைமை இன்றைக்கு உருவாகி இருக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயக்கத்தில், தற்போது 1 இலட்சத்து 31 ஆயிரத்து 749 குழுக்கள் இருக்கின்றன. இந்தக் குழுக்களில் மொத்தம், 22 இலட்சத்து 44 ஆயிரத்து 935 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுக்களின் மொத்த சேமிப்பு படிப்படியாக வளர்ந்து தற்போது 309.59 கோடி ரூபாய் என்கிற பெரிய அளவுக்கு உயர்ந்துள்ளது, வளர்ந்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரை மொத்தம் 5011 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவற்றில் 74,551 பெண்கள் உறுப்பினர்களாக இயங்கி வருகின்றனர். அவர்கள் இதுவரை 11.14 கோடி ரூபாயை, தமது சேமிப்பாக வங்கிகளில் சேமித்து வைத்துள்ளனர் என்றும் நான் அறிகிறேன்.

கிராமப்புறங்களில் கணினி மற்றும் தொலைத் தொடர்பு வசதிகள் அமைக்கப்பட வேண்டும், அவற்றில் மகளிர் பங்கேற்றிட வேண்டும் என்பதற்காகத் தமிழக அரசு RASI (Rural Access for Services through Internet) என்ற கிராம கணினி மையத்தை கிராமங்களில் அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் இன்றைய தினம் 18 கிராமங்களில் இந்த RASI மையங்கள் என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் கிராம மக்களும், கிராமத்தில் வசிக்கும் பெண்களும், நவீன தொழில் நுட்பத்தின் வாயிலாக, தங்கள் பொருளாதாரத்தை வளப்படுத்திக் கொள்ளலாம் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இந்த RASI மையங்கள் அமைந்துள்ளன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இது மட்டுமன்றி, இந்த மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக, 22 நியாய விலைக் கடைகள் நாளை முதல் இயங்க உள்ளன என்பதையும் நான் அறிகிறேன்.



மேலும், தரிசு நில மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் தரிசு நிலங்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் வழங்கப்படலாம் என்று நான் பிறப்பித்துள்ள உத்தரவினை அடுத்து இந்த மாவட்டத்தில் முதற்கட்டமாக 125 பெண்களைக் கொண்ட, 5 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 21 ஏக்கர் நிலம், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டு உள்ளது என்பதையும் அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒட்டுமொத்தமாக இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள்



அனைவரும் உங்கள் இல்லங்களில், நீங்கள் பணி செய்யும் இடங்களில் இந்த மழைநீர் சேகரிப்பு அமைப்பை உடனடியாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு கட்டடங்களிலும் இந்த மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளேன். அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இனிமேல் தமிழ்நாட்டில் சென்னையில் மட்டுமல்ல எந்த இடத்திலுமே ஒரு புதிய கட்டடம் எழுப்ப வேண்டுமென்றால், அந்த கட்டிடத்தில் வரைபடத்தில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு இருந்தால் தான் அந்தக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படும். இப்படி ஒரு சட்டத்தை நான் கொண்டு வந்திருக்கிறேன். அது மட்டுமல்ல ஏற்கனவே கட்டப்பட்டுள்ள கட்டடங்களிலும் இந்த ஆண்டு இறுதிக்குள் அதாவது அக்டோபர் மாதத்திற்குள் அனைவரும் இதுவரை செய்ய வில்லை என்றால், மழை நீர் சேகரிப்பு அமைப்பை அந்த கட்டடங்களில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே இன்றைக்கு நான் சொன்னதை நீங்கள் அனைவரும் உங்கள் நினைவில் இருத்திக் கொண்டு இதுவரை செய்யவில்லை என்றால் உடனடியாக உங்கள் வீடுகளிலும் நீங்கள் பணி புரியும் அலுவலகங்களிலும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதை மிகவும் குறைந்த செலவில் செய்யலாம். அதிகம் செலவாகாது. இதை எப்படி செய்ய வேண்டும் என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் நீங்கள் எந்தப் பஞ்சாயத்து அலுவலகத்திற்குச் சென்றாலும், உங்களுக்குத் தேவையான உதவிகளை அறிவுரைகளை வழங்குவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திட்டம் தமிழ்நாட்டில் மகளிர் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்தப் புரட்சிகரமான திட்டத்தில் சேர மென்மேலும் பெண்கள் அதிக அளவில் முன் வர வேண்டும் என்பதே எனது பேரவா.

இன்றைக்குத் தமிழகத்தில் நிலவுகின்ற கடுமையான வறட்சி நிலைமை குறித்து நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இப்போது தான் பருவ மழை பெய்ய ஆரம்பித்து இருக்கிறது. பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்பது பழமொழி. இனி வரும் காலங்களில் பொன் கிடைத்தாலும் தண்ணீர் கிடைக்காது என்று ஒரு புதுமொழியை நாம் உருவாக்குகின்ற ஒரு நிலைமை இப்போது ஏற்பட்டுள்ளது. பொதுவாக பெரியவர்கள் உங்களுக்கு எல்லாம் அறிவுரை கூறுவார்கள். பணத்தை சிக்கனமாக செலவு செய்ய வேண்டும். கிடைக்கின்ற பணத்தை சேமித்து வைக்க வேண்டும். பணத்தை வீணாக்கக் கூடாது என்பார்கள். அதைப் போலவே உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் உங்களுக்கு ஒரு அறிவுரை கூற விரும்புகிறேன். கிடைக்கின்ற ஒரு சொட்டு தண்ணீரைக் கூட நீங்கள் வீணாக்கக் கூடாது. மழை பெய்தால் அந்த மழை நீரை நீங்கள் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும். இனி வரும் காலங்களில் இதை விட கடுமையான வறட்சி காலங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆகவே மழை பெய்தால் அதைப் பொக்கிஷமாகக் கருதி நீங்கள் ஒரு சொட்டு தண்ணீரைக் கூட வீணாக்காமல் அதை சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். மழைநீர் சேகரிப்பு அமைப்பை எனது வீட்டிலேயே சென்னையில் நான் ஏற்படுத்தி உள்ளேன். அதைப் போலவே நீங்கள்

## நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்கு அரசினுடைய பல்வேறு நலத்திட்ட உதவிகள் வேகமாகச் சென்றடைய வேண்டும் என்பதில் எனக்கு எப்போதுமே மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் உண்டு. எனது எண்ணத்தை ஈடேற்றுகின்ற வகையில் இன்றைய தினம் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஏறத்தாழ 19,078 பேருக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மொத்தம் 16 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்குவதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

இன்றைய தினம், வேளாண்மைத் துறையின் சார்பாக 175 பயனாளிகளுக்கு மானிய உதவிகளோடு, வேளாண்மைக் கருவிகள் 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படுகின்றன. நகர்ப்புற சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், வங்கிக் கடனாக 636 பயனாளிகளுக்கு 9 இலட்சம் ரூபாய் நிதியுதவியும் – மாவட்டத் தொழில் மையத்தின் சார்பில் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 622 பயனாளிகளுக்கு 3 கோடியே 9 இலட்சம் ரூபாய்

மழைநீர் சேகரிப்பு அமைப்பை எனது வீட்டிலேயே சென்னையில் நான் ஏற்படுத்தி உள்ளேன். அதைப் போலவே நீங்கள் அனைவரும் உங்கள் இல்லங்களில், நீங்கள் பணி செய்யும் இடங்களில் இந்த மழைநீர் சேகரிப்பு அமைப்பை உடனடியாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

நிதியுதவியும், வழங்குவதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைய தினம் நான் திறந்து வைத்துள்ள திருமுல்லைவாயில் மகளிருக்கான தொழில் பூங்காவில், மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளை முதற் கட்டமாக 113 பெண் தொழில் முனைவோருக்கு, 3 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்குவதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். மாவட்ட மறுவாழ்வுத் துறையின் சார்பில், 54 பேருக்கு மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி, ஊன்று கோல்கள், காதொலிக் கருவிகள் ஆகியவை 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படுகின்றன.

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த மகளிருக்கு சுழல் நிதியாக, 8,258 பேருக்கு, 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் நிதியுதவியும் – கடனுதவியாக 1,005 மகளிருக்கு 1 கோடியே 7 இலட்சம் ரூபாய் நிதியுதவியும் வழங்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இவை மட்டுமன்றி வருவாய்த் துறையின் சார்பில், 1,000 பேருக்கு, 29 இலட்சம் ரூபாய் செலவில், முதியோர் உதவித் தொகை, வீட்டுமனைப்பட்டா, விபத்து நிவாரணத் திட்ட நிதியுதவி ஆகியவையும் – தாட்கோ நிறுவனத்தின் சார்பில் 1,069 பேருக்கு. 86 இலட்சம் ரூபாய் மதிப்பில் கடனுதவியும் – கூட்டுறவுத் துறையின் சார்பில் மகளிருக்கான சிறு வணிகக் கடன், உழைக்கும் மகளிர் கடன், உழவு எந்திரக் கடனுதவி என 249 பேருக்கு, 36 இலட்சம் ரூபாய் மதிப்பில், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட உள்ளன என்பதை மட்டற்ற மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை மட்டுமன்றி, சமூக நலத் துறையின் சார்பில், 490 பெண்களுக்கு, 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இலவச தையல் இயந்திரங்கள், பெண் குழந்தைகள் பாதுகாப்பு நிதி, கலப்புத் திருமண உதவித் திட்ட நிதி, ஏழை விதவை மகள் திருமண உதவித் திட்ட நிதி என பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டப் பயன்களை, இந்த மாவட்டத்து மக்களுக்கு அர்ப்பணித்துக் கொள்வதில், நான் எல்லையில்லா மன நிறைவு அடைகின்றேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெறுகின்ற பயனாளிகள், இவற்றை அடிப்படையாக வைத்து, தாங்கள் ஏற்கெனவே செய்து வருகின்ற தொழில்களை மேலும் சிறப்போடு செய்து, தங்கள் வாழ்வில் மென்மேலும் நலமும் வளமும் பெற்றிட வேண்டுமென்று உங்கள் அத்தனை பேருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாள் ராமபிரான் ஆற்றங்கரையில் நின்று கொண்டிருந்தாராம். அவரது கையில் கோதண்டம் என்ற அவரது வில் இருந்தது. தரையில் ஊன்றிய வில்லுக்குக் கீழே தவளை ஒன்று தவித்துக் கொண்டிருந்தது; துடித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த ராமன், "நான் வில்லை உன் மீது ஊன்றும் போதே கத்தியிருக்கலாம் அல்லவா? ஏன் கூக்குரல் எழுப்பவில்லை?" என்று கேட்டாராம். அதற்குத் தவளை பதில் சொன்னதாம், "ராமா, யாராவது எனக்குத் தீங்கு செய்தால் ராமா! ராமா!! என்று நான் கூக்குரலிடுவேன். அந்த ராமனே தீங்கு செய்தால், நான் யார் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவேன்?" என்று சொன்னதாம் அந்தத் தவளை. இதைக் கேட்டு ராமர் உள்ளம் உருகினார்; தவறு செய்து விட்டோமே என்று மனம் துடித்தார். தெரியாமல் செய்துவிட்ட ஒரு தவறுக்கு கடவுளே கலங்கிக் கண்ணீர் விட்டதாகக் கதை கூறுகிறது.

ஆனால், இன்றைக்குக் கதையே வேறு! சில தவளைத் தலைவர்கள் ராமனை என்ன கிருஷ்ணனையே பலியாக்கி விட்டு, ஒன்றும் தெரியாதவர்கள் போல் ஒப்பாரி வைக்கிறார்கள்.

இந்த நிலைமையில் மக்கள் யாரிடம் முறையிடுவார்கள்?

ஆண்டவர்கள் தவறு செய்தால் –

ஆள்பவரிடம் தானே முறையிடுவார்கள்?

முன்பு ஆண்டவர்கள் தவறு செய்தால் –

இன்று ஆள்பவரிடம் தானே முறையிடுவார்கள்? இன்று ஆள்பவரிடம் தானே முறையிட முடியும்!!. ஆகவே, என்னிடம் வருகிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியது என் கடமை அல்லவா? நான் வாக்களித்த மக்களுக்கு மட்டுமா முதலமைச்சர்? வாக்களிக்காத மக்களுக்கும் நான் தானே முதலமைச்சர்? எனவே தான் பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் என்னிடம் வருகிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டியது, முதலமைச்சர் என்ற முறையில், எனது கடமை! இந்த அரசின் கடமை!!

எவ்வளவு இயலுமோ அவ்வளவு நன்மைகளை எத்தனை பேருக்குக் கொடுக்க முடியுமோ அத்தனை பேருக்குக் கொடுப்பது தான் மக்கள் நலம் பேணுகின்ற

ஒரு அரசின் கடமை. அதைத்தான் இந்த அ.இ.அ.தி.மு.க. அரசு செய்து வருகிறது! உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் செய்து வருகிறேன்!

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அறக்கட்டளை நிறைவேற்றுகின்ற இதயம் காப்போம் திட்டத்தைப் பற்றி இங்கே எனக்கு முன்பு பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். இதைப் பற்றி ஓர் உண்மையை உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிப்பவர்களுக்கோ, கழகத்தின் அனுதாபிகளுக்கு மட்டுமோ இந்தத் திட்டம் இல்லை. யார் வேண்டுமானாலும் உதவி பெறலாம். உதவி பெற்று வருகிறார்கள்.



ஓர் உண்மைச் சம்பவத்தை உங்களுக்குக் கூற விரும்புகிறேன். பல்வேறு மருத்துவமனைகளில் இந்த இதயம் காப்போம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தினால் பயன்பெற வேண்டும் என்று விரும்புபவர்கள் நேராகவே அந்த மருத்துவமனைகளுக்குச் சென்று, சம்பந்தப்பட்ட டாக்டரைப் பார்த்து, தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

அண்மையில் ஒரு பெரியவர் வந்தார். அவர் சென்னையில் உள்ள ஒரு பிரபல மருத்துவமனைக்கு வந்து, அங்கே இதயம் காப்போம் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற டாக்டரைப் பார்த்து, ஐயா, என் மகனுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். நான் உண்மையைச் சொல்லி விடுகிறேன். நான் திமுக காரன். என் மகனுக்குத்தான் இந்த அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். எனக்கே சொல்லிக் கொள்ள வெட்கமாக இருக்கிறது. என்ன செய்வது எங்கள் கட்சியில் இதுபோன்ற திட்டங்கள் இல்லை. நாங்கள் கேட்டாலும் எங்கள் தலைவர் செய்ய மாட்டார். உதவி புரிய மாட்டார். ஏதோ இந்த அம்மா செய்து கொண்டிருக்கிறார். ஆகவே என் மகனை எப்படியாவது காப்பாற்றி ஆக வேண்டுமே என்று வெட்கத்தை விட்டு நான் உங்களிடம் கேட்க வந்திருக்கிறேன். உதவி கேட்டு வந்திருக்கிறேன் என்றார். அந்த டாக்டர் என்னை அணுகி இப்படி இவரே தன்னை திமுக காரர் என்று ஒப்புக் கொள்கிறார். அவருடைய மகனுக்கு இந்த அறுவை சிகிச்சை செய்யலாமா என்று என்னைக் கேட்டார். நான் சொன்னேன். அது ஒரு மனித உயிர். அதிமுகவா? திமுகவா? என்று நான் பார்க்கவில்லை. ஒரு மனித உயிரைக் காப்பாற்ற வேண்டும். அந்தச் சக்தியை ஆண்டவன் எனக்குக் கொடுத்திருக்கிறார் என்றால், தாராளமாகக் காப்பாற்றுவோம். ஆகவே நிச்சயமாக இந்த அறுவை சிகிச்சையை நீங்கள் செய்யலாம் என்று நான் அவரிடம் சொன்னேன். அந்த அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றது. அந்தப் பையனும் இப்போது, குணம் அடைந்திருக்கிறார் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை இன்றைய தினம், நானே பயனாளிகள் அனைவருக்கும் என் கையாலே கொடுக்க வேண்டும் என்று விரும்பினாலும் நேரம் குறைவாகவே உள்ள காரணத்தால் 15 பயனாளிகளுக்கு மட்டும் இந்த உதவிகளை நானே வழங்குகிறேன். இதர பயனாளிகள் அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும் இங்கே வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் அரசின் உயர் அதிகாரிகளும் இப்போதே உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெற்று பயனாளிகள் அனைவரும் தங்கள் வாழ்க்கையை உண்மை, உழைப்பு, உயர்வு, ஆகியவற்றின் வாயிலாக வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறி உங்கள் அனைவரின் வாழ்க்கையிலும் வளமும் செழுமையும் ஒருங்கே சேர்ந்திட வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

இத்தகைய மகத்தான முயற்சிகளுக்கு, என் அன்புக்குரிய திருவள்ளூர் மாவட்ட மக்களாகிய நீங்கள் என்றென்றும் துணை நிற்க வேண்டும் என்று இந்த நல்ல வேளையில், உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விழாவை, சீரும் சிறப்புமாக நடத்திக் கொண்டிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சந்திரமோகன், இ.ஆ.ப., அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். ★



# திருக்குறள் – வாழ்க்கைக்கு வழிகாட்டும் சிறந்த புத்தகம்

□ மேதகு குடியரசுத் தலைவர்
டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம்

"இங்கு நடக்கும் இந்த நிகழ்ச்சி ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்பு நான் இன்டர்நெட்டில் 151 ஆண்டுகளாக ஒரு அருங்காட்சியகம் சென்னையில் வளர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

8 மணிக்கு பார்க்க ஆரம்பித்த நான் 2 மணி நேரம் அதாவது 10 மணி வரை இன்டர்நெட்டில் சென்னை அருங்காட்சியகத்தின் அருமை, பெருமைகளைப் பார்த்தேன். பார்க்கும்போது சென்னை அருங்காட்சியகத்தில் 8 காலரிகள் இருப்பதையும் பார்த்தேன். இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது.

சென்னை அருங்காட்சியகத்தைப் பார்த்த பிறகு என்னுடைய மனதில் இரண்டு ஆசைகள் எழுந்தன. இதே ஊர் அருகில் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருக்கிறார். சிலர் அவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தார் என்றும் வேறு சிலர் அவர் 2,200 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தார் என்றும் கூறுகின்றனர்.

அவர் திருக்குறளை ஓலைச் சுவடிகளில் எழுதினார். இவ்வாறு அவர் எழுதிய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உள்ள ஓலைச்சுவடிகளைப் பார்க்க முடியுமா? அவைகளைப் பார்க்க வேண்டும் இதுதான் என்னுடைய முதல் ஆசையாகும். நான் கொண்ட இந்த ஆசை நல்ல ஆசைதானே?

சிலர் சொல்லுகிறார்கள் திருவள்ளுவர் எழுதிய திருக்குறள்கள் அடங்கிய ஓலைச்சுவடிகள் காலத்தோடு கரைந்துவிட்டது என்று கூறுகிறார்கள். நான் ஏராளமான புத்தகங்களை, காப்பியங்களைப் படித்துள்ளேன். ஆனால் திருக்குறளைவிட சிறப்பான ஒரு புத்தகத்தை நான் படித்ததில்லை. பார்த்தது இல்லை. திருக்குறள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் சிறந்த புத்தகம்ஆகும்.

**அருங்காட்சியகங்கள் ஒரு நாட்டின் பண்பாடு, கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் ஜன்னல்கள் ஆகும். புதிய சிந்தனைகளை உருவாக்கும் பொக்கிஷங்களாக அருங்காட்சியகங்கள் விளங்குகின்றன.**

திருக்குறளில் உள்ள 1,330 குறள்களையும் நான் படித்துள்ளேன். ஒரு தடவை அல்ல. பல தடவைகள் படித்துள்ளேன்.

இந்தக் குறள்களில் என் சிந்தையை கவர்ந்த குறள் ஒரு குறள் ஆகும். அந்த சிறந்த குறளை சொல்லுகிறேன்.

"வெள்ளத்து அனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு"

இந்தக் குறள்தான், எனக்கு வழிகாட்டி எனக்கு அச்சாணி. என் வளர்ச்சிக்கும் இந்தக் குறள் தான் காரணம்.

திருவள்ளுவர் எந்த குலம் ? எந்த நாடு ?எந்த மதம்? என்று தன்னைப் பற்றி அவர் குறிப்பிடவில்லை. அவர் உயர்ந்த மனிதர். தற்போது நம்முடைய நாட்டில் மதத்துக்கும், குலத்துக்கும் போட்டி போட்டு சண்டை நடக்கிறது.

திருவள்ளுவர் அப்போது வாழ்ந்த தமிழகம் எப்படி இருந்தது ? எந்த மதம் ? எப்படிப்பட்ட சமூக அமைப்பு இருந்தது? அதை ஆராய்ச்சி செய்ய வேண்டும். அவரது உள்ளத்தைப் படம் பிடிக்க வேண்டும்.

திருவள்ளுவர் எழுதிய ஒலைச் சுவடிகளை கண்டுபிடிக்க முடியும், இவற்றை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்க வேண்டும்.இது என்னுடைய இரண்டாவது ஆசை. நான் கொண்ட இந்த ஆசையும் நல்ல ஆசைதானே ? இந்த அருங்காட்சியகமும், மற்ற அருங்காட்சியகங்களும் சேர்ந்து ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

தஞ்சை பெரிய கோவிலை எப்படிக் கட்டினார்கள் ? கட்டிய நிபுணர்கள் யார் ? தென் இந்தியாவில் உள்ள பல தொன்மையான நினைவுச் சின்னங்கள், பழமை வாய்ந்தகோவில்களைக் கட்டி இருக்கிறார்கள், இதை எப்படிக் கட்டினார்கள் ? என்று ஆராய்ச்சி நடத்த வேண்டும்.

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கணினி நூலகம் கொண்டுவரவேண்டும்.

இந்த அருங்காட்சியகத்தை மக்கள் அதிக அளவில் பார்த்துப் பயன் அடையக் கூடிய விதத்தில் மேம்படுத்தவேண்டும்.

அருங்காட்சியகங்கள் நம்முடைய தொன்மை யான பண்பாடு, கலாச்சாரத்துக்குப் புதிய உயிர் கொடுக்கும் பொக்கிஷங்களாகும்.

பழைய காலத்தில் மண்பானைகளை நம்முடைய முன்னோர்கள் பயன்படுத்தினார்கள். அவைகள் இன்று அருங்காட்சியகத்தில் அபூர்வப் பொருள்களாக உள்ளன. இந்தப் பொருள்களைப் பார்க்கும்போது அப்போது அவர்கள் எப்படிச் சுற்றுப்புறச் சூழலுக்குத் தகுந்தவாறு பொருட்களைப் பயன்படுத்தினார்கள் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

**சிற்பக்கலை**

சிற்பக் கலைகளை வளர்க்க சிற்பிகளுக்கு சிறப்பு முகாம்களை நடத்த வேண்டும். இது அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

அருங்காட்சியகங்கள் ஒரு நாட்டின் பண்பாடு, கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் ஜன்னல்கள் ஆகும். புதிய சிந்தனைகளை உருவாக்கும் பொக்கிஷங்களாக அருங்காட்சியகங்கள் விளங்குகின்றன.

பழங்கால தொழில்நுட்பத்துடன் தற்கால தொழில்நுட்பத்தை சேர்த்து புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கவேண்டும்".

*19.6.2003 அன்று நடைபெற்ற சென்னை அருங்காட்சியகத்தின் 151ஆவது ஆண்டு நிறைவு விழாவில் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...*

# அறிவு வளர்ச்சிக்கு ஆக்கப் பூர்வமாக செயலாற்றும் சென்னை அருங்காட்சியகம்

மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்



சென்னை அரசு அருங்காட்சியகத்தின் 151ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இன்று நடைபெறும் விழாவில் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அருங்காட்சியகம் கடந்த 1851ஆம் ஆண்டு அப்போதைய சென்னை மாகாணத்தின் மத்திய அருங்காட்சியகமாகத் தொடங்கப்பட்டது. தென்னிந்தியாவிலேயே மிகவும் பழமையான, பெரிய அருங்காட்சியகம் இதுதான் என்பதை இங்கு நினைவுகூற விழைகிறேன். கடந்த 1951ஆம் ஆண்டு இந்த சென்னை அருங்காட்சியகத்தின் நூற்றாண்டு விழாவில் மறைந்த முன்னாள் பாரத பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்கள்.

50 ஆண்டுகளுக்கு பின்னர் தற்போது நடைபெறும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க விழா, குடியரசுத்தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விழாவிற்குத் தலைமை வகிக்குமாறு நான் விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டதற்காக தமிழக மக்களின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## சுற்றுலாவிற்கு ஏற்ற இடமாக மாற்றம்

சென்னை மாநகரம் 360 ஆண்டுகால பழமையான வரலாற்றைக் கொண்டது. மேலும் இங்குள்ள இந்த அருங்காட்சியகம் சுமார் 150 ஆண்டுகளுக்கு மேலான பழங்காலச் சிறப்புகளைக் கொண்டது என்பது




குறிப்பிடத்தக்கது. சென்னை மாநகரை மேம்படுத்துவதற்காக என்னிடம் சில திட்டங்கள் உள்ளன. சென்னை பழங்காலத்தில் தென்னிந்தியாவிலேயே முதன்மையான நகரமாக விளங்கியது. அந்த நிலையை மீண்டும் கொண்டுவருவதுடன் உலகிற்கு இந்தியாவின் கிழக்கு நுழைவு வாயிலாக சென்னையை மாற்றியமைப்பதுடன், பண்பாடு, அறிவு, மரபு, நவீனமயம் மற்றும் இயற்கையான முதலீடு மற்றும் சுற்றுலாவிற்கு ஏற்ற இடமாக மாற்றியமைக்கவும் திட்டமிட்டு வருகிறோம். இத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக நாங்கள் நடவடிக்கைகள் எடுத்து வரும் நிலையில் சென்னை அருங்காட்சியகம் அதற்கே உரித்தான பாரம்பரிய பெருமைகளுடன் இத்துறையில் பன்னாட்டு அளவில் புகழ்பெற்று விளங்குவதோடு இங்கு வருகை புரியும் ஒவ்வொருவரும் கண்டு களிக்கும் வகையில் சுமார் 80,000 விலை மதிப்பற்ற கலைப் பொருட்களை கொண்டுள்ளது.

மார்க்ரெட் மேட் என்கிற பெருமைமிக்க மனித இயல் அறிஞர், புதிய ஆற்றல்களும் ஒவ்வொரு நாளும் எழுகின்ற பிரச்சினைகளை சமாளிக்கும் சிந்தனை வளமும் நிறைந்த துடிப்பாற்றல் மிக்க மாநகரத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, "ஒரு மாநகரம் ஆன்மா கொண்டதாக இருக்கவேண்டும் – அதாவது பல்கலைக்கழகம் மாபெரும் கலை அல்லது இசைப்பள்ளி, கிருத்தவ தேவாலயம், பள்ளிவாசல் அல்லது ஆலயம், ஆராய்ச்சிக் கூடம் அல்லது அறிவியல் மையம் – மேலும் நூலகங்கள், அருங்காட்சியகங்கள், பார்வையாளர் படி அடுக்கு ஆகியவற்றைப் பெற்றிருக்கவேண்டும்" என்று குறிப்பிடுகின்றார். சென்னை மாநகரம் இத்தகைய அம்சங்களையும் ஆத்மாவையும் பெற்றுள்ளது.

சென்னை அருங்காட்சியகத்தில் கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், இளம் உள்ளங்களையும் புதிய ஆற்றல்களையும் ஒருங்கிணைக்கும் – ஒன்று சேர்க்கும் வளர்ச்சிக்கான ஆற்றல் இருப்பதையும் சென்னை மாநகரின் ஆன்மாவின் ஒரு பகுதியாக அது விளங்குவதையும் காண்கிறேன்.

### இளைஞர்களின் திறமையை வளர்க்கும் மையம்

சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள வசதிகள், இளைஞர்களிடம் புதிய திறமைகளை உருவாக்கி வளர்க்கும் வகையில் அமைந்துள்ளது. கடந்த காலம் மற்றும் நிகழ்காலம் குறித்த பல்வேறு தகவல்கள் இங்கே ஒருங்கே அமையப்பெற்றுள்ளன. பொதுவாக அருங்காட்சியகத்திற்குச் செல்வது நேரத்தை வீணடிப்பது அல்லது ஏதோ ஒரு இருண்ட இடத்திற்குச் செல்வது போன்ற எண்ணங்கள் தான் மேலோங்கி உள்ளன. நம் மக்களும் அத்தகைய எண்ணத்தைத்தான் கொண்டுள்ளார்கள். சுற்றுலாப் பயணிகளுக்கும் மற்றும் சுற்றுலா செல்பவர்களுக்கும் இதே எண்ணம் தான் உள்ளது.

இதனை மாற்றி அமைக்கும் வகையில் அருங்காட்சியகத்திற்கு மக்கள் விரும்பிச் சென்று அதனைக் கண்டு, அதில் புதைந்துள்ள ஏராளமான பழங்கால வரலாற்றுச் சிறப்புமிக்க தகவல்களைத் தெரிந்து கொள்ளும் வகையில், அதனை மாற்றி அமைக்கும் வகையில் ரூ.4.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அங்குள்ள அருங்காட்சியக அரங்கம், அருங்காட்சியகத்தின் சுற்றுச்சுவர் ஆகியவற்றின் பழமை வாய்ந்த தன்மை மாறாமல் புதுப்பித்து அழகுபடுத்தியதுடன் அங்குள்ள சில அரங்குகளில் நவீன தொழில்நுட்ப உதவியுடன் ஒளி அமைப்பு செய்து, சிறப்பாக முப்பரிமாண கூடங்களும் அமைக்கப் பட்டுள்ளன.

இந்த அருங்காட்சியகத்தில் உள்ள பாறை ஓவியங்கள், குகை ஓவியங்கள் உள்ளிட்ட புராதான சின்னங்கள் அவற்றிற்குரிய இயல்புடன் பராமரிக் கப்பட்டு வருகின்றன. மேலும் தொடுதிரை வசதியுடன் கூடிய விளக்கப்பலகையும் இங்கே வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே இதுபோன்ற தொடுதிரை வசதி விளக்கப்பலகை இங்கு தான் முதல்முறையாக வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இங்குள்ள ஹாலோகிராபிக் அரங்கில் பல்வேறு வகையான அ ரிய வெண்கலத்தினாலான நகைகள், நாணயங்கள் மற்றும் பல்வேறு வகையான அரிதான ஓவியங்கள் பாதுகாக்கப்பட்டு மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

> "தமிழகத்தை இந்தியாவில் முதன்மை மாநிலமாக அனைத்து துறைகளிலும் உருவாக்க வேண்டும் என்பதே என்னுடைய இலட்சியக் கனவாகும். என்னுடைய இந்த கனவை நனவாக்கும் செயல்திட்டங்களில் ஒன்றாக இந்த அரசு அருங்காட்சியகத்தை பன்னாட்டுத் தரத்திற்கு உயர்த்த நான் முயற்சி மேற்கொண்டுள்ளேன்".

குடியரசுத் தலைவர் தமிழ்நாட்டில் தொழில்துறை மற்றும் கைவினைப்பொருட்களின் வளர்ச்சி குறித்து கண்காட்சி அமைக்கப்பட வேண்டும் என்று யோசனை தெரிவித்தார். அவரது ஆலோசனைக்கு ஏற்ப தொழில் மற்றும் கைவினைத் துறையில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் குறித்து அரங்கம் ஒன்று அமைக்கப்படும். வரலாற்றின் முந்தைய காலத்திலிருந்து தற்போதைய நவீன காலம் வரை அதாவது சோழர் காலத்தின் புகழ் பெற்ற மெழுகு தொழில்நுட்பம் முதல் தற்போதைய அச்சுவார்த்தல் தொழில்நுட்பம் வரையிலான தமிழகத்தின் தொழில் மற்றும் கைவினைப் பொருட்கள் வளர்ச்சி பற்றிய வரலாற்றை எடுத்துக்காட்டும் காட்சிப்பெட்டி இந்த அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### குழந்தைகள் அறிவியல் பூங்கா

இந்த அருங்காட்சியகத்தில் குழந்தைகள் அருங்காட்சியகம் அருகே அறிவியல் பூங்கா ஒன்று அமைக்கப்படும். மேலும் இங்கு திறந்தவெளி அறிவியல் அரங்கு ஒன்று அமைக்கப்படும். இந்த திறந்தவெளி அரங்கில் வைக்கப்படும் அறிவியல் சம்பந்தப்பட்ட காட்சிப் பொருட்கள் குழந்தைகள் மத்தியில் அறிவியல் ஆர்வத்தையும் விருப்பத்தையும் உருவாக்கும்.

இந்த அருங்காட்சியகம் குழந்தை களின் மனதில், அறிவியல் சம்பந்தமாக எழும் கேள்விகளுக்கு விடையளிக்கக் கூடிய ஒரு ஊடகமாக ஒளிவிளக்காக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இங்குள்ள தேசிய கலைக் கூடத்தை புதுப்பிப்பதற்காக ரூ.6 கோடி மதிப்பீட்டிலான ஒரு செயல்வரைவுத் திட்டத்தை மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்ப இருக்கிறோம். மத்திய அரசு இத்திட்டத்திற்கு ஒப்புதல் தரும் என்று நான் நம்புகிறேன்.

வரலாறு, கடந்த கால மனிதர்களின் செயல்பாடுகள், உறவு முறைகள் சமூக அமைப்பில் எவ்வாறு இருந்தன என்பதையும் சித்தரிக்கின்றன. கடந்த கால நிகழ்ச்சிகளையும் நடவடிக்கைகளையும் தெரிவிப்பதுடன் அவற்றின் விளைவுகளும் செயல்பாடுகளும் தனிப்பட்ட முறையிலும் மற்றும் சமூக ரீதியாகவும் எப்படி இருந்தன என்பதையும் நமக்கு போதிக்கின்றது.

"மக்கள் நிறுவனங்கள், சிந்தனைகள் போன்றவை ஒரு நிலையிலிருந்து மற்றொரு

> "இந்த அருங்காட்சியகத்தில் குழந்தைகள் அருங்காட்சியகம் அருகே அறிவியல் பூங்கா ஒன்று அமைக்கப்படும். மேலும் இங்கு திறந்தவெளி அறிவியல் அரங்கு ஒன்று அமைக்கப்படும். இந்த திறந்தவெளி அரங்கில் வைக்கப்படும் அறிவியல் சம்பந்தப்பட்ட காட்சிப் பொருட்கள் குழந்தைகள் மத்தியில் அறிவியல் ஆர்வத்தையும் விருப்பத்தையும் உருவாக்கும்".

நிலைக்கு மாறும் மகத்தான மாற்றம் மற்றும் அதன் விளைவாகவும், மாற்றத்திற்கான கருவியாகவும் வரலாறு கருதப்படுகின்றது" என்று ஜி.ஆர்.எல்டான் என்ற வரலாற்றாசிரியர் குறிப்பிடுகின்றார்.

வரலாறு சமூகத்திலுள்ள மக்கள், நிறுவனங்கள், எண்ணங்கள் ஆகியவற்றை பற்றிய தகவல்களை சமமான அளவில் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு தெரிவிக்கின்றது. வரலாற்றைப் படிப்பது என்பது உண்மையைத் தேடுவதற்குச் சமமானதாகும். அந்த வகையில் மதிப்பிட முடியாத அளவிலான ஏராளமான உண்மைகளின் தொகுப்பாக சென்னை அருங்காட்சியகம் விளங்குகின்றது. பழங்காலத்தில் மக்களுடைய வாழ்க்கை முறை என்ன் என்பதை அறிந்துகொண்டு தற்போது நாம் எவ்வாறு வாழ்ந்து வருகிறோம் என்பதைப் புரிந்துகொண்டு எதிர்காலத்தில் என்ன நிலையை நாம் அடைவது என்பதைத் தீர்மானிப்பதற்கு இந்த அருங்காட்சியகம் வழிகாட்டியாக உள்ளது.

### மனித நாகரிகத்தை தெரிந்து கொள்ள உதவவேண்டும்

அருங்காட்சியகங்கள் குறிப்பாக இளைஞர்களிடையே கலந்துரையாடல்களுக்கு வகை செய்யும் வகையில் செயல்பட வேண்டும். அருங்காட்சியகங்கள் மனித நாகரிகத்தைப் பற்றி தெரிந்து கொள்ள உதவவேண்டும். எதிர்கால மனித சமூகத்திற்கு நம்முடைய பங்களிப்பை அளிக்கும் வகையிலும் அதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சென்னை அருங்காட்சியகம் மதிப்பு மிக்க பல ஆராய்ச்சிகளை செய்துள்ளது. மேலும் கல்வி ஆராய்ச்சிக்குத் தேவையான பல்வேறு புத்தகங்களை வெளியிட்டுள்ளது. இன்று இது தொடர்பான புத்தகங்களையும், ஒளிநாடாக்களையும் வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். நம்முடைய கலை மற்றும் கலாச்சாரம் நமது பழங்கால சிறப்புகள் ஆகியவற்றை இன்றைய இளைய சமுதாயம் தெரிந்துகொள்வதற்கு இந்த அருங்காட்சியகம் உதவும். இந்த வெளியீடுகள் நம்முடைய பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை அறிவதற்கான ஆர்வத்தை மக்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே தூண்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழகத்தை இந்தியாவில் முதன்மை மாநிலமாக அனைத்து துறைகளிலும் உருவாக்க வேண்டும் என்பதே என்னுடைய லட்சியக் கனவாகும். என்னுடைய இந்தக் கனவை நனவாக்கும் செயல்திட்டங்களில் ஒன்றாக இந்த அரசு அருங்காட்சியகத்தை பன்னாட்டுத் தரத்திற்கு உயர்த்த நான் முயற்சி மேற்கொண்டுள்ளேன்.

### எதிர்காலத்தை நிர்ணயிக்கும் புதிய கருத்துக்களை உருவாக்க வேண்டும்

தற்போது தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள மாபெரும் வளர்ச்சி அறிவுக்கு தொழில் அந்தஸ்து வழங்கியுள்ளது. விவேகத்தின் அடிப்படையாக அமைந்து வருகிறது. இந்த அருங்காட்சியகம் அறிவு வளர்ச்சிக் கூடமாக மட்டுமன்றி பொழுது போக்கு அம்சங்கள் கொண்ட மையமாகவும் அமைய வேண்டும். இந்த அருங்காட்சியகம் நம்முடைய மக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஆக்கப்பூர்வமான பணிகளைத் தொடர்ந்து ஆற்ற வேண்டும்.

இந்த அருங்காட்சியகம், கடந்தகாலமும், நிகழ்காலமும் ஒருங்கிணைந்து எதிர்காலத்தை நிர்ணயிக்கும் புதிய கருத்துக்களை, எண்ணங்களை உருவாக்க வேண்டும். இந்த அருங்காட்சியகம் எல்லா வகையிலும் வளர்ச்சி அடைந்து 200ஆவது ஆண்டு நிறைவு விழாவை சீரும்சிறப்புமாகக் கொண்டாட வேண்டும். அப்போதும் உலகப் புகழ் பெற்ற நிறுவனங்களில் ஒன்றாக விளங்க வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்து எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

*19.6.2003 அன்று நடைபெற்ற சென்னை அருங்காட்சியகத்தின் 151ஆவது ஆண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.*

# சென்னை, அரசு அருங்காட்சியகம் ஆற்றிவரும் அரும் பணிகள்

உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகங்களுள் சென்னை, அரசு அருங்காட்சியகமும் ஒன்றாகும். கி.பி.1851ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற அரசு அருங்காட்சியகத்தில் மனித குல வளர்ச்சி இயல், தொல்பொருள்துறை, கலை, நாணயவியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் நிலவியல் பகுதிகளில் பல்வேறுபட்ட காட்சிப் பொருள்களைத் தொகுத்து வைத்துள்ளனர். மேலும் இதன் மற்றொரு பகுதியாக, தொல்பொருள் பாதுகாப்புக்குரிய வேதியியல் பாதுகாப்புப் பகுதி 1930ஆம் ஆண்டு இக்காட்சியகத்தில் இணைக்கப்பட்டது. தேசியக் கலைப் பொருட்காட்சியகத்தின் இணைப்பாக, சமகாலக் கலைக்காட்சியடுக்கம் என்ற பெயரில் ஒரு பகுதி 1984ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1988ஆம் ஆண்டில் குழந்தைகள் அருங்காட்சியகம் ஒன்றை தனியே எடுத்தமைத்துள்ளனர்.

1951ஆம் ஆண்டில் அருங்காட்சியகம் தன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியபோது, நம் முதல் பாரதப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் பங்கேற்று, நூற்றாண்டு விழாச் சிறப்பு நிகழ்ச்சிகளைத் துவக்கி வைத்தார்கள். சென்னை, அரசு அருங்காட்சியகம், அருங காட்சியக இயலின் முன்னணியில் எப்போதும் இருந்துள்ளது. உலகப் புகழ் பெற்ற தென்னிந்தியச் செப்புப்படிமங்கள், சிற்பங்கள், தஞ்சைப் படைக்கலக்கொட்டில், கல்வெட்டுக்கள், தாமிரப் பட்டயங்கள் ஆகியவை இந்த அருங்காட்சியகத்தின் தனிப்பட்ட சிறப்புடைய சேகரிப்பாகும். தவளேஸ்வரத்தில் வைக்கப்பட்ட, முதல் இராஜராஜ சோழன் காலத் தங்க நாணயங்கள், செங்கத்தில் வைக்கப்பட்ட செப்புக் காசுகள், ஆதிச்ச நல்லூர் எழுத்துப் படிவங்கள் புரூஸ்புட் தொகுப்பாகிய வரலாற்றுக்கு முற்பட்ட கல் படிவங்கள் மற்றும் பாண்டிச்சேரிக்கு அருகிலிருந்த அரிக்காமேட்டினைச் சேர்ந்த கலை மெய்ப்புகள், "பட்டிப்பு ரோலு" தூணிலிருந்த தனித் தன்மை வாய்ந்த படிகங்கள் மற்றும் கடற் சுறா மீனின் பெரிய எலும்புக்கூடு ஆகியவை இக்காட்சியகத்தின் குறிப்பிடத்தக்க சேகரிப்புகளாகும்.



இந்த 2003ஆம் ஆண்டின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி வரிசையில் அருங்காட்சி-




யகத்தின் 151–ஆம் ஆண்டு விழாவையொட்டி, செப்புக் காட்சியடுக்கு, சமகாலக் கலைப் பொருட்காட்சியடுக்கு மற்றும் நாணயவியல் காட்சியடுக்கு ஆகியவை நவீனப்படுத்தப்பட்டு காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. மேலும், வேதியியல் பாதுகாப்புக் காட்சியடுக்கும் புத்தம் புதிய தொழில்நுட்பத்துடன் நவீனப்படுத்தப்பட்டுக் காட்சிக்குப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன.

அருங்காட்சியகத்தின் நூற்றாண்டுப் பழமைபெற்ற உள்ளரங்கம் மீண்டும் புதியதாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வரங்கம் இலண்டன் நகரின் 'குளோப்' தியேட்டரின் மாதிரியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உலகின் மிகச்சிறந்த செப்பு அரும்பொருள் சேகரிப்பைக் கொண்ட செப்புக் காட்சியடுக்கு, நாணயவியல் காட்சியடுக்கு மற்றும் பழமைப் பாதுகாப்பு அடுக்கு ஆகியவை புதிய தொழில்நுட்பத்துடன் நவீனப்படுத்தப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மீண்டும் புதியதாக்கப்பட்ட சமகால அருங்காட்சியடுக்கில், காலந்தோறும் முன்னேறி வளர்ச்சிபெற்ற தமிழகத்தின் தொழில் மற்றும் கைவினைப் பொருள்களின் சிறப்பு ஏற்றுமதிக் காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் காட்சியடுக்கிலும், புதுதொழில்நுட்பத்துடன் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கணினி உதவி பெற்ற வடிவமைப்புகள் முப்பரிமாணம் பெற்ற மாதிரிகள் ஆகியவற்றால் இக்காட்சியடுக்கங்கள் வடிவமைக்கப்பட்டன. அருங்காட்சியமைப்புலகின் வரலாற்றிலேயே, இத்தகைய தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது இங்கு மட்டுமேயாகும். மேலும், இங்கு மலை மற்றும் குகை அருங்காட்சியடுக்கு தொடங்கப்படுகிறது.

பற்பல புத்தகப் பதிப்புகள் உலகத்தரம் வாய்ந்த புகைப்படம் மற்றும் அச்சுத் தொழில்நுட்பத்துடன் வெளிக் கொணரப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கான அறிவியல் பூங்கா தொடங்கப்படவுள்ளது. பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தின் ஓவியங்கள் மற்றும் காட்சிப் பொருள் பாதுகாப்பு முறை சமகாலக் கலைப் பொருட்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவை இந்திய அருங்காட்சியகங்களில் முதன்முறையாக அமைந்துள்ளன. இராஜா ரவிவர்மாவின் ஓவியங்கள், கண்ணாடி இழை ஒளியுடன் தனிப்பட்ட அடுக்காக ஒளி–யூட்டப்படுகிறது. இந்திய அருங்காட்சியகங்களில் இங்கு மட்டுமே முதன்முறையாக இது தொடங்கப்படுகிறது. பன்னாட்டுத்தரத்துக்கு இணையாக இந்த அருங்காட்சியக வளாகமே, ஒளிவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

மனிதகுலம் பயன்பெறும் வகையில் அரசு அருங்காட்சியகத்துறை, சமீபகாலத் தொழில்நுட்ப உதவியுடன், தொல்பொருள்களைப் பாதுகாத்து, வளர்ச்சியுறச் செய்வதில் இயன்ற வகையில் நன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ★




# தொழில் வளர்ச்சிக்கு நல்ல தருணம்

- மாண்புமிகு முதல்வர் அவர்கள்

"மாநிலங்களில் உள்ள வர்த்தக தொழில் சங்கங்களின் மத்திய அமைப்பான இந்திய வர்த்தக தொழில் சங்கங்களின் கூட்டமைப்பின் தேசிய குழு கூட்டத்தில் கலந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த முக்கியமான கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள எல்லா பிரதிநிதிகளையும் தமிழக அரசு சார்பில் வரவேற்கின்றேன். இந்தக் கூட்டமைப்பு கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதில் 500க்கும் மேற்பட்ட வர்த்தக தொழில் சங்கங்கள் இணைந்துள்ளன.

**மாநிலத்தை கட்டமைப்பதில் முந்தைய அரசு தவறியது**

இந்த புதிய புத்தாயிரமாண்டு பல புதிய வாய்ப்புகள், சவால்களுடன் தொடங்கியுள்ளது. இந்தியப் பொருளாதாரத்தில் தாராளமயமாக்கல் கொள்கை அறிமுகம் செய்து பத்தாண்டுகளுக்கும் மேலாகி விட்டது. சீர்தூக்கி சிந்தித்து வேகமான வளர்ச்சிக்கு புதிய முறையில் செயல்படத் துவங்க நல்ல தருணம் இது. உலகப் பொருளாதார பின்னடைவு, பருவ மழை பொய்த்தது. அதனால் வறட்சி ஏற்பட்டது. இந்தப் பிரச்சினைகள் நீங்கி நல்ல சூழ்நிலை மீண்டும் ஏற்பட உள்ளது. இதனால் வர்த்தகமும், தொழில்களும் மீண்டும் சிரமமின்றி செயல்பட வாய்ப்பு உருவாகி உள்ளது.

இந்தியாவில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கத் தெளிவான சிந்தனையுடன் செயல்பட்டு வருகின்றேன். நான் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு தமிழகத்தின் பொருளாதாரத்தைச் சீர்திருத்தப் பல வழிகளில் நடவடிக்கை எடுக்க வேண்டியதிருந்தது. முந்தைய தி.மு.க. அரசின் நடவடிக்கையால் மாநில பொருளாதாரம் சீர்குலைந்து இருந்தது. மாநிலத்தில் உள்கட்டமைப்பை, கட்டமைப்பு வசதியை உருவாக்க முந்தைய மாநில அரசு தவறியது. இதனால் பல மாநிலங்கள் தாராளமயமாக்கல் கொள்கையைப் பல ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி, மேம்பாட்டு நடவடிக்கையின்

பயன்களைப் பெறத் தொடங்கிவிட்டன. தமிழகத்தில் முன்பு இந்த நடவடிக்கை இல்லை. இதனால் நான் பொருளாதாரச் சீர்திருத்தத்தைக் கடுமையாக அமல்படுத்தி பொருளாதாரம் வளர்ச்சியை நோக்கி செல்வதற்கான நடவடிக்கையை எடுத்தேன். இதைக் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தான் செயல்படுத்தி வருகின்றேன். அதனால் தமிழகம், இந்தியாவிலேயே வளர்ச்சி அடைந்த மாநிலங்களில் முதல் இடத்தை மீண்டும் எட்டும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

மேலும் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகம் வளர்ச்சி அடையும் என்று உறுதியாக நம்புகின்றேன். நான் பல்வேறு பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகளை, பல்வேறு மட்டங்களில் எடுத்ததால், தமிழகத்தின் பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் மொத்த மதிப்பீடு 40 ஆயிரம் கோடி ரூபாயாகவும், நடப்பாண்டிற்கு 7 ஆயிரம் கோடி ரூபாயாகவும் ஒதுக்கீடு பெறப்பட்டது என்பதை அறிவீர்கள். தெளிவான வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டு உள்ளன. இந்த ஆண்டு திட்டத்தில் புதிய முதலீட்டை பெருக்கும் வகையில் உள் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு எடுக்கப் பட்டிருக்கும் நடவடிக்கைகளை வரவேற்பீர்கள்.

### வேளாண்மைத்துறையில் புதிய திட்டங்கள்

இந்தியா போன்ற மக்கள் தொகை அதிகமுள்ள நாட்டில் அடிப்படைக் கட்டுமானத் துறையான விவசாயத்துறை வளர்ச்சி பெறாமல் தொழில் வளர்ச்சி அடைய முடியாது. தொழில் துறையின் வளர்ச்சியைக் குறிப்பாகப் பொருள் உற்பத்தித் துறையின் வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். பருவமழை பொய்த்து, வறட்சி ஏற்பட்டதில் இருந்து மீண்டு வந்து, வேளாண்மைத்துறையில் 4 சதவிகித வளர்ச்சி அடைய வேண்டும் என்பது நமது இலக்காகும்.

இதைப் பற்றி தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் நடந்த பட்டமளிப்பு விழா உரையில் தெரிவித்துள்ளேன். எனது தலைமையிலான அரசு வேளாண்மைத் துறையில் ஒருங்கிணைந்த புதிய திட்டங்களான தோட்டக் கலைத் துறையின் வளர்ச்சி, பெட்ரோலியப் பொருளில் கலக்கும் எண்ணெய் உற்பத்தி செய்யும் மரங்களை வளர்த்தல், விவசாயத் துறையில் தொழில் நுட்பத்தைப் புகுத்துதல், தகவல் தொடர்பு வசதியை மேம்படுத்துதல், பணப் பயிர்களுக்கு மாறுதல் போன்றவற்றில் அக்கறை கொண்டுள்ளது. இதன் அடிப்படையில்தான் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளேன். இந்தத் திட்டங்கள் நன்கு செயல்பட இந்த ஆண்டு பருவமழை நன்கு பெய்யும் என்று நம்புவோம். விவசாயத் துறையில் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி, புதிய சந்தைக்குத் திறந்துவிட்டால், இதற்கு அபரிமிதமான வளர்ச்சி அடைய வாய்ப்புகள் உள்ளது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தித் தொழில் துறையில் சென்னையில் உள்ள நீங்கள் உங்களின் முதலீட்டுத் திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும். உள்நாட்டில் பொருள்களின் தேவையை அதிகரிக்கவும், இத்துறை வளர்ச்சி அடையவும் விவசாயத்துறைக்கு இடைவிடாத கவனம் தேவை. இதைத் தான் நான் செய்து வருகின்றேன்.

> **"இந்த ஆண்டு பட்ஜெட்டில் கூறியுள்ளதைப் போன்று உற்பத்தித்துறை வளர்ச்சியடையத் தேவையான சூழ்நிலையை உண்டாக்கி வருகின்றோம். இத்துறையில் முதலீடுகள் பெறுவதற்கும் வளர்ச்சிபெறவும் மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்".**

### உற்பத்தித் துறையில் வளர்ச்சி

எனது தலைமையிலான அரசின் இரண்டாம் தலைமுறை பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைப் பற்றி நான் ஏற்கெனவே சிலவற்றைக் கூறியுள்ளேன். இந்த சீர்திருத்தத்தால் உற்பத்தித்துறை பன்மடங்கு வளர்ச்சி பெறும். இந்த சீர்திருத்தத்தில் உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துவது, தடங்கலற்ற மின்சாரம் வழங்குவது, தொழில் தொடங்க அனுமதி பெறுவதை நீக்குவதன் மூலம் நேரத்தையும், செலவையும் மிச்சப்படுத்துவது, தற்போதுள்ள தொழிலாளர்களுக்கு மறு பயிற்சி அளிக்கும் வகையில் தொழிலாளர் நல சட்டத்தை மாற்றியமைப்பது, மாநில அளவில் உள்ள வரியை செலுத்த நடைமுறையை எளிமைப்படுத்துவது ஆகியன இதில் அடங்கும்.

இந்த ஆண்டு பட்ஜெட்டில் கூறியுள்ளதைப் போன்று உற்பத்தித்துறை வளர்ச்சி அடையத் தேவையான சூழ்நிலையை உண்டாக்கி வருகின்றோம். இத்துறையில் முதலீடு பெருகுவதற்கும் வளர்ச்சி பெறவும் மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கும், இதற்குத் தேவையான சீர்திருத்த நடவடிக்கையை நாங்கள் எடுக்கின்றோம். இதனால் தமிழகம் மிக அதிக முதலீடுகளைப் பெறுவதில் முன்னணி மாநிலமாக விளங்கும்.

## அதிக முதலீடு

தமிழகத்தில் உற்பத்தித்துறையின் வளர்ச்சிக்குச் சிறந்த வாய்ப்பு உள்ளது. இந்தியப் பொருளாதார ஆய்வு மையம் கடந்த மே மாதம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களில் இருந்து இது தெளிவாக தெரிகிறது. 2001–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முதலீடு ரூ.37 ஆயிரத்து 306 கோடியாக இருந்தது. இது இந்த ஆண்டு (2003) ஏப்ரல் மாதத்தில் ரூ. 54 ஆயிரத்து 559 கோடியாக வளர்ச்சி அடைந்துள்ளது. மற்ற எந்த மாநிலத்தையும் விட இது அதிகபட்ச வளர்ச்சியாகும். இந்தியாவில் மற்ற எந்த மாநிலத்தை விடவும் அதிக முதலீடு பெற்றுள்ளது. இதிலிருந்தே முதலீட்டிற்கான சூழ்நிலை பிரகாசமாக உருவாகி வருவதை நாம் அறிய முடியும்.

சர்வதேச தரத்திற்கு ஈடாக உள் கட்டமைப்பு வசதியை ஏற்படுத்துவதற்கு இரண்டாம் கட்ட சீர்திருத்தத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்படும். சென்னை பெருநகர எல்லைக்குள் உள் கட்டமைப்பை மேம்படுத்த நாங்கள் எடுத்துவரும் நடவடிக்கைகளில் சில விவரங்களைப் பற்றி நான் கூற விரும்புகிறேன்.

## உள்கட்டமைப்பு வசதிகள்

சென்னை பெருநகரம் வளர்ச்சி அடைவதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது. இதற்குத் தேவையான உள்கட்டமைப்பை உருவாக்க முதலீடு செய்ய வேண்டும். இதற்காக 18 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் உள்கட்டமைப்பை மேம்படுத்த விரிவான திட்டம் தீட்டியுள்ளோம். இது 10 ஆண்டு காலத்திற்குள் நிறைவேற்றப்படும்.

இந்த நிதி ஆண்டில் துவக்கப்படும் இத்திட்டத்தினால் சென்னை பெருநகர எல்லைக்குள் தேவையான உள் கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்படும். அமெரிக்காவில் கார்னல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து அமைக்கப்படும் டைசல் பார்க்கிற்கு அடிக்கல் நாட்டியதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இது அடுத்த 6 மாதத்திற்குள் முடிக்கப்படும்.

இது உயிர் தொழில்நுட்ப தொழிற்கூடங்களின் மாபெரும் மையமாக இருக்கும். தற்போதுள்ள டைடல் பார்க்கிற்கு அருகில் இரண்டாவது டைடல் பார்க் அமைக்கப்பட உள்ளது.

இதற்கான ஒப்பந்தம் சிங்கப்பூரைச் சேர்ந்த ஜூராங் டவுன் கார்ப்பரேசனின் கூட்டு நிறுவனமான அசெண்டாஸ் இந்தியா லிமிடெட்டுடன் ஏற்பட்டுள்ளது.

இது பதினைந்து இலட்சம் சதுர அடியில் எல்லா வசதிகளுடன் அமைக்கப்படுகின்றது. சர்தார் பட்டேல் சாலையில் மத்திய கைலாஷிலிருந்து கிழக்கு கடற்கரை சாலை வரை இருக்கின்ற இடம் தகவல் தொழில்நுட்ப மையமாக மாற்றப்படும். இதற்காக தனியாக நிதி திரட்டப்படும்.

## வளர்ச்சிக்கு முன்னோடி

சிறுசேரியில் அமைக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப பூங்காவில் வெகுவேகமாக தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் இரண்டாம் கட்டப்பணி விரைவில் தொடங்கக் கவனம் செலுத்தப்படும். சிறுசேரியில் எல்லா வசதிகளையும் உள்ளடக்கிய நகரியத்தை அமைக்க மற்றொரு சிங்கப்பூர் தொழில் குழுமம் முன்வந்துள்ளது. இதன் மூலம் இந்தப் பகுதியில் தகவல் தொழில்நுட்பத் துறையில், பணியாற்றுபவர்களுக்கு எல்லாவித வசதியையும் உள்ளடக்கிய வீடுகள் கிடைக்கும்.

நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தகப் பொருட்காட்சியில் 1500 பேர் அமரக்கூடிய எல்லா நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு அரங்கு விரைவில் தயாராகிவிடும். இந்தியாவின் கிழக்கு வாயிலாக சென்னை திகழப் போகிறது. சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகள் வளர்ச்சி பெற நாங்கள் தீட்டியுள்ள திட்டம் இந்த பகுதியின் வளர்ச்சிக்கு முன்னோடியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

## காஞ்சியில் சுத்திகரிப்பு நிலையங்கள்

பல்வேறு இரசாயன பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலைகள் அமைந்துள்ள மணலி மற்றும் கடலூர் தொழிற்பேட்டைகளை மேம்படுத்த ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தை செயல்படுத்த உள்ளோம். காஞ்சிபுரம் மாவட்டத்தில் மேலக்கோட்டையூரில் சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தும் இரசாயனக் கழிவுகளை ஆபத்தில்லாமல் அகற்றும் வசதி ஏற்படுத்தத் தேவையான இடங்களை அரசு தேர்வு செய்ய உள்ளது. தோல், ஜவுளித் தொழிற்சாலைகளினால் ஏற்படும் கழிவு நீரைச் சுத்திகரிக்க மத்திய அரசு உதவி வழங்கும். மாற்று ஏற்றுமதிக்கான

**"இந்தியாவின் கிழக்கு வாயிலாக சென்னை திகழப்போகின்றது. சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகள் வளர்ச்சிபெற நாங்கள் தீட்டியுள்ள திட்டம், இந்தப் பகுதியின் வளர்ச்சிக்கு முன்னோடியாக அமையும் என்பதில் ஐயமில்லை".**

உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தி சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

எனது தலைமையிலான அரசு மாநில ஏற்றுமதி மண்டலங்களுக்கான கொள்கையை அறிவிக்க உள்ளது. அரசு தனியார் நிறுவனங்கள் பங்கு கொள்ளும் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் எண்ணூர், சென்னை, தூத்துக்குடி, ஓசூர் ஆகிய நகரங்களில் அமைக்கப்படும். இதில் தொழில் தொடங்குபவர்களுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கப்படும். உலக வங்கி சமீபத்தில் தமிழ்நாட்டின் சாலை வசதிகளை மேம்படுத்த 2160 கோடி ரூபாய் மதிப்பிலானத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 1670 கோடி ரூபாய் உலக வங்கி வழங்க உள்ளது.

இதனால் மாநிலத்தின் சாலை வசதிகள் மேம்படுத்தப்படும். இரண்டாம் கட்ட சீர்திருத்த நடவடிக்கையில் பல்வேறு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நடவடிக்கையை விரிவாக விளக்க விரும்புகிறேன். தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளுக்குச் சிரமமின்றி தரமான மின்சாரம் வழங்குவது அவசியமில்லையா? அதற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் சமீபத்தில் 1000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது. இந்த உடன்படிக்கையின்படி தூத்துக்குடியில் மின்உற்பத்தி நிலையம் அமைக்கப்படும். இத்துடன் கூடுதலாக, 4000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முதலீடு செய்யப்படுகின்றது. இதனால் மின்சாரம் தங்கு தடையின்றி சீராகக் கிடைக்கும்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மத்திய தொகுப்பிலிருந்து மின்சாரம் கிடைப்பது அதிகரித்துள்ளது. இதனால் 48/2 மின் அதிர்வு எண் (Hertz) 50 ஹெட்ஸ் தரமான மின்சாரம் வழங்க முடிகிறது. இதனால் மின்சாரம் வழங்குவது அதிகரித்துள்ளது. எனது தலைமையிலான அரசு வரி செலுத்துவதற்கான 51 படிவங்களை ஒருங்கிணைத்து ஒரே படிவமாக அறிமுகப்படுத்த முயற்சி எடுத்துள்ளது.

## நிபுணர் குழு

இதற்கான இறுதிக்கட்ட வேலைகள் நடந்து வருகின்றன. இதனால் நேரம் மிச்சமாவதுடன் செலவும் குறையும். இரண்டாவது தேசிய தொழிலாளர் ஆணையம் தனது பரிந்துரையை வழங்கியுள்ளது. இதன் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அறிக்கையைப் பரிசீலித்து மாநிலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பரிசீலிக்க நிபுணர் குழு அமைத்துள்ளோம். இதன் பேரில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி தொழில் அமைப்புகளிடமும் தொழிற்சங்கங்களுடனும் ஆலோசனை நடத்தப்படும். எனது தலைமையிலான அரசு டாக்டர் ராஜா செல்லையா தலைமையில் வரி சீரமைப்பு மற்றும் வருவாய் பெருக்குவதற்கான ஆலோசனை வழங்க குழுவினை அமைத்துள்ளது. இந்தக் குழு வரி விகிதங்களை மாற்றியமைக்கவும், வரி வருவாயைப் பெருக்கவும் பரிந்துரை வழங்குவதற்கான இறுதிக் கட்டப் பணியில் உள்ளது. இதன் பரிந்துரைகளின் பேரில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## இயற்கை எரிவாயு

இன்று இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட பல்வேறு ஆலோசனைகளை நான் கணக்கில் எடுத்துக் கொண்டேன். இங்கே முன் வைக்கப்பட்ட ஆலோசனைகளில் சிலவற்றின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சர்க்கரைத் தொழில் இலாபகரமாக இயங்க மதிப்பு கூட்டப்பட்ட எத்தனால் தயாரிக்கும் தொழிலுக்கு மாற வேண்டும் என்ற கருத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

அதேபோல் உரத்தொழில் குறித்து முன்வைக்கப்பட்ட கருத்துக்களை நான் குறித்துக் கொண்டுள்ளேன். உரத்தொழிலில் எதிர்காலத் தேவைகளை நோக்கித் திட்டமிடப்பட வேண்டும் என்பதையும் உரஉற்பத்தியின் எரிபொருளாக இனி எரிவாயுவைப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். இதற்காகத் தமிழகத்தின் டிட்கோ நிறுவனம் மத்திய அரசின் எரிவாயு ஆணையத்துடன் ஒரு கூட்டுறவு ஒப்பந்தத்திற்கு முயற்சி எடுக்கும். மேலும் தென்பிராந்தியத்தில் பல்வேறு இடங்களில் இயற்கை எரிவாயு கிடைப்பதைக் கண்டறிய தமிழ்நாடு எரிவாயு கிரிட் உருவாக்க நான் முயற்சி எடுப்பேன். மேலும் மின்சார உற்பத்தி நிலையங்கள் மற்றும் உரத் தொழிற்சாலைகளுக்கான எரிவாயுவை வழங்கும் மையமாக சென்னையில் திரவ எரிவாயு முனையம் அமைக்க வேண்டும் என்ற ஆலோசனையை நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதற்காக ஒரு முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

## தோல் பொருள் பூங்கா

தோல் துறையைப் பொறுத்தவரை தோல் பொருட்கள் மற்றும் உற்பத்தியில் ஓர் ஒருங்கிணைந்த கவனம் செலுத்தப்படும். இந்தத் தொழில் மாசு இல்லாத தொழிலாகவும் அதே நேரத்தில் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் தொழிலாகவும் உள்ளது. தோல் பொருட்களின் வியாபாரத்தை ஊக்குவிக்க தோல் பொருட்கள் பூங்கா ஒன்றை அரசுடன் இணைந்து உருவாக்க தனியார் துறைகள் முன்வந்தால் அரசு அத்தகைய முயற்சியை வரவேற்கும். சென்னை மாநகரம் தொழில்துறையின் பன்னாட்டு வர்த்தகம் மற்றும் தோல் தொழில்நுட்பம் எலக்ட்ரானிக்ஸ் சேவை ஆகியவற்றிற்கான அடித்தள நிருவாக நகரமாக உருவாகி வருகிறது. இந்த வகையில் கலிபோர்னியாவைப் போல சென்னையை சர்வதேச அளவில் முக்கிய தகவல் தொழில்நுட்ப தலைமையகமாக உருவாக்க பலமான வர்த்தக நடவடிக்கைகளைத் துவக்க வேண்டும் என்பதை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன்.

இந்த வர்த்தக மையங்களை எல்லாம் மிகக் குறுகிய காலத்தில் தகுதியான இடங்களில் தொடங்க விரைவில் முடிவு எடுக்கக்கூடிய குழு ஒன்றை அமைக்க வேண்டும். மோட்டார் தொழில் மற்றும் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிலில் தமிழகம்தான் முதன்மை வகிக்கிறது.

### தொழில் கவுன்சில் அமைக்கப்படும்

மேலும் நாம் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, சென்னை பெருநகரின் உள்கட்டமைப்பை பலப்படுத்துதல், துறைமுகங்களை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்த வேண்டும். மோட்டார் வாகன உதிரி பாக உற்பத்தித் தொழிலை உலக தரத்திற்கு உயர்த்தி அதனை உலகச் சந்தையில் போட்டியிடும் துறையாக உயர்த்த நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

உங்கள் கருத்தரங்கில் நீங்கள் எழுப்பிய சில முக்கியப் பிரச்சினைகள் குறித்து எனது கருத்துக்களைக் கூறியுள்ளேன். இந்தக் கருத்தரங்கில் அரசு அதிகாரிகளும் பங்கேற்றனர். இந்தக் கருத்தரங்கு நல்ல கருத்துள்ள விவாதத்திற்கும் சிறப்பு நடவடிக்கைத் திட்டங்களை உருவாக்கவும் பயன்படும் என்று உறுதியாக நம்புகிறேன். இந்தக் கூட்டமைப்பின் தலைவரின் வேண்டுகோளின்படி முதலமைச்சரின் தலைமையில் தொழில் கவுன்சில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அரசுக்கும் தொழில் துறையினருக்கும் இடையே தொடர்ந்து கலந்துரையாடல் நடத்திட உதவிடும் ஆலோசனைக் குழுவாக இது செயல்படும்.

### விரைவில் புதிய தொழில் கொள்கை

நாங்கள் செயல்படுத்திவரும் இரண்டாம் கட்ட சீர்திருத்தம் பற்றி ஏற்கெனவே சில விவரங்களைக் கூறியுள்ளேன். எனது தலைமையிலான அரசின் புதிய தொழில் கொள்கை விரைவில் முடிவு செய்யப்பட்டு இந்த மாதத்தில் பிற்பகுதியில் அறிவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் நீங்கள் நடத்துகின்ற இத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் கிடைக்கின்ற கருத்து பரிமாற்றத்தினை வரவேற்கிறேன். இங்கு வெளியிடப்படும் கருத்துக்களை சிறப்பான முதலீட்டுத் திட்டங்களாக மாற்றினால் நான் மிகுந்த மகிழ்ச்சி கொள்வேன். நான் விரைவான வளர்ச்சியை எதிர்நோக்குகின்றேன். உற்பத்தித் துறையில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு ஏற்கெனவே முன்னணியில் உள்ளது. இதனை விரைவாகவும் உறுதியாகவும் நிறைவேற்றுவது எனது குறிக்கோளாகும்.

இதற்கு உகந்த சூழலை உருவாக்குவதற்காக இரண்டாம் கட்ட சீர்திருத்த நடவடிக்கைகளைத் தொடங்கி, முனைப்புடன் செயல்படுத்தி வருகிறோம்.

இதன் அடிப்படையில் நீங்கள் குறிப்பிட்ட தொழில் முதலீடுகளை அறிவிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை என்று கருதுகின்றேன்.

### முழுமையான ஒத்துழைப்பு வழங்கும்

முதலீடு திட்டங்கள் திட்டமிடும் நிலையிலிருந்து உண்மையான முதலீடு செய்யும் நிலைக்கு மாற வேண்டும். இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு உங்கள் திட்டங்களை விரைவாக செயல்படுத்தவேண்டும். எனது தலைமையிலான அரசு உங்களுக்குத் தேவையான உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்கும் என்று கூறிக்கொள்கிறேன்".

*– சென்னையில் 1.7.2003 அன்று நடைபெற்ற இந்திய தொழில் வர்த்தக சங்கக் கூட்டமைப்பின் தேசிய குழு சார்பில் முதலீட்டாளர்களுக்கு ஏற்ற மாநிலமாக தமிழகத்தை மாற்றுவது குறித்த கருத்தரங்கில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.*



*23-6-2003 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை, தென் பிராந்திய இராணுவத் தளபதியாக புதிதாகப் பொறுப்பேற்றுள்ள திரு. பரம்ஜித்சிங் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.*

## அண்ணா பல்கலைக்கழக மாணவர் சேர்க்கை

# தகவல்களை அறிய தொடுதிரைக் கணினி






மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2.7.2003 அன்று தலைமைச் செயலகத்தில், அண்ணா பல்கலைக் கழகத்தில் மாணவர் சேர்க்கை தொடர்பான அனைத்து தகவல்களையும் உடனடியாகவும், நேரடியாகவும் தெரிந்துகொள்ளும் வசதியை வழங்கும், தொடுதிரைக் கணினி அமைப்பு (Touch Screen Interface System) மற்றும் பல்கலைக்கழக தகவல் சேவை மையம் (University Information Call Centre) ஆகிய வசதிகளைத் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள பொறியியல் கல்லூரிகள் பற்றிய தகவல்கள், பெண்களுக்கான பொறியியல் கல்லூரிகள் பற்றிய தகவல்கள், பாடப்பிரிவு பற்றிய தகவல்கள், பொறியியல் கல்லூரிகள் உள்ளடக்கிய தமிழ்நாட்டின் வரைபடம், கலந்தாய்வு அட்டவணை, காலியிடங்கள் பற்றிய தகவல்கள் – ஆகிய தகவல்களை நேரடியாக அண்ணா பல்கலைக்கழக இணைய தளத்தில்இருந்து பெறும் வகையில் அண்ணா பல்கலைக் கழகத்தின் தேர்வு மையத்தில் தொடுதிரைக் கணினிகள் வைக்கப்பட்டுள்ளன. அண்ணா பல்கலைக்கழகத்தின் தேர்வு மையத்திற்கு வருகை தருகின்ற பொதுமக்கள் இந்ததொடுதிரைக் கணினிகளை இயக்குவதன் மூலம் பயனடைய முடியும். இந்தத் தகவல்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் பெறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்றுள்ள, தமிழ்நாட்டிலுள்ள 240 பொறியியல் கல்லூரிகள், 60–க்கும் மேற்பட்ட பட்டபடிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை வழங்கி வருகின்றன. இந்தப் பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை, கல்விக் கட்டணம் முதலான பல்வேறு தகவல்களையும், விளக்கங்களையும் பொதுமக்களுக்கும், இந்தக் கல்லூரிகளுக்கும் மிகவும் தெளிவாகவும், சிறப்பாகவும் வழங்கும் வகையில் அண்ணா பல்கலைக்கழகம், பல்கலைக்கழகத் தகவல் சேவை மையத்தை (University Information Call Centre) உருவாக்கியுள்ளது. ஒரே சமயத்தில் நிறைய உபயோகிப்பாளர்கள் பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கை கலந்தாய்வு பற்றிய விபரங்களை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக, 10 முகவர்களுடன் இந்தத் தகவல் தொடர்பு மையம் (University Information Call Centre) அண்ணா பல்கலைக் கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மையம் வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணி நேரமும் இயங்கும். பொதுமக்கள் இந்தத் தகவல் தொடர்பு மையத்தை 22200303 என்ற தொலைபேசி எண் மூலம் எளிதில் அணுகி தங்களுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம். இந்த வசதி இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழகத்தில்தான் அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலம் செய்து தரப்பட்டுள்ளது.

மாணவ, மாணவியர்களும், பொது மக்களும் நன்கு பயன்பெறும் வகையில் அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலம் செய்து தரப்பட்டுள்ள இதனை உருவாக்கித் தந்துள்ள அண்ணா பல்கலைக்கழகத்திற்குத் தமது வாழ்த்துகளை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

# நிதிச் சீர்திருத்தத்திற்கு முன்னுரிமை

## - மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்



புதுடில்லியில் 11.6.2003 அன்று மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவருடன் நடைபெற்ற 2003–2004ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

"திட்டக் குழுவின் துணைத் தலைவர் கே.சி.பந்த் அவர்களே !

திட்டக் குழுவின் உறுப்பினர்களே !

மூத்த அதிகாரிகளே !

2003–2004ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் ஆண்டுத் திட்டம் குறித்து இன்று விவாதித்து முடிவு செய்ய இங்கு வந்திருப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

ரூ.40,000 கோடி நிதிஒதுக்கீட்டுடன் 2002 டிசம்பரில் மிகத் துணிச்சலுடன் தொடங்கப்பட்ட தமிழ்நாடு பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலமாகிய 2002–2007 வரையுள்ள காலக்கட்டத்தில் 2003–2004ஆம் ஆண்டு இரண்டாவது ஆண்டாகும். 2002–2003ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிற்கான ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.5,750 கோடியாக இருந்தது. ஆனால் எமது சாதனைத் திட்ட செயற்பாடு ரூ.5,841 கோடி என்ற அளவில் கூடுதலாக அமைந்தது என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

முந்தைய அரசு எங்களுக்கு விட்டுச் சென்ற, முன் எப்போதும் இருந்திராத நிதி நெருக்கடி காரணமாக, முந்தைய ஆண்டு, அதாவது 2001–2002இல், ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.6,040 கோடி என்பதிலிருந்து ரூ.5,200 கோடியாகக் குறைக்கப்பட வேண்டியிருந்த சூழ்நிலையில் இதனை நாங்கள் செய்திருக்கிறோம்.

தமிழ்நாட்டில் நிதி நிலையைச் சீரமைத்ததோடு மட்டுமல்லாது, திட்ட நடைமுறை யையும் நம்பகத் தன்மை உள்ளதாய்ச் செய்து, தமிழ்நாடு தடங்கலற்ற உயரளவு வளர்ச்சியை நோக்கிச் செல்லும் வகையில் அதனை நாங்கள் சாத்தியமாக்கி இருக்கிறோம் என்பதையும் நீங்கள் இதன் மூலம் அறிய முடியும்.

தமிழ்நாட்டின் நிதி நிலையைச் சீரமைப்பது என்பது முற்றிலும் சிக்கலான ஒரு பணியாக உள்ளது. முந்தைய அரசு பின்பற்றிய முனைப்பில்லாத மற்றும் அலட்சியப் போக்குள்ள கொள்கையின் காரணமாக, கவனிக்கப்படாமல் விட்டுவிடப்பட்ட இடர்ப்பாடான நிதிப் பிரச்சினைகளின் பெருகிவிட்ட பின்னடைவுகளுடன் நான் போராட வேண்டியுள்ளது.

### துணிச்சல்மிக்க நடவடிக்கைகள்

தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் இந்த நாட்டிலேயே முதல் மாநிலமாக ஆக்குவதற்காகப் பயனுள்ள வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற இயலும் வகையில், துணிச்சலுடன் செயல்பட்டு, நிலைமையைச் சீர்படுத்த நான் முடிவெடுத்தேன். நிதி நிலையைச் சீர் செய்தாலன்றி, மற்றபடி, பயனுள்ள மற்றும் ஆக்கப்பூர்வமான பணி எதையுமே செய்ய இயலாது என்று நாங்கள் உணர்ந்ததால், நிதிச் சீர்த்திருத்தம் எங்களது முதல் முன்னுரிமைப் பணியாக அமைந்தது. இதை நிறைவேற்றுவதற்காக நடுத்தர கால நிதிச் சீர்த்திருத்தத் திட்டம் ஒன்றை நாங்கள் தொடங்கியுள்ளோம். உரிய நிதி நிருவாகம் குறித்த இலக்குகளையும், சாதனைகளையும் ஏற்படுத்த, நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை குறித்த சட்டம் ஒன்றை நாங்கள் அண்மையில் இயற்றியுள்ளோம். நாங்கள் மேற்கொண்டுள்ள விரிவான நிதிச் சீர்த்திருத்தம் குறித்த துணிச்சல் மிக்க நடவடிக்கைகள் காரணமாக, தமிழ்நாட்டில் வளர்ச்சி நடவடிக்கை மீண்டும் ஒரு முக்கியமான நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை நீங்கள் பாராட்டுவீர்கள்.

> "தமிழ் நாட்டை அனைத்துத் துறைகளிலும் இந்த நாட்டிலேயே முதல் மாநிலமாக ஆக்குவதற்காகப் பயனுள்ள வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற இயலும் வகையில், துணிச்சலுடன் செயல்பட்டு நிலைமையைச் சீர்படுத்த நான் முடிவெடுத்தேன். நிதிநிலையைச் சீர் செய்தாலன்றி, மற்றபடி பயனுள்ள மற்றும் ஆக்கப்பூர்வமான பணி எதையுமே செய்யஇயலாது என்று நாங்கள் உணர்ந்ததால், நிதிச் சீர்திருத்தம் எங்களது முதல் முன்னுரிமைப் பணியாக அமைந்தது".

தமிழ்நாட்டின் நிதி நிலையைச் சீரமைக்கவும் அதனை மீண்டும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு வரவும் நான் மேற்கொண்டுள்ள சிக்கலும், இடர்ப்பாடுகளும் மிகுந்த பேரளவிலான முயற்சிகளை நீங்கள் பாராட்டுவீர்கள் என்பதில் ஐயமில்லை. எங்கள் தரப்பிலான இந்த முயற்சி அங்கீகரிக்கப்பட வேண்டும், அர்த்தமுள்ள வளர்ச்சித் திட்டம் ஒன்றை மேற்கொள்ளவும் அதை விரைவுபடுத்தவும் நாங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் முழுவதுமாக ஆதரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காக நான் இதனை விளக்கமாக எடுத்துரைக்கிறேன். உண்மையான அனுகூலங்களையும் உயர் வளர்ச்சியையும் அளிக்கிற வளர்ச்சித் திட்டம் ஒன்றை விரைந்து மேற்கொண்டாலன்றி நிதிச் சீர்த்திருத்தங்கள் துன்பகரமாக ஆகிவிடும். இந்தக் கடினமான பகுதியை நாங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றிய நிலையில், எங்களுடைய வளர்ச்சித் திட்டத்திற்கு நான் உங்களுடைய முழு ஆதரவையும் எதிர்பார்க்கிறேன்.

### ஊரக வேளாண் தொழிற்சாலைகள்

இப்போது வளர்ச்சி சம்பந்தமான பிரச்சினைகள் சிலவற்றைக் காண்போம். பருவ மழை மீண்டும் பொய்த்ததையடுத்தும், காவிரி நீரில் எங்களுக்குரிய சட்டப்படியான பங்கினைத் திறந்து விடுவதில் கர்நாடகம் தொடர்ந்து பின்பற்றி வருகிற இணக்கமற்ற போக்கினாலும், நாங்கள் தீவிரமான கடும் வறட்சியை அனுபவித்து வருகிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இதன் விளைவாகத் தொன்மை வாய்ந்த நாகரிகத்தின் தொட்டிலாக விளங்கிய காவிரி டெல்டா பகுதி அழிந்து வருவது பற்றி பந்த் அவர்களே, நீங்களே பெரிதும் வருந்துவீர்கள். முதல் நிலைத் துறையில் வளர்ச்சி வேகத்தை அதிகரிப்பதற்கு நான் முதற்கண் முன்னுரிமை அளிக்க விழைகிறேன்.



உயரிய குறிக்கோளுடன் இத் துறையைச் சீரமைக்க வேண்டியது அவசியம் என்பதை நான் திடமாக நம்புகிறேன். இந்த எண்ணத்துடனேயே நான், விரிவான தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கி உள்ளேன். இத்திட்டத்தில் மூன்று பகுதிகள் உள்ளன. முதல் திட்டப் பகுதியில் விவசாயிகளுக்குச் சொந்தமான 2 மில்லியன் எக்டேர் தரிசு நிலங்கள் பயிரிடத்தக்க நிலங்களாக மாற்றப்படும். வேளாண் ஆய்வு முறைகளைப் பின்பற்றி நீர்ப்பிடிப்பு அடிப்படையில் இது நிறைவேற்றப்படும். வேளாண் தொழிற்சாலையுடன் சேர்ந்து செயல்படும் கூட்டாண்மை அமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் இணையங்கள், பொதுத்தரிசு நிலங்களை ஒரு வேளாண் தொழிலோடு இணைத்து ஒருங்கிணைந்து செயல்படுவதை இரண்டாவது திட்டப் பகுதி ஊக்குவிக்கும். மூன்றாவது பகுதியின்படி, இம்மாநிலத்திலுள்ள 385 வளர்ச்சி வட்டாரங்களில், ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திற்கும் ரூ.1 கோடி மூலதனச் செலவில், ஊரக வேளாண் தொழிற்சாலைகள் நிறுவப்படும். இத்திட்டத்தை மும்முரமாகச் செயல்படுத்தும் வகையில், இந்த ஆண்டு, இத்திட்டத்திற்குத் திட்டக் குழு முழு ஆதரவை அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

## தீபகற்ப ஆற்றுநீர் கட்டமைப்பு

தமிழ்நாட்டில் தண்ணீர்த் தட்டுப்பாடு மிகவும் கடுமையான, மிக அபாயமான நிலையை எட்டியுள்ளது. தமிழ்நாட்டின் மேற்பரப்பு நீர்வளம் முழுவதும் பயன்படுத்தப்பட்டு விட்டது. நிலத்தடி நீரோ அளவுக்கு அதிகமாக எடுக்கப்பட்டு விட்டது. இதற்கான ஒரே நீண்ட காலத் தீர்வு, மகாநதியை தமிழ்நாட்டிலுள்ள குண்டாற்றுடன் இணைத்து தீபகற்ப ஆற்று நீர் கட்டமைப்பை ஏற்படுத்துவது ஆகும். ஆற்று நீர் இணைப்புத் திட்டம் குறித்த பணிக் குழுவின் தலைவர் சுரேஷ் பிரபு அவர்களை இது குறித்து விரைந்து செயல்பட்டு பத்தாம் ஐந்தாண்டு திட்டக் காலத்திற்குள் இத்திட்டத்தை முடிக்குமாறு நான் கேட்டுக் கொண்டுள்ளேன். இத்திட்டத்தை நாட்டிலேயே முதல் நிலை முன்னுரிமைத் திட்டமாக எடுத்துக் கொண்டு, பத்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே இதனை முடிக்க ஏற்பாடு செய்யுமாறு, பந்த் அவர்களே, உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கிடைக்கும் நீரைச் செம்மையாகப் பயன்படுத்துவதற்கு நாங்கள் முக்கியத்துவம் அளித்துள்ளோம்; நுட்பமான சாகுபடி முறையை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் இவ்வாறு உழவு முறையை மேற்கொள்ளச் சிறப்புத் திட்டம் ஒன்றை நாங்கள் தொடங்க உள்ளோம். தோட்டக் கலைப் பயிர் போன்ற உயர் மதிப்பு கூட்டப்பட்ட பயிர்களை பயிர் செய்ய, நாங்கள் விரைந்து முனைய வேண்டிய அவசியமும் உள்ளது. இது குறித்து நான் சிறப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். நாங்கள் மேற்கொண்டுள்ள இம்முயற்சிக்கு உங்களுடைய முழு ஆதரவை அளிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

நடப்பு சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டு, ஜட்ரோபா (Jat-ropha) பாரடைஸ்(Paradise) மரம் போன்ற உயிர் எரிபொருள் மரங்களை வளர்க்க நாங்கள் தீவிரமாக முனைந்துள்ளோம். இந்த தோட்டத் திட்டத்தை விரிவான அடிப்படையில் மேற்கொள்வதற்கு ரூ.350 கோடி மூலதனச் செலவிலான திட்டம் ஒன்றினை திட்டக் குழுவிடம் நாங்கள் முன்மொழிந்துள்ளோம். மத்திய அரசின் சிறப்பு நிதிஉதவியுடன் இத்திட்டத்தைச் செயல்படுத்த, திட்டக் குழுவின் முழு ஆதரவை அளிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

## ரூ.250 கோடியாக உயர்த்தவேண்டும்

தண்ணீர்ப் பற்றாக்குறையால் வாடும் மாநிலமாகிய தமிழ்நாடு, சில வழிகாட்டிக் குறிப்புகளின் காரணமாக, விரைவுபடுத்தப்பட்ட பாசன பயன்பாட்டுத் திட்டத்தின் கீழ் (AIBP) எந்த வித நிதிஉதவியையும் பெறவில்லை என்பது ஒரு முரண்பாடான விஷயமாகும். ஏரிகளை நவீனப்படுத்தும் பெருந்திட்டம், நிதிப் பற்றாக்குறையால் நிலுவையில் உள்ளது. விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்பாட்டுத் திட்டத்தின் (AIBP) கீழ், 2003–2004–ஆம் ஆண்டிற்கென, தமிழ்நாட்டிற்கு அடையாள நிதி ஒதுக்கீடாக ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என நான் அறிகிறேன். இத் தொடக்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தருணத்தில், இந்த ஆண்டிற்கு இந்நிதி ஒதுக்கீட்டை ரூ.50 கோடியாகவும், அடுத்து வரும் ஆண்டு முதல் இந்நிதி ஒதுக்கீட்டை, குறைந்தது ரூ.250 கோடியாகவும் உயர்த்துமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். கடந்த காலங்களில் இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டு வந்த நிலையை இது சீர்செய்து சரிகட்டும்.

## சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டம்

எங்களது மாவட்டங்களுள் ஒன்றான, தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட பிரச்சினை குறித்து உங்களுடைய கவனத்தை ஈர்க்க விழைகிறேன். இம் மாவட்டத்தில் நாம் முறையாகச் செயல்பட்டு நக்ஸலைட்டுகளின் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்தியுள்ள போதிலும், விரிவான பொருளாதார வளர்ச்சித் திட்டம் ஒன்றைக் குறிப்பாக, படித்த, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் நலனுக்காகத் தொடங்க வேண்டியது இன்றியமையாதது ஆகும். நாங்கள் மட்டுமே இதனைச் செய்ய இயலாது. எனவே, ராஷ்டிரிய ஷாம்விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டத்துடன் இந்த மாவட்டமும் சேர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் கீழ், இம்மாவட்டம் கட்டாயம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். மேலும், குடிநீர் வழங்கல், பாசனம், வேலைவாய்ப்புகள் ஆகியவற்றுக்கு வகை செய்வதற்காக விரிவான திட்டம் ஒன்றுக்கு மத்திய அரசின் சிறப்பு நிதிஉதவி அளிக்கப்பட வேண்டும். தருமபுரி மாவட்டத்திற்கான சிறப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவது குறித்துப் பரிசீலிக்கும்படி துணைத் தலைவரை நான் கேட்டுக்கொள்கிறேன்.





5

தமிழ்நாட்டில் வேலையில்லாமை என்ற பெரும் பிரச்சினை உள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக நிலவுகிற மாநிலங்களுள் எங்கள் மாநிலம் நாட்டிலேயே மூன்றாவது இடத்தை வகிக்கிறது. மேலும், தமிழ்நாடு இந்தியாவிலேயே நகர்ப்புறப் பகுதிகள் அதிகம் உள்ள மாநிலமாகும். நீண்ட கால அடிப்படையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண சிறப்புத் திட்டம் ஒன்றைத் தொடங்க வேண்டியுள்ளது. எனவே, நீடித்த அடிப்படையில் இது குறித்து நடவடிக்கை எடுப்பதற்காக மத்திய அரசின் முழு ஆதரவுடன் சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்னும் கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையில் முதலீடு செய்வதற்கான உகந்த சூழ்நிலை கணிசமான அளவுக்கு மேம்பாடு அடைந்துள்ளது. இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் அளித்த புள்ளி விவரங்களின்படி தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையில் செய்யப்பட்ட மொத்த முதலீட்டு அடிப்படையில் பார்த்தால், 2001 ஏப்ரல் முதல் 2003 ஜனவரி வரையிலான கால அளவில் தமிழ்நாடு தான் மிக உயர்ந்த அளவு வளர்ச்சியை அடைந்துள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். மொத்த முதலீட்டிலும் தமிழ்நாடு தான் இந்தியாவிலேயே முதலாவதாக விளங்குகிறது. உற்பத்தித் துறைக்குப் புத்துயிர் அளிப்பதற்காக இரண்டாம் நிலைச் சீர்திருத்தங்களை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம். இவ்வாறு தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கான சூழ்நிலை பெருமளவுக்கு மேம்பாடு அடைந்து வேகமான பொருளாதார வளர்ச்சி ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. சிறுதொழில்கள் மற்றும் சிறு தயாரிப்பு நிறுவனங்களின் வளர்ச்சிக்காக விரிவான திட்டம் ஒன்றை நாங்கள் அறிவித்துள்ளோம். புதிய தொழிற்பிரிவுகள் ஏற்பட வசதியாக எங்களுடைய தொழிற்பேட்டைகளை நிலை உயர்த்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம். எங்களுடைய தொழிற்பேட்டைகளை நிலை உயர்த்தும் இந்தத் திட்டத்திற்காக சிறப்பான உதவியினை அளிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

## சாலை வசதிக்கு உலக வங்கி கடன்

அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு அதிக முன்னுரிமை அளிப்பதும், முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டத்தை உலக வங்கியின் நிதி உதவியுடன் நிறைவேற்ற அண்மையில் நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் என்பதை அறிவதில் நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள். இத்திட்டம், 348 மில்லியன் அமெரிக்க டாலர் அல்லது ரூ.1,636 கோடி கடனைக் கொண்டு செயல்படுத்தப்படும். மொத்தத் திட்டச் செலவு ரூ.2,115 கோடி (450 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இது தமிழ்நாட்டில் சாலை அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை முழுமையாக மேம்படுத்தும். 2003 ஜனவரித் திங்களிலிருந்து, வழங்கப்படும் எரி சக்தியின் தரத்தையும் நாங்கள் மேம்படுத்தியுள்ளோம். கால விரயத்தையும், நடைமுறைச் செலவுகளையும் குறைக்கும் வகையில் விதிமுறைகளை எளிமைப்படுத்த நாங்கள் விரிவான நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் இம்மாநிலத்தில் முதலீடு செய்யும் சூழ்நிலையை மேலும் குறிப்பிடத் தகுந்த அளவிற்கு அதிகரிக்கச் செய்யும்.

## வல்லுநர்கள் குழு

சென்னைப் பெருநகரப் பகுதியை தென்னகத்திலேயே ஒரு முதன்மை மாநகரமாக மேம்படுத்த நான் மிகவும் அக்கறை கொண்டுள்ளேன். சென்னை மாநகருக்காக ரூ.18,000 கோடி திட்டத் தொகையுடன், 10 ஆண்டு கால, விரிவான அடிப்படைக் கட்டமைப்பு வசதித் திட்டம் ஒன்றை நான் தொடங்கியுள்ளேன். இதனை 2003–2004ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்த வேண்டியுள்ளது. சென்னை போன்ற பெருநகரின் முதலீட்டுத் தேவைகள் மிக அதிகமாகும். இந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதி திட்டத்திற்கு நிதி

### முதல்வருக்கு திட்டக்குழுத்துணைத்தலைவர் திரு. கே.சி.பந்த் பாராட்டு

துணிச்சலுடன் நிதிச்சீர்திருத்த நடவடிக்கைகளை எடுத்ததற்காக மாண்புமிகு முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, மத்திய திட்டக்குழு துணைத்தலைவர் திரு.கே.சி.பந்த் பாராட்டினார். கடந்த ஆண்டு திட்ட ஒதுக்கீடு ரூ.5,750 கோடியையும் தாண்டி ரூ.5,841 கோடி அளவுக்கு செலவு செய்ததையும், மின்துறையில் ஒருங்கிணைந்த சீர்திருத்தம், தரிசுநில மேம்பாட்டுத் திட்டம், மழைநீர் சேகரிப்பு, தோட்டப்பயிர் மேம்பாடு, சுகாதார நடவடிக்கைகள் முதலியவற்றையும் சிறப்பாகச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு முதல்வர் அவர்களை திரு. கே.சி.பந்த் வெகுவாகப் பாராட்டினார்.

**"தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையில் முதலீடு செய்வதற்கான உகந்த சூழ்நிலை கணிசமான அளவுக்கு மேம்பாடு அடைந்துள்ளது. இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் அளித்த புள்ளி விவரங்களின்படி தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையில் செய்யப்பட்ட மொத்த முதலீட்டு அடிப்படையில் பார்த்தால், 2001 ஏப்ரல் முதல் 2003 ஜனவரி வரையிலான கால அளவில் தமிழ்நாடு தான் மிக உயர்ந்த அளவு வளர்ச்சியை அடைந்துள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். மொத்த முதலீட்டிலும் தமிழ்நாடு தான் இந்தியாவிலேயே முதலாவதாக விளங்குகிறது."**

ஒதுக்கீடு செய்வதில், திட்டக் குழுவும், சம்பந்தப்பட்ட அனைத்து அமைச்சகங்களும் முழு ஆதரவு அளிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவது முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. இந்தக் கடும் குடிநீர்ப் பற்றாக்குறையை நிரந்தரமாகச் சமாளிக்கக் கடல் நீரை நல்ல நீராக மாற்றும் அமைப்புகளை ஏற்படுத்த நான் உத்தேசித்துள்ளேன். மேலும், சென்னை மாநகரில் போக்குவரத்து முறையினை முற்றிலும் மேம்படுத்த வேண்டியது அவசியமாகும். சென்னைப் பெருநகரப் பகுதியின் அடிப்படைக் கட்டமைப்பு வசதித் திட்டத்தைச் செயல்படுத்த ஏதுவாக அதன் தேவைகளைக் கண்டறிய வல்லுநர்கள் அடங்கிய சிறு குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று திட்டக்குழு துணைத் தலைவர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

### விரிவான திட்டம்

தேசிய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டிற்கான ஒதுக்கீடு ரூ.25.7 கோடி. இது மிகக் குறைவான தொகையாகும். இத்திட்டத்தில், வீட்டு வசதிக்கான ஒதுக்கீடு குறைவானதாகவே உள்ளது. தமிழ்நாட்டின் தேவை பெருமளவிலானதாகும். இதற்கு காரணம் தமிழ்நாடு, நாட்டிலேயே மிக அதிக அளவு நகர்ப்பகுதி மக்கள் தொகையைக் கொண்டுள்ளதே ஆகும். குறிப்பாக, சென்னை பெருநகர்ப் பகுதியில், ஆற்றங்கரைகள், கால்வாய்கள், வெள்ளநீர் வடிகால்கள் ஆகியவற்றின் மீது கூட ஆக்கிரமிப்பு செய்யப்படும் பெரிய பிரச்சினையை நாங்கள் சந்தித்து வருகிறோம். பருவ மழை பெய்யும் போது, இதனால் வெள்ளம் அதிக அளவில் அப்பகுதியைச் சூழ்ந்து விடுகிறது. அப்பகுதியில் வாழ்பவர்களின் நிலைமையும் வருத்தத்திற்குரியது. இத்தகைய குடியிருப்புகள் மொத்தம் 33,133 உள்ளன. இந்நிலைமையைச் சரி செய்வதற்கு விரிவான திட்டம் ஒன்றைச் செயல் படுத்த நான் உத்தரவிட்டுள்ளேன். முதற்கட்டமாக இத்தகைய 8,164 குடியிருப்புகளை நாங்கள் எடுத்துக் கொள்ள இருக்கிறோம்;

3,000 புதிய குடியிருப்புகளை நாங்கள் ஏற்கெனவே கட்டத் தொடங்கியுள்ளோம். எஞ்சியுள்ள 5,164 குடும்பங்களையும் நாங்கள் குடியமர்த்த இந்த ஆண்டில், மொத்தம் 67.13 கோடி ரூபாய் தேவை. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தை முடிக்க இயலும் வகையில் சிறப்பு மானிய உதவி அளிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

900 கி.மீ. நீளமுள்ள எங்களது கிழக்குக் கடலோரப் பகுதி கடலரிப்பினால் பாதிக்கப்பட்டு வருகிறது. இந்த முக்கியப் பிரச்சினையையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன். வடசென்னை கூட கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 'ஹட்கோ' நிறுவனத்தின் கடன் உதவியுடன், நாங்கள் சில இன்றியமையாப் பணிகளை மேற்கொண்டுள்ளோம். ஆனால், இப்பணிகளின் தன்மை மானியங்கள் மூலம் நிதியுதவி அளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டியவை ஆகும்.

கடற்கரை நெடுக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்காக ரூ.169.39 கோடி மதிப்பிலான விரிவான செயற் குறிப்பு ஒன்றை மத்திய நீர்வள ஆணைய இயக்குநருக்கு நாங்கள் அனுப்பியுள்ளோம். தேசிய கடற்கரை பாதுகாப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதை அறிகிறேன். ஆனால், இதனைத் தயாரிப்பதில் மிகவும் காலதாமதமாகிறது. இந்த உத்தேச திட்டம் எடுத்துக் கொள்ளப்படும் வரை தமிழ்நாட்டில் 2003–2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயற்படுத்து வதற்காக சிறப்பு நிதி ஆதரவைத் திட்டக்குழு அளிக்க வேண்டும் என்னும் கருத்தினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சுற்றுலாவுக்கு தனிக்கவனம்

விரைந்த வளர்ச்சிக்கான எங்களுடைய கொள்கையில் மூன்றாம் நிலை அல்லது சேவைத் துறைக்கு நாங்கள் முக்கியம் அளித்துள்ளோம். தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் பெரும் பங்கு இத்துறையிலிருந்து தான் கிடைக்கிறது. சென்னை மாநகர் உலகளவில் தொழில் முறைத் தேவைகளை வெளிக் கொள்முதல் மூலம் பெறும் தலைநகராக உருவாகி வருகிறது. உலகிற்கு சென்னை இந்தியாவின் கிழக்கு வாயிலும் ஆகும். சென்னை குறித்து கவனம் செலுத்துவதுடன், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை போன்ற இரண்டாம் நிலை நகரங்களையும் நாங்கள் மேம்படுத்தி வருகிறோம். தகவல் தொழில்நுட்பம், தொழில் முறைத் தேவைகளை வெளிக் கொள்முதல் வாயிலாகப் பெறும் பணிகள், உள் அலுவலக செயல்பாடுகள், தகவல் தொழில்நுட்பவியலைச் சார்ந்த பணிகள் ஆகியவற்றிற்கு நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம். நான் வெளியிட்டுள்ள புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை, இத்துறையில் பெரும் வளர்ச்சியை ஏற்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. தற்போது தமிழ்நாட்டின் தொழில்நுட்ப விரிகுடா பகுதி (Bay Area) என பெயரிடப்பட்டுள்ள எங்களது முக்கிய தகவல் தொழில்நுட்பவியல் பகுதிக்குச் செல்லும் பாதையை, புதிய ஆறுவழி விரைவுப் பாதையாக அமைக்க நான் திட்டமிட்டுள்ளேன். சேவைத் துறையில், வேலைவாய்ப்பு அளிக்கும் முக்கியத் துறையாக விளங்கும் வகையில் சுற்றுலாத் துறைக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளோம். தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இங்கு பெறுகின்ற அனுபவங்கள், அவர்கள் நெஞ்சை விட்டு நீங்காத இனிய அனுபவங்களாக அமைகின்ற விதத்தில், தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா வசதிகளை பிரபலப்படுத்த இந்த ஆண்டு தனிக் கவனம் செலுத்தப்படும்.

## புதிய வளர்ச்சித் திட்டங்கள்

எங்களுக்கு உள்ள சில தனிப் பிரச்சினைகள் பற்றி நான் சுருக்கமாக எடுத்துரைத்துள்ளேன். தமிழ்நாடு 8 சதவிகித பொருளாதார வளர்ச்சியை எய்துவதை உறுதி செய்யும் பொருட்டு, நாங்கள் எடுத்துள்ள சில புதிய நடவடிக்கைகள் பற்றியும் நான் இங்கு தெரிவித்துள்ளேன். எங்கள் மாநிலத்திலுள்ள பரவலான, கடுமையான வறட்சி நிலை, வளர்ச்சியை வெகுவாகப் பாதித்துள்ளது என்பதில் சற்றும் ஐயமில்லை என்ற போதிலும், பாதகமான இச்சூழ்நிலையிலும், புதிய வளர்ச்சித் திட்டங்களை நாங்கள் வகுத்திருப்பது, பொருளாதாரத்தின் புதிய வளர்ச்சிக்கு வித்திடும் ஒரு முயற்சியாகும். வழக்கமான பருவமழை இருந்தால், தமிழ்நாட்டுப் பொருளாதாரம் விரைந்து வளரும்.

**தமிழ்நாட்டிற்கு நடப்பு ஆண்டிற்கு திட்ட ஒதுக்கீடாக ரூ.7,000 கோடி மத்திய திட்டக்குழுவால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 21.7 சதவிகிதம் அதிகமாகும்.**

அலுவலர் அளவில், விரிவான நிதி ஆதார மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று நான் அறிகிறேன். கடும் நிதித் தட்டுப்பாடு இருந்த போதிலும், தமிழ்நாடு, தன்னுடைய மேம்பாட்டுத் திட்டத்திற்கு கணிசமான அளவு நிதி அளிக்க இயலும் வகையில், பெரிய அளவிலான நிதிச் சீர்திருத்தங்களை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். நடப்பு வருவாயில் இருந்த மிகையான எதிர்மறை இருப்பை குறைத்துள்ளோம். தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் போக்குவரத்துக் கழகங்களை மீட்புப் பாதையில் இட்டுச் சென்றுள்ளோம். நாங்கள் மேற்கொண்டுள்ள இத்தகைய மகத்தான முயற்சியின் அடிப்படையில், திட்டக்குழு தனது முழு ஆதரவை எங்களுக்கு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மத்திய நிதி உதவியில் ஏற்பட்டுள்ள வழக்கமான அதிகரிப்பின் அடிப்படையிலும், திட்டக்குழு அளித்துள்ள உதவிகளின் அடிப்படையிலும் உள்ள நிதி ஆதாரங்கள் ரூ.6,907.37 கோடி ஆகும். 2003–2004 ஆம் ஆண்டுக்கு ரூ.7,000 கோடி திட்ட ஒதுக்கீட்டையாவது நாங்கள் பெற விரும்புகிறோம். நிதி ஆதாரங்களை அதிகரிக்கவும், செலவைக் குறைக்கவும் நாங்கள் செய்யக்கூடியவை அனைத்தையும் செய்துள்ளோம்.

நாங்கள் இவ்வளவு செய்துள்ள நிலையில், இந்தப் பற்றாக்குறையை நாங்கள் நிரப்ப இயலும் வகையிலும், 2003–2004–ஆம் ஆண்டில் ரூ. 7000 கோடி என்ற திட்ட ஒதுக்கீட்டுடன் பணிகளை மேற்கொள்வதற்கு இயலும் வகையிலும், கூடுதல் சிறப்பு மத்திய நிதியுதவிக்கு ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். ★




# மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் தமிழ்நாட்டில் இரண்டாவது பசுமைப் புரட்சி

செல்வி டாக்டர் ஜெ ஜெயலலிதா 1948ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24ஆம் நாள் மைசூரில் பிறந்தார். சென்னையில் உள்ள சர்ச்பார்க் கான்வென்ட்டில் மெட்ரிகுலேசன் படிப்பை முடித்தார். 1972ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் சார்பில் கலைமாமணி விருது வழங்கப்பட்டது. 1991ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19ஆம் நாள் சென்னைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியது. 1992ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ஆம் நாள் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகமும், 1993ஆம் ஆண்டு ஜூலை 14ஆம் நாள் மதுரை காமராசர் பல்கலைக்கழகமும் டாக்டர் பட்டம் வழங்கின.

1984 முதல் 1989 வரை நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகப் பொறுப்பு வகித்தார். மக்களின் மகத்தான ஆதரவுடன் சட்டமன்றத் தேர்தலில் வெற்றிகண்டு 24–6–1991 முதல் 12–5–1996 வரை முதலமைச்சராகப் பணியாற்றினார்.

மீண்டும் 14–5–2001 முதல் 21–9–2001 வரை முதலமைச்சராகப் பணி புரிந்தார். ஆண்டிபட்டியில் சட்டமன்ற இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், 2–3–2002 முதல் தமிழ்நாட்டின் முதலமைச்சராகத் திகழ்கின்றார்.

மாநிலத்தின் முன்னேற்றத்திற்கான செயல் திட்டத்தினை வடிவமைப்பதிலும், முனைப்பாக வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதிலும் செல்வி டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் துல்லியமான தொலைநோக்குப் பார்வை கொண்டுள்ளார்கள். அவரது தொலைநோக்குப் பார்வை, தமிழ்நாட்டை இந்தியாவில் முதன்மை மாநிலமாக உருவாக்க அவர் அறிமுகப்படுத்திய 15 அம்சத் திட்டத்தில் பிரதிபலிக்கிறது.

முதலமைச்சரின் முயற்சியும், முற்போக்கு செயல்பாட்டுத் திறனும் மாநிலத்தின் பத்தாவது ஐந்தாண்டு திட்ட சாசனத்தில் வெளிப்படுகின்றன. ஆணுக்கும் பெண்ணுக்கும் சமஉரிமை, தொழில்நுட்பத்துறையில் வேகமான வளர்ச்சி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தரும் வகையில் – தனித்தன்மைக்கும், நடைமுறைக்கும் சாத்தியமான சிந்தனை வளமும் கொண்டதாக அது வடிவமைக்கப் பட்டுள்ளது. நிதி, நிருவாகம், மின்சாரம், உணவுக்கொள்கை, போக்குவரத்து, பாசனம் போன்ற

பல்வேறு துறைகளில் அவர் மேற்கொண்டுள்ள சீர்திருத்தங்கள் தமிழ்நாட்டின் நல்ல நிருவாகத்தையும், செழுமையான வளர்ச்சிக்கான புதிய சகாப்தத்தின் தொடக்கத்தினையும் சுட்டிக்காட்டுகின்றன. இந்தச் சீர்திருத்தங்கள் மக்களின் போற்றுதலையும் அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளன.

2003–2004ஆம் நிதியாண்டிற்குத் தமிழ்நாட்டிற்குத் திட்ட ஒதுக்கீடாக மத்திய திட்டக்குழு 7,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது இதனை உறுதி செய்கிறது.

இவருடைய சிறப்பான தலைமையின் கீழ் தமிழ்நாட்டில் வேளாண்மைத்துறை விரைவான மாற்றத்தினைப் பெற்றுள்ளது. ஆராய்ச்சி தொழில் நுட்பங்கள் – அறிவியல் கூடத்தில் இருந்து வயல்வெளியினை ஆக்கப் பூர்வமாக சென்றடைவதின் அவசியத்தினை எப்போதும் அவர் வலியுறுத்துகின்றார். தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம், வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கு உலக வங்கியின் உதவியினைப் பெற்ற பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சாரும். வேளாண்மையின் எதிர் காலத்திற்கு நிலங்களின் சிறப்பான பயன்பாடு, பராமரிப்பு மற்றும் பாசனநீர் போன்றவை முக்கியத் தேவை என்று அவர் கருதுகின்றார்.

அதன் விளைவாக ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் உருவாகியுள்ளது. ஒவ்வொரு மழைத் துளியையும் சேகரித்து 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலத்தினை விளைநிலமாக மாற்றும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

வேளாண் விளைபொருட்களின் மதிப்புக் கூடுதலை அதிகரிக்கவும், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும், வருவாயினைப் பெருக்கவும், தமிழ்நாட்டில் உள்ள 385 வட்டார வளர்ச்சி மையங்கள் ஒவ்வொன்றிலும் வேளாண் உற்பத்திப் பொருட்களை ஆதாரமாகக் கொண்ட தொழில்களைத் துவக்க, புதிய அண்ணா மறுமலர்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் மேற்கொண்ட புதுமையான அணுகுமுறை காரணமாக உயிர்தொழில்நுட்பப் பூங்காக்கள், சுற்றுச்சூழல் நிறுவனங்களை உருவாக்கி பல்வகை தொழில்நுட்ப வளர்ச்சியினைப் பயன்படுத்த முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தோட்டக்கலை இயக்கத்தையும் மூன்று வேளாண் ஏற்றுமதி மண்டலங்களையும் அமைத்துள்ளார்.

அவருடைய சீரிய வழிகாட்டுதலிலும் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை எல்லா வகையிலும் அபிவிருத்தி செய்யும் அவரது தொலைநோக்குப் பார்வையின் விளைவாகவும், பெரும்பான்மையான மக்கள் பயன்பெறும் வகையில், ஊட்டச் சத்துத் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

தமிழ்நாட்டில் இரண்டாவது பசுமைப்புரட்சியை நிகழ்த்துவதிலும், எல்லாத்துறைகளிலும் தமிழகத்தை நாட்டில் முதன்மையான மாநிலமாகத் திகழச் செய்வதிலும் அவருக்குள்ள தளராத ஈடுபாட்டினை அங்கீகரிக்கும் வகையில் வேளாண்மை ஊரக வளர்ச்சி துறைகளில் செல்வி டாக்டர் ஜெ ஜெயலலிதா படைத்துள்ள மகத்தான சாதனைகளைப் பதிவு செய்து பாராட்டுவதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பெருமை அடைகின்றது.



மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களுக்கு
25-6-2003 அன்று, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில்
டாக்டர் பட்டம் வழங்கியபோது
பல்கலைக்கழக துணைவேந்தர்
திரு.சி.இராமசாமி அவர்களால் படிக்கப்பட்ட தகுதியுரை




# விவசாயிகளின் நல்வாழ்வே அரசின் குறிக்கோள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 24ஆவது பட்டமளிப்பு விழாவில் முக்கியப் பிரமுகர்கள், கல்வியாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் விவசாயத்தை பாடமாக எடுத்துள்ளவர்கள் ஒருங்கே குழுமியுள்ள அழகான இவ்விழாவில் கலந்து கொள்வதைப் பெருமைக்குரிய ஒன்றாகக் கருதுகிறேன். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 'டாக்டர் ஆப் சயின்ஸ்' என்ற பட்டத்தைப் பெறுவதில் நான் இரு மடங்கு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன்.

இந்தத் தருணம் என்னுடைய வாழ்க்கையின் முக்கியமான மகிழ்ச்சியான நேரங்களில் ஒன்றாகும். மேலும் என் வாழ்நாள் முழுவதும் எனது மனதில் வைத்து மகிழ்ச்சியடையும் தருணங்களில் ஒன்றாகும். சென்னை பல்கலைக்கழகம் 'டாக்டர் ஆப் லிட்டரேச்சர்' என்ற பட்டத்தையும், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் 'டாக்டர் ஆப் சயின்ஸ்' என்ற பட்டத்தையும் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 'டாக்டர் ஆப் லெட்டர்ஸ்' என்ற பட்டத்தையும் வழங்கி, ஏற்கெனவே என்னை கவுரவித்துள்ளன.

ஆனால் இன்றைய இந்த கவுரவ டாக்டர் பட்டம் எனது இதயத்திற்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. நான் ஒன்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய பணியை அல்லது என்னை எந்தத் துறையைச் சார்ந்தவள் என்று அழைக்க வேண்டும் என்ற ஒரு நிலை ஏற்படும்பொழுது என்னை நான் ஒரு விவசாய இனத்தைச் சார்ந்தவள் என்று என்னை நானே சொல்லிக் கொள்வதில்தான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

## பூமித்தாயின் முதல் குழந்தையே விவசாயிதான்

இன்று எனக்கு வழங்கப்பட்ட இந்த கவுரவத்தின் மூலம் பல இலட்சக்கணக்கான விவசாயிகளில் என்னையும் ஒருவராக அடையாளம் கண்டு கொள்ளப்பட்டுள்ளேன். இது தனிப்பட்ட வகையில் ஓர் உயர்ந்த இடத்தை எனக்கு வழங்கியுள்ளது. இந்த பூமித்தாயின் முதல் குழந்தையே விவசாயிதான்.

விவசாயத்துறை, விவசாயிகள், விவசாய சமூகம் ஆகியவற்றிற்கு நான் ஆற்றிய பணிகளைப் பாராட்டி எனக்கு வழங்கப்பட்டுள்ள இந்த 'டாக்டர் ஆப் சயின்ஸ்' பட்டம் அரிதாக வழங்கப்படக்கூடிய ஒன்றாகும்.




அதனை ஏற்றுக்கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும், தமிழ்நாட்டினுடைய விவசாயிகளின் வளர்ச்சிக்காக என்னுடைய பணிகளையும், என்னையும் அர்ப்பணிப்பேன் என்று பணிவுடன் சொல்லிக் கொள்ள விழைகின்றேன்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல்வேறு சிறப்புப் பெற்ற துறைகளில், குறிப்பாக, தலைசிறந்த வேளாண்மைக் கல்வி மற்றும் ஆராய்ச்சி, பயிர் வகை மேம்பாடு, பயிர் மேலாண்மை, மண்ணியல் மற்றும் மரபணு மாற்றப்பட்ட தாவரங்கள் ஆகியவற்றில் பல்வேறு சிறப்பான சேவையை செய்து வந்துள்ளது. இந்தப் பல்கலைக் கழகம் ஏற்கெனவே மரபணு மேம்படுத்தப்பட்ட இரண்டு அரிசி ரகங்களையும் மற்றும் 30 உயரிய வகைத் தாவரங்களையும் கண்டுபிடித்துள்ளது என்பதை நான் அறிவேன்.

## முனைப்பான செயல்பாடு

இந்தப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மூலம் வேளாண்மைத் துறையில் அபரிமிதமான உற்பத்தி செய்ய முடிந்துள்ளது. அடுத்த தலைமுறைக்குத் தேவையான ஓர் அடித்தளத்தை விரைவில் உங்களுடைய வேகமான வளர்ச்சியின் மூலம் அடைவீர்கள் என்பதில் எனக்கு எந்தவித ஐயமுமில்லை.

இது அடிப்படைக் கட்டுமானத் துறையில் ஒரு புதிய காலத்தை உருவாக்கும் என்று நான் உறுதியோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தற்போது, இந்தப் பல்கலைக் கழகத்தில் வேளாண்மை தொழில்நுட்பத் தகவல் மையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக நான் அறிகின்றேன். இது தமிழகத்தில் உள்ள விவசாயிகள், வேளாண்மை சம்பந்தமான தொழில்நுட்பத் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு ஒரு சிறந்த வழியாக இருக்கும்.

சமூகப் பொருளாதார மாறுபாடுகளுக்கு ஏற்றாற் போல, இப்பல்கலைக் கழகம் தன்னுடைய பாடத் திட்டங்களையும், ஆராய்ச்சி முறைகளையும் அப்போதைக்கு அப்போது மாற்றியமைக்க வேண்டும்.

மேலும், இந்தப் பல்கலைக் கழகம் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதனைப் போன்ற பல்வேறு தேசிய, பன்னாட்டு சிறப்பைப் பெற்ற வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் மானுடவியல் விஞ்ஞானிகளை உருவாக்கி வந்துள்ளது.

இந்தப் பல்கலைக் கழகம் மாநில அரசோடு இணைந்து கூட்டுறவு மூலமாக செயலாற்றி மாநிலத்தின் வேளாண் திட்டங்களை திட்டமிடுவதிலும் முனைப்புடன் செயலாற்றி வருவது ஒரு மிளிரும் உதாரணமாகும்.

நிலையான வேளாண்மைப் பாதுகாப்பு என்பது உணவுப் பாதுகாப்பின் அடிப்படையான அம்சமாகும். நிலையான வேளாண்மை என்பது பயிர்களை குறிப்பிட்ட முறையில் விளைவிப்பது மட்டுமல்ல- மேலும் தற்போதைய தேவைகளை ஈடு செய்யக்கூடிய வகையில் விளைவிப்பது என்பதும் அல்ல- மாறாக, எதிர்கால சந்ததியினர் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளத் தேவையான இடங்களை அவர்களுக்கு விட்டு வைப்பதிலும் அடங்கும்.

## சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு

நிலையான வேளாண்மை என்றவுடன் அது பயிரிடுபவர்களுக்கும் மற்றும் பயனாளிகளுக்கும் பாதுகாப்பு அளிப்பது என்பது மட்டுமல்ல. அதே நேரத்தில் இயற்கை நிலையை சேதமடையாமல் உற்பத்தியையும்—வாங்கும் சக்தியையும் மாறாத வகையில் பாதுகாப்பதும் நமது கடமையாகும்.

நிலையான வேளாண்மை என்கின்றபோது சூழ்நிலை மற்றும் பொருளாதாரம் இரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயலாற்ற வேண்டும். இது இரண்டையும் தவிர, மூன்றாவதாக ஒன்று நம் கண்ணுக்குத் தெரியாமல் உள்ளது. சுற்றுப்புறச் சூழ்நிலையை சிறப்பாகப் பாதுகாப்பதன் மூலம்தான் நாம் உண்மையிலேயே நிலையான வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க இயலும். ஏனெனில், சுற்றுப்புறப் பாதுகாப்பை உற்பத்தி செய்யவோ, உருவாக்கவோ நம்மால் இயலாது.

இதனை உருவாக்க சமுதாயத்தில் உள்ள அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். பலம் அல்லது பொருளாதாரத்தில் வேறுபட்டு இருந்தாலும், எல்லோரும் இணைந்து செயலாற்றும் வகையில் நிலையான வேளாண்மை உற்பத்தியை உருவாக்க




இயலும். இது சமூக நீதியின் அடிப்படை அம்சமாகும். அமெரிக்க வேளாண்மைப் பொருளாதார விஞ்ஞானி ஜான் ஐக்கெர்ட் கூற்றுப்படி சுற்றுப்புறச் சூழல், பொருளாதாரம், சமூகக் கட்டமைப்பு ஆகிய மூன்றும் வளங்குன்றா வேளாண்மைப் பாதுகாப்பிற்கு மூன்று காரணிகளாகும்.

இந்த மூன்றும் அடிப்படையான தேவையாகும். ஒரு பெட்டி உயரம், அகலம் மற்றும் நீளம் ஆகியவை இல்லாவிட்டால் அது பெட்டியாக இருக்காது. வேளாண்மை பயிரிடும் முறையில் சுற்றுப்புறச் சூழல் ஒருங்கிணைப்பு, பொருளாதாரத்தில் வலுவற்ற நிலை மற்றும் சமூகப் பொறுப்பில்லாத நிலை ஆகியவை இருந்தால் நிலையான வேளாண்மைப் பாதுகாப்பு என்பது இல்லை என்றுதான் அர்த்தம்.

### திட்டங்களுக்கு செயல் வடிவம்

இதனை எல்லாம் ஒருங்கிணைக்க வேளாண்மைத் துறையில் மேம்பாட்டைக் கொண்டு வருவதற்காக என்னுடைய தலைமையிலான அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு பல்வேறு மிகப்பெரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அவை ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், வறண்ட நிலங்கள் மேம்பாடு, வேளாண்மைக்கேற்ற தேவையான– சரியான தொழில்நுட்பம், மழைநீர் சேகரிப்பு மற்றும் உயிர் தொழில்நுட்பத்தில் மகளிரைப் பங்கேற்கச் செய்வது ஆகியவை அடங்கும்.

என்னுடைய தலைமையிலான அரசு அறிமுகப்படுத்தியுள்ள ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தில் மூன்று பகுதிகள் அடங்கும்.

முதல் பிரிவாக, விவசாயிகளுக்குச் சொந்தமான 20 லட்சம் எக்டேர் நிலங்கள் தற்போது பயன்படுத்தப்படாமல் உள்ளன. இந்த நிலங்களைப் பண்படுத்தி, வேளாண்மைத் துறையின் மூலம் மறுசீரமைப்பு செய்து அதனை விளைநிலங்களாக மாற்ற நடவடிக்கை.

இரண்டாவதாக, பொதுத் துறைக்குச் சொந்தமான தரிசாக உள்ள நிலங்களை மிகப்பெரிய வர்த்தக வணிக நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்போடு அந்த நிலங்களை வேளாண் தொழில்களுக்கு ஏற்ற வகையில் மாற்றியமைப்பது.

மூன்றாவதாக, 385 வட்டார வளர்ச்சிப் பகுதிகளிலும் குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் செலவில் வேளாண் பொருட்கள் சார்ந்த பதப் படுத்துதல் தொழிற்சாலைகளை கிராமப்புறங்களில் தொடங்குவது ஆகியவை அடங்கும்.

இந்தத் திட்டங்கள் சிறப்பாக வெற்றி பெறுவது என்பது நீங்கள் அமைத்துக் கொடுக்கவுள்ள புதிய தொழில்நுட்ப அடிப்படையைப் பொறுத்தே அதனுடைய வெற்றி அமையும். வறண்ட நிலங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சமூகநலக்காடுகள், தோட்டக்கலைத் துறைப் பயிர்கள், விதைகள், சாண மற்றும் எரிவாயுத் தாவரங்கள், மின் உற்பத்திக்கு என காட்டாமணக்கு போன்ற தாவரங்கள் பாமாயில் மற்றும் எரிபொருள் தரும் எண்ணெய் மரங்களை வளர்ப்பது ஆகியவை இத்திட்டத்தின் கீழ் அடங்கும்.

என்னுடைய தலைமையிலான அரசு ரூ.350 கோடி மதிப்பிலான ஒரு செயல்திட்டத்தை மத்திய அரசின் உதவித் தொகைக்காக அனுப்பியுள்ளது. இதன்மூலம் ‘ஜெட்ரோபா பாரடைஸ்’ மரங்கள் மற்றும் வேளாண்

எரிஎண்ணெய் மரங்கள் வளர்ப்பது செயல்படுத்தப்படும். வேளாண் எரிபொருள் தாவரங்களை வளர்ப்பதற்காக தமிழ்நாடு அரசு ஒரு புதிய செயல் திட்டத்தை உருவாக்கியுள்ளதை நான் ஏற்கெனவே மத்திய விவசாயத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளேன்.

தமிழ்நாட்டில் தண்ணீர்ப் பற்றாக்குறை மிகவும் இக்கட்டான நிலையிலும், மோசமான சூழ்நிலையிலும் உள்ளது. தமிழகத்தில் கிடைக்கின்ற நிலத்தடி நீரை முழுவதுமாகப் பயன்படுத்தியாகி விட்டது. இதன் காரணமாக நிலத்தடி நீர் வளம் வற்றி விட்டது. தற்போது நாட்டின் தேவையைக் கருத்தில் கொண்டு நதிகளை இணைத்து அதிகமாக உள்ள நீரை தேவைப்படும் பகுதிகளுக்கு திருப்புவதற்கு ஏற்ற வகையில் நதிகளை இணைக்க வேண்டும் என்று கடந்த 1984ஆம் ஆண்டே நாடாளுமன்றத்தில் பேசியுள்ளேன்.

## நிலத்தடி நீரை உயர்த்த நடவடிக்கை

நம்முடைய இந்தத் தண்ணீர்ப் பற்றாக்குறைக்கு ஒரே நீண்ட நெடுங்காலத் தீர்வு தென்னக நதிகளின் தொகுப்பை உருவாக்குவதுதான். அதாவது மகா நதியையும், தமிழகத்தில் உள்ள குண்டாற்றையும் இணைப்பதுதான்.

மேலும், தேசிய நதிநீர் இணைப்புக்குழுவின் தலைவரிடம் பத்தாவது திட்டக் காலத்திற்குள் தீபகற்ப நதிகள் இணைப்பை முடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளேன்.

தேசிய நதிநீர் இணைப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு நதிகளை இணைப்பதன் அவசியம் குறித்து வலியுறுத்தி வந்த அதே சூழ்நிலையிலும், மாநிலத்தில் மழைநீர் சேகரிப்புத் தடுப்பணைகள் மற்றும் மழைநீரை எந்தளவிற்கு பயன்படுத்த முடியும், அதன்மூலம் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவது போன்றவற்றிற்கும் நான் தீவிரமாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறேன்.

மேலும், கடல் நீரைக் குடிநீராக்குவது, கழிவுநீரை சுத்திகரிப்புச் செய்து, தண்ணீர் கையிருப்பை அதிகப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும், சாத்தியங்களையும் நடைமுறைப்படுத்தி வருகிறேன்.

மேலும், மழைநீர், ஆறுகளின் மூலம் கிடைக்கும் நீர், நிலத்தடி நீர், கடல் நீர், கழிவுநீரை சுத்திகரிப்பதன் மூலம் கிடைக்கும் நீர். இவ்வாறு பல்வேறு வகைகளில் கிடைக்கும் நீர் ஆதாரங்களை திட்டமிட்டு செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம்.

நீர்ப் பற்றாக்குறையுள்ள நிலையிலும் வேகமாக நீர் ஆதாரங்கள் குறைந்து வரும் சூழ்நிலையிலும், வறண்ட நிலங்களின் வேளாண்மை என்பது மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

மேலும் ஒவ்வொரு பகுதிகளுக்குரிய முதன்மை பயிர் வகைகளை இனம் கண்டு அவற்றை நவீனத் தொழில்நுட்பத்தைக் கொண்டு மரபணு மேம்படுத்தப்பட்ட பயிர்களாக மாற்றி வறட்சியை சமாளிக்கும் வகையிலும், அதேநேரத்தில் அதிக பலன் தரும் வகையிலும் உருவாக்க வேண்டும்.

## வருமானம் அதிகரிக்க மாற்றுப் பயிர் திட்டம்

மேலும், ஒரே வகையான பயிர்களைப் பயிரிடும் முறையை மாற்றி பணப்பயிர்களான பயறு, தானியங்கள் மற்றும் எண்ணெய் வித்துக்களை பயிரிடும் 'மாற்றுப் பயிர்' திட்டத்தையும் செயல்படுத்துவது குறித்து விவசாயிகள் முயற்சி மேற்கொள்ள வேண்டும். வறட்சிப் பகுதிகளில் உரிய பயிர்கள் சாகுபடி செய்தல், ஒருங்கிணைந்த பயிர் சாகுபடி முறை, கால்நடைப்



பராமரிப்பு ஆகியவை குறித்து ஆழ்ந்த ஆராய்ச்சியினை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்க விழைகிறேன். இத்தகைய ஒருங்கிணைந்த அணுகுமுறை வாயிலாக விவசாயிகளின் வருவாய் பெருக வழிகோலவேண்டும்.

அரசு, தற்போது கிடைக்கும் நீரை முழுவதுமாக பயன்படுத்துவது குறித்து ஒரு செயல்திட்டத்தை வகுத்துள்ளது. கிடைக்கும் நீரை எவ்வாறு முழுவதுமாகப் பயன்படுத்துவது என்பது குறித்த சரியான தொழில்நுட்பத்தை தருமபுரி மாவட்டத்தில் சிறப்புத் திட்ட முறையில் செயல்படுத்தி வருகிறோம். இந்தத் திட்டத்தை மிகப்பெரிய அளவில் செயல்படுத்த உள்ளோம். வேளாண்மைத்துறையில் முன்னோடி நிறுவனமாக விளங்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இதனை தங்களுடைய பாடத்திட்டங்களில் ஒன்றாக சேர்த்து மாணவர்களுக்குத் தேவையான பயிற்சி அளிப்புடன், வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் அதனை விரிவுபடுத்த வேண்டும். இத்திட்டத்தை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்த வேண்டும் என்பது என்னுடைய திட்டமாகும்.

## சுயஉதவிக்குழுக்களின் சேகரிப்பு

வேளாண்மைத் துறையில் இனப்பாகுபாடு என்பது ஒரு முக்கியமான பிரச்சினையாக உள்ளது. இதுகுறித்து நாம் சிறப்பான கவனம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். விவசாய நிலங்களில் பெண்களின் பங்கு மிகவும் முக்கியமானதாக உள்ளது. பெண்கள் தொடர்ச்சியாக தங்களிடம் உள்ள தன்னம்பிக்கையை இழந்துள்ளார்கள்.

மேலும் பொது இடங்களில் தங்களுக்குரிய உரிமைகள் குறித்து பேச அவர்கள் தயாராக இல்லை. பெண்கள் தங்களுடைய ஆதாரங்களை முழுவதுமாகப் பயன்படுத்தவும், முடிவெடுக்கவும் முடியாமல் இருப்பதற்குக் காரணம் அவர்களுக்குக் கல்வியறிவு மற்றும் கடன் வாங்குவது குறித்த போதிய தகவல் இல்லாமையே ஆகும்.



தமிழ்நாடு வேளாண்மைத் திட்டங்களில் உள்ள பெண்களுக்கு அதிக அளவு பயிற்சி அளித்து அவர்களுக்குத் தற்போதைய வேளாண்மைத் தொழில்நுட்பங்களைப் பயிற்றுவிப்பதன் மூலம் அவர்களுடைய திறமைகளை வளர்த்து உற்பத்தியை பெருக்குவதுடன் உணவுப் பாதுகாப்பையும் உருவாக்கி அவர்களுடைய பலம் என்னவென்பதை அவர்களுக்கு உணர்த்தும் வகையில் பயிற்சியளிக்க வேண்டும்.

இதனை தொடர் விரிவாக்க செயல்பாடாக மேற்கொள்வதின் மூலம் ஆராய்ச்சிக் கூடத்திற்கும் விளை நிலத்திற்கும் இடையில் உள்ள தொழில்நுட்ப சிந்தனை பரிமாற்றத்திற்கான இடைவெளியினை நீக்க முடியும்.

என்னுடைய தலைமையிலான அரசு மகளிர் சுய உதவிக்குழுக்களை உருவாக்கி, ஒரு மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கியுள்ளது. தற்போது, மகளிர் சுய உதவிக்குழுக்கள் திட்டம் ஒரு மிகப்பெரிய இயக்கமாக தமிழ்நாட்டில் உள்ளது. 22,44,935 பெண் உறுப்பினர்களைக் கொண்ட 1,31,749 சுய உதவிக் குழுக்கள் உள்ளன. மேலும் அவர்களுடைய ஒருங்கிணைந்த சேமிப்பு தற்போது ரூ.309.59 கோடியாகும்.

தமிழ்நாட்டில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள பெண்கள் தன்னிறைவு, சேமிப்பு மற்றும் பெண்கள் மேம்பாடு, முடிவெடுக்கும் தகுதி மற்றும் அரசியல் முறைகளில் முன்னேறி வருகின்றனர்.

மேலும், சுயஉதவிக் குழுக்கள் தற்போது காடுகள் மறுசீரமைப்பு, உள்நாட்டு மின் உற்பத்தி, மரக்கன்று நர்சரிகள் உருவாக்குதல் மற்றும் பராமரித்தல், புல்வெளி மேலாண்மை மற்றும் மின்சார சேமிப்பு அடுப்புகள் தயாரிப்பது ஆகியவற்றில் முக்கியப் பங்காற்றி வருகின்றனர்.

## உயிர் தொழில்நுட்பத்துறையில் பெண் தொழில்முனைவோர்

எதிர்காலத்தில் வறட்சியை எதிர்கொள்வதிலும் காடுகள் அழிவதைத் தடுப்பதிலும், சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதைத் தடுப்பதிலும், சட்டப்பூர்வமான வேளாண் பாதுகாப்பிற்கும் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கும் இந்த சுயஉதவிக் குழுக்களில் பணியாற்றும் பெண்களை தொழில்நுட்பத்தில் பங்கேற்கச் செய்வதற்காகவும், மேலும் உயிர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களில் பெண் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையிலும், கேளம்பாக்கம் அருகில் 'உயிர் தொழில்நுட்பப் பூங்கா' ஒன்றை அமைக்க முயற்சி எடுத்துள்ளேன்.

மேலும், ரூ.50 கோடி செலவில் மாமல்லபுரம் அருகே 'கடல்உயிர் தொழில்நுட்பப் பூங்கா' ஒன்றும் உருவாக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவித்துள்ளேன்.

சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் பெண்களைக் கொண்டு நிலக்கோட்டை அருகே 'மூலிகைச் செடிகள் பூங்கா' ஒன்றையும் உருவாக்க உத்தரவிட்டுள்ளேன்.

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மற்றும் அதன் பலம் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியதோடு எந்தளவிற்கு விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதற்கு ஒரு உதாரணத்தை கூற விழைகின்றேன்.

மதுரை மாவட்டம் மேலூர் தாலுகாவில் உள்ள உலகுப்பிச்சான்பட்டி என்ற ஒரு குக்கிராமத்தில் உள்ள ஓர் இளம்பெண் பாதிக்கப்பட்ட காய்கறி குறித்த விவரத்தினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மதுரை மையத்திற்கு இணைய தளத்தின் மூலம் அனுப்பிவைத்தார்.

உடனடியாக அந்தக் குறைபாட்டை நீக்குவதற்காக தகுந்த நடவடிக்கை மேற்கொண்டதன் விளைவாக ரூ.1.5 இலட்சம் மதிப்புள்ள காய்கறிப் பயிர்கள் பாதுகாக்கப்பட்டன.

தற்போதுள்ள தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி கிராமப்புறப் பெண்களின் மேம்பாட்டிற்கு உதவுகின்றது என்பது உண்மை. மேலும், தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியை தொழில்நுட்பப் பரிமாற்றத்துக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பத்தாவது திட்டக் காலத்தில் வேளாண்மைத் துறை வளர்ச்சி, இலக்கு 4 சதவிகிதமாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இந்த இலக்கை உள்ளூர்ச் சந்தையின் மூலம் மட்டும் நிறைவேற்றிட இயலாது. மேலும் வேளாண்மை சார்ந்த பொருட்களை ஏற்றுமதி செய்வதும் அடிப்படையான அம்சங்களில் முக்கியமான ஒன்றாகும். இதனை செயல்படுத்துவதற்காக கூட்டு முயற்சியோடு ஒசூரில் மலர்களுக்கான 'வேளாண் ஏற்றுமதி மண்டலம்' ஒன்றை அதாவது 'TANFLORA' என்ற அமைப்பை என்னுடைய தலைமையிலான அரசு உருவாக்கி உள்ளது.

ஏற்கெனவே இரண்டு வேளாண் ஏற்றுமதி மையங்கள் உருவாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதிலொன்று மலர் ஏற்றுமதிக்காக நீலகிரி மாவட்டத்திலும், மற்றொன்று தேனி மற்றும் 5 தென் மாவட்டங்களில் மாம்பழ ஏற்றுமதிக்காகவும் உருவாக்கப்படும்.

தோட்டக்கலைத் துறையை மேம்படுத்துவதற்காக தோட்டக்கலைத்துறைக்கு சிறப்பான திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தத் தனி இயக்கம் நடத்தப்படும். உணவு மற்றும் வேளாண் பொருட்கள் மற்றும் பதப்படுத்துதல் உற்பத்தியில் முக்கிய இடமாக விளங்கக்கூடிய வகையில் அனைத்து வகையான தகுதிகளையும் தமிழ்நாடு வேளாண்மைத் துறை பெற்றுள்ளது.

கிராமப்புற பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு மூலகாரணியாக இது செயலாற்ற முடியும். வலிமையான, பாதுகாப்பான வேளாண்மை வளர்ச்சி தமிழக பொருளாதாரத்தை உலகமயமாக்கலை எதிர்கொள்ளச் செய்ய இயலும்.

என்னுடைய தலைமையிலான அரசு இதனை செயல்படுத்த விவசாயிகளுடனும், உற்பத்தி துறையினருடனும் இணைந்து பணியாற்றத் தயாராக உள்ளது. இந்தக் கூட்டு நடவடிக்கையின் மூலம் வேளாண்மை வளர்ச்சிக்கும், கிராமப்புற வளர்ச்சிக்கும் தேவையான ஆதாரங்கள் கிடைக்கும்.

## விஞ்ஞானிகள் இணைந்து பணியாற்ற வேண்டும்

மேலும், சமூகப் பொருளாதார மாற்றங்கள் நம்முடைய கிராமப்புற மேம்பாட்டிற்கு மிகவும் அவசியமாக உள்ளது. தமிழகத்தின் நிலையான வேளாண்மை வளர்ச்சிக்கும், அரசின் எதிர்கால இலட்சியங்களுக்கும் இந்தப் பல்கலைக் கழகத்தின் தலைசிறந்த விஞ்ஞானிகள் இணைந்து முழு மனதுடன் பணியாற்ற அழைக்கின்றேன்.

இந்தப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பேருரையாற்றுவதற்கும் எனக்குத் தனிப்பட்ட வகையில் கவுரவம் வழங்கியதற்கும் பல்கலைக்கழகத்தின் வேந்தரும், தமிழக ஆளுநருமான ராமமோகன்ராவ், துணைவேந்தர் மற்றும் பல்கலைக்கழக கல்வியியல் குழு ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இது மண்ணோடு நீரும், நீரோடு மண்ணும் இணைந்திருப்பதைப் போன்று விவசாயிகளோடு ஒருங்கிணைந்த தமிழ்நாட்டின் வளமான எதிர்காலத்திற்கும், முன்னேற்றத்திற்கும் என்னை மென்மேலும் அர்ப்பணித்துக் கொள்வதற்கான ஊக்கத்தினையும், உத்வேகத்தினையும் தருகின்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்,
25-6-2003 அன்று,
கோவை தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக்கழகத்தின் 24ஆவது
பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை

### சிவகாசியில்

# குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தில் மனிதச் சங்கிலி

குழந்தைத் தொழிலாளர் முறையை அறவே அகற்ற மத்திய அரசும் மாநில அரசும் தீவிரமாகச் செயலாற்றி வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12–ஆம் தேதியை குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்புத் தினமாக தமிழக அரசு அறிவித்துள்ளதைத் தொடர்ந்து விருதுநகர் மாவட்டத்தில் மாவட்ட நிருவாகமும், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டமும் இணைந்து பல்வேறு இடங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தியது.

12.6.2003 அன்று மாவட்ட ஆட்சியர் டாக்டர் கே.கோபால்,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு.எம்.ரவி,இ.கா.ப. அவர்கள் கொடியசைத்து சுமார் 3,000 மாணவர்கள் பங்கு கொண்ட விழிப்புணர்வுப் பேரணியைத் துவக்கி வைத்தார். இந்தப் பேரணி விருதுநகர் கே.வி.எஸ்.பள்ளியில் துவங்கி மார்க்கெட் வழியாக மேலத்தெரு, பேருந்து நிலையம் வந்து மீண்டும் கே.வி.எஸ். பள்ளியில் நிறைவடைந்தது. மாலை 3.30 மணியளவில் சிவகாசி ஆயுதப்படை மைதானத்தில் வைத்து முறை சார் பள்ளி மாணவர்களும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டச் சிறப்புப்பள்ளி மாணவர்களும் சுமார் 3,000 பேர் பங்கு கொண்ட மனிதச் சங்கிலி நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சியரும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரும் கலந்துகொண்டு, மாணவர்களை உற்சாகப்படுத்தினர். அதன் பின்னர் சிவகாசி அய்யநாடார் ஜானகியம்மாள் கல்லூரியிலிருந்து மாணவர்களுக்கான மாரத்தான் ஓட்டப்பந்தயம் துவங்கி ஆயுதப்படை மைதானத்தில் நிறைவடைந்தது. இந்த ஓட்டத்தை மாவட்ட ஆட்சியர் டாக்டர் கே.கோபால்,இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்தார். மாலை 5 மணியளவில் ஆயுதப்படை மைதானத்தில் ''எல்லா குழந்தைகளும் பள்ளிக்கூடம் போகணும்'' என்ற தலைப்பில் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடத்தப்பட்டது. இவ்விழாவில் திட்ட இயக்குநர் திரு. யோ. ஜெயப்பிரகாஷ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கருத்தரங்கை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சியர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப. பேசுகையில் விருதுநகர் மாவட்டம் முழுவதும் குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றுள்ளன. ஒரு நாள் மட்டும் பேசிவிட்டு பின்னர் இது தொடர்பாக பேசாமல் இருந்து விட்டால் பயன் இருக்காது. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பை அரசு முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. குழந்தைத் தொழில் பல விதமாக உள்ளது. பள்ளிக்கு அனுப்பாமல் ஆடு மாடு மேய்ப்பது, சிறு சிறு பணிகளுக்கு அனுப்புவது, இதன் மூலம் கிடைக்கும் அந்த சின்ன



**கு. தானப்பா,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
விருதுநகர்.

வருமானத்திற்காகப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையை சிதைத்து விடக்கூடாது. குழந்தைத் தொழிலை ஒழிக்க எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன. தீப்பெட்டி, பட்டாசு, ஹோட்டல், ரைஸ்மில், அச்சகங்கள் இவை போன்ற எந்தத் தொழிலிலும் குழந்தைத் தொழிலாளர் இருக்கக்கூடாது. ஒரு கை ஓசை எழுப்பாது. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கு அனைத்துத் துறைகளும் முழு ஒத்துழைப்பு கொடுப்பது போல் அனைத்து அமைப்புகளும் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். தொழிற்சாலைகள் ஒருங்கிணைந்து எந்தக் காரணத்தை முன்னிட்டும் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தக்கூடாது என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். தொழிற்சாலைகளின் உரிமையாளர்களிடம் தொழிற்சங்க அமைப்புகள் பேசி குழந்தைத் தொழிலாளர்களை பணியில் சேர்த்துக்கொள்ளக்கூடாது என உறுதி மொழி எடுத்தால் இது தொடர்பான பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என நம்புகிறேன். பெற்றோர்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வுகள் இருந்தாலும் குறைந்த பணத்திற்காக குழந்தைகளைப் பணிக்கு அனுப்பி விடுகிறார்கள். பெற்றோர்கள் அனுப்பி வைத்தாலும் தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்கள் குழந்தைத் தொழிலாளர்களை அனுமதிக்கக் கூடாது. இந்த உறுதி மொழியை தொழில் அமைப்புகள் தரவேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். விருதுநகர் மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் இல்லாத நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக மாவட்ட நலநிதிக் குழு மூலமாக குழந்தைத் தொழிலாளர் மாணவர்களுக்கு புத்தகங்கள் இலவசமாக விநியோகிக்கப்படுகிறது. பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். முற்றிலும் குழந்தைத் தொழிலாளர் முறை இல்லையென்ற நிலையை விருதுநகர் மாவட்டத்தில் உருவாக்க நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவோம்'' என்று குறிப்பிட்டார்.

மேலும் திருவில்லிபுத்தூரில் நடத்தப்பட்ட மனிதச் சங்கிலியை மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார். இந்திய குழந்தைகள் நலச்சங்கத்தின் சார்பில் நடந்த இந்த நிகழ்ச்சிக்கு மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. எம்.ரவி, இ.கா.ப. மற்றும் தலைவர் திரு. ரெங்கசாமி, ஒருங்கிணைப்பாளர் திரு. ஜோசப்ராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் சார்பில் திருத்தங்கல், சாத்தூர், செவல்பட்டி, திருச்சுழி ஆகிய இடங்களில் என்.சி.எல்.பி. தொண்டு நிறுவனங்கள் மூலம் பேரணி கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இது தவிர விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் முறைசார் பள்ளிகளில் காலையில் உறுதி மொழியும், மாலையில் மாணவர்கள் பேரணியும் நடத்தப்பட்டது. பல்வேறு போட்டிகள் மாவட்டம் முழுவதும் நடத்தப்பட்டன.

---

## 12,000 ஆசிரியர்கள் நியமனம்

### மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு

ஒரு கல்வி ஆண்டில் குறைந்தபட்சம் 180 நாட்களாவது கற்றல், கற்பித்தல் நாட்களாக அமைய வேண்டும் என்பதில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அரசு பெரிதும் அக்கறை கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் இந்த கல்வி ஆண்டு முதல் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் குறைந்தது 180 பள்ளி நாட்கள் கற்றல், கற்பித்தல் நாட்களாக அமைந்திட வகை செய்யப்பட்டுள்ளது. இதனை நிறைவேற்ற போதுமான ஆசிரியர்களை விரைவாக நியமனம் செய்திட மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இக்கல்வி ஆண்டில் 12,000 ஆசிரியர்களை நியமிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதில் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், மொழி ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள் போன்ற அனைத்து வகை ஆசிரியர்களும் அடங்குவர்.

மேல்நிலைப்பள்ளி வகுப்புகளுக்கான காலியாக உள்ள முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டு விடும். உயர்நிலை, நடுநிலை மற்றும் துவக்கப்பள்ளிகளுக்கும் தேவையான பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் ஆகியோரும் நியமிக்கப்படுவார்கள். இதுபோல இந்தக் கல்வி ஆண்டில் 40 மேல்நிலைப் பள்ளிகள், 40 உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்படவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் புதிய இணையதளம்

— மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தொடங்கிவைத்தார்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வரும் சிறப்பான முயற்சிகள், செயல்படுத்தி வரும் சீரிய திட்டங்கள் ஆகியவற்றின் விளைவாக, தமிழகத்தில் விளையாட்டுத்துறை, சிறந்த ஊக்கம் கிடைக்கப் பெற்று பெருமளவில் வளர்ச்சி பெற்றுள்ளது.

விளையாட்டுத் துறைக்கு மேலும் ஆக்கம் தரும் வகையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விளையாட்டுத் தகவல்களை ஒருங்கிணைத்து ஒரு புதிய இணையதளத்தை உருவாக்கியுள்ளது. விளையாட்டு வீரர்கள் தங்களுடைய திறமையை வளர்த்துக் கொள்ளவும், அவர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தேவையான தகவல் பரிமாற்றத்திற்கும், இந்த இணைய தளம் வழிகோலுகின்றது.

இந்தப் புதிய இணைய தளம் பல்வேறு சிறப்பம்சங்களைப் பெற்றுள்ளது. சென்னை மற்றும் மாநிலத்தின் பிற பகுதிகளில் உள்ள விளையாட்டு வசதிகள் பற்றிய தவல்களை எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் இந்த இணைய தளம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சாம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தத்தெடுக்கப்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பற்றிய விவரங்களையும் இந்த இணைய தளத்தில் கண்டறியலாம். அவ்வப்போது விளையாட்டுக்கள் குறித்து வெளியிடப்படும் கால அட்டவணை விளையாட்டு வீரர்களுக்கு பெரிதும் உதவிகரமாக அமைந்திடும். மேலும், பயிற்சி முகாம்கள், விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகள் மூலமாக வழங்கப்படும் பல்வேறு வகையான உயரிய பயிற்சிகள் பற்றிய விவரங்கள் இந்த இணைய தளத்தில் இடம் பெற்றுள்ளன. இந்த இணைய தளம் முக்கிய விளையாட்டுக்களைப் பற்றிய பொதுவான விவரங்களை அறிந்து கொள்ள வகை

செய்கின்றது. விளையாட்டு வீரர்களுக்குக் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்புகள் குறித்த விவரங்கள் அடங்கிய தனிப் பிரிவும் இதில் இடம் பெற்றுள்ளது.

விளையாட்டு வீரர்களுக்குத் தேவைப்படும் அனைத்து மாதிரி விண்ணப்பப் படிவங்களும் இந்த இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் (down load) செய்து கொள்ளும் வசதி குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துடன் தொடர்பு கொண்டு விளையாட்டுக்கள் குறித்த அனைத்து ஆலோசனைகளையும், விளக்கங்களையும் பெற இந்த இணைய தளம் உதவுகின்றது.

விளையாட்டு சம்பந்தமான தற்போதைய நடப்பு செய்திகளையும் அறிந்திட வகை செய்யப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதிலும் உள்ள விளையாட்டு அமைப்புகள்/ சங்கங்கள், அவற்றின் நிர்வாகிகளின் பெயர், முகவரி அடங்கிய ஒருங்கிணைக்கப்பட்ட பிரிவு ஒன்றும் இதில் உள்ளது. இந்த இணைய தளத்தில் சிறப்புமிக்க தேடுபொறி (search engine) ஒன்றும் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது.

இந்த இணைய தளத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 13–6–2003 அன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள். இதன் முகவரி www.sportsinfotn.com ஆகும். அப்போது, தமிழகத்தில் சென்னையிலும் மற்ற மாவட்ட தலைநகரங்களிலும் விளையாட்டுத் துறையின் மூலம் வழங்கப்படுகின்ற பயிற்சிகள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனை களுக்கான விடுதி வசதிகள் போன்ற விவரங்களையும் இந்த இணையதளத்தில் இடம்பெறச் செய்யுமாறு அறிவுரை வழங்கினார்கள். மேலும், சிறப்பான முறையில் இந்த இணைய தளத்தை உருவாக்கிய அனைவருக்கும் பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு.இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அரசுச் செயலாளர் திருமதி சூசன் மாத்யூ, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் – செயலர் திரு.P.W.C. டேவிதார் ஆகியோர் பங்கேற்றனர்.

★ ★ ★



## இன்டர்நெட்டின் இணையற்ற வளர்ச்சி

*தற்போது இன்டர்நெட்டை 300 மில்லியன் மக்கள் பயன்படுத்துகிறார்கள். இது 1996ஆம் ஆண்டு 40 மில்லியனாக இருந்தது. 1999ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 3.6 மில்லியன் இணைய தளங்கள் இருந்தன. தற்போது நாள்தோறும் 4000 புதிய இணைய தளங்கள் உருவாகி வருகின்றன. இணைய தளத்தின் உண்மையான வளர்ச்சி என்பது அது கொண்டிருக்கும் இணைய தள பக்கங்களே ஆகும். வரும் இரண்டாண்டு காலத்தில் இணைய தளப் பக்கங்களின் எண்ணிக்கை 5 மடங்காக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*இணைய தளம் தற்போது உலகளாவிய, மகத்தான தொடர்புச் சாதனமாக வளர்ச்சியடைந்துள்ளது. வானொலி, 50 மில்லியன் மக்களை சென்றடைய 35 ஆண்டுகள் ஆனது. அதைப்போன்று, தொலைக்காட்சியின் பயன் மக்களை சென்றடைய 13 ஆண்டுகள் ஆனது. ஆனால் இணைய தளம் நான்காண்டு காலத்திலேயே சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இன்டர்நெட் என்பது, இன்னும் 3 அல்லது 5 ஆண்டு காலத்திற்குள் தண்ணீர், எரிவாயு, மின்சாரம் போன்ற அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகிவிடும்.*

*ஆதாரம் :* மனோரமா இயர்புக் 2003

சேலம் மாவட்டத்தில்

# ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்

உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3ஆவது திட்டம், சேலம் மாவட்டத்தில் உள்ள 22 வட்டாரங்களில் 1,261 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகிறது. கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்கள் ஆகியோரின் சுகாதார, ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதும் தமிழகத்தை ஊட்டச்சத்துப் பற்றாக்குறை இல்லாத மாநிலமாக மாற்றுவதும் இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்களாகும்.

இத்திட்டத்தில் 0–36 மாதக் குழந்தைகளைப் பிரதிமாதம் எடை எடுத்துப்பார்த்து, அவர்களின் ஊட்டச்சத்து நிலை 4 நிலைகளாகப் பிரிக்கப்படுகிறது. இயல்பு நிலையில் உள்ள குழந்தைகள் ஆரோக்கியமாகவும், ஊட்டச்சத்துக் குறைபாடு இல்லாதவர்களாகவும் கருதப்படுகின்றனர். முதல் நிலைக் குழந்தைகள் மிகச் சிறிய ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளவர்களாகவும், 2ஆம் நிலைக்குழந்தைகள் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளவர்களாகவும், 3ஆம், 4ஆம் நிலைக் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்துப் பற்றாக்குறை உள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர்.



பிறப்பு எடை சரியான அளவில் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுகிறது. பிறப்பு எடை குறிக்கப்பட்டு அவ்விவரம் மாதாமாதம் ஆய்வு செய்யப்படுகிறது. குழந்தைகளின் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையை நீக்குவதற்காக நாள்தோறும் இணை உணவு வழங்கப்படுகிறது. பிரதி மாதம் எடை எடுத்துக் குழந்தைகளின் வளர்ச்சி நிலை கண்காணிக்கப்படுகிறது. குழந்தைகள் ஆரோக்கிய நிலையை அடையும் வரை இணை உணவு தொடர்ந்து வழங்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் ''ஊட்டச்சத்துக் குறைபாடில்லாத தமிழகத்தை உருவாக்க'' ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளுக்குக் கூடுதல் இணை உணவு வழங்கும் உன்னதத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்படி ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளுக்குக் கூடுதல் இணை உணவு வழங்கும் திட்டம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. இத்திட்டத்தில் 1,245 இரண்டாம் நிலைக் குழந்தைகளுக்கும் 140 மூன்றாம் நிலை, நான்காம் நிலை குழந்தைகளுக்கும் ஆகமொத்தம் 1026.375 கி.கி. இணை உணவு கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. 3 மற்றும் 4ஆம் நிலை அதிகமாக உள்ள 10 இடங்களில் மக்கள் மத்தியில் திட்டக் கருத்துக்களை எடுத்துச் சென்று விழிப்புணர்வு உண்டாக்க கலை நிகழ்ச்சிகள் மற்றும் நாடகங்கள்

நடத்துவதற்காக ரூ.40,000 நிதிஒதுக்கீடு பெறப்பட்டு கிராமங்களில் நடத்தப்பட்டுள்ளது.

மேலும், சேலம் மாவட்டத்தில் மாவட்ட ஊட்டச்சத்துத் திட்ட அலுவலர், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், வட்டாரப் பயிற்றுநர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோர் ஒவ்வொருவரும் ஒரு ஊட்டச்சத்துக் குறைவுள்ள குழந்தை வீதம் 88 குழந்தைகளைத் தத்தெடுத்துள்ளனர். அக்குழந்தைகள் பெற்றோரிடமே உள்ளனர். ஆனால் இக்குழந்தைகளின் எடைநிலை, உணவுப் பழக்க வழக்கங்கள், சுகாதார நிலை, வளர்ச்சி நிலை ஆகியவை சிறப்புக் கவனம் செலுத்தி கண்காணிக்கப்படுகிறது. இக்குழந்தைகளுக்கு கூடுதல் உணவுக்காக மக்கள் மற்றும் தொண்டு நிறுவன உதவியுடன் ரூ.41,389 செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்துடன் 3–5 வயதுக்குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்களுக்கு மக்கள் பங்கேற்பின் மூலம் இணை உணவு (பழவகைகள், தானியங்களில் தயார் செய்யப்பட்ட உணவு வகைகள்) ஆகியவை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 12,112 குழந்தைகளும் (3–5 வயது) 6,887 வளர் இளம் பெண்களும் பயனடைந்துள்ளனர். 3–5 வயதுக் குழந்தைகளுக்கு ரூ.13,472 செலவில் 2396.720 கி.கி. மற்றும் வளர் இளம் பெண்களுக்கு ரூ.5,507 செலவில் 1320.450 கி.கி. உணவுப் பொருட்கள் மக்கள் பங்கேற்பின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டப் பணியாளர் மூலம் பெற்றோரால் புறக்கணிக்கப்பட்ட பெண் சிசுக்களை அரசு தொட்டில் குழந்தைத் திட்டத்தில் சேர்க்கப்படுகிறது. பெற்றோர்களுக்கு பெண் குழந்தைகளை பராமரிக்க நிதி உதவிகளும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் வழங்கப்படுகிறது.

வளர் இளம் பெண்களுக்கு இரத்தசோகை நோயைத் தடுப்பதற்காக இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

மக்களின் ஆரோக்கியமான நிலையே நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக உள்ளது. எதிர்கால சந்ததியினர் ஆரோக்கியமாக வாழவும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் உயிர் மூச்சாக விளங்கும் இத்திட்டத்தின் சேவையை சேலம் மாவட்ட மக்கள் சிறப்பாக பயன்படுத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**- மு.நா.கிருட்டிணசாமி,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம்.



*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை இந்தியாவுக்கான போலந்து நாட்டுத் தூதர் டாக்டர் கிறிஸ்டாப் இக்னேஷி மஜ்கா அவர்கள் 13—6—2003 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். மும்பையிலுள்ள போலந்து தூதரக அதிகாரி திரு. மராக் மொரான் உடன் உள்ளார்.*

ஈரோடு மாவட்டத்தில்

# அனைவருக்கும் கல்வி இயக்கம்

ஈரோடு மாவட்டத்தில் அனைவருக்கும் கல்வி இயக்கம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கமான 5 வயது நிரம்பிய அனைவரையும் 2003–ஆம் ஆண்டிற்குள் பள்ளியில் சேர்த்தல், பள்ளியில் சேர்க்கப்பட்ட அனைவரையும் 2007ஆம் ஆண்டிற்குள் 5ஆம் வகுப்பு வரை படிக்க வைத்தல், 2010–ஆம் ஆண்டிற்குள் 8ஆம் வகுப்பு முடிக்கச் செய்தல், அனைவருக்கும் வாழ்க்கைக்கு உகந்த தரமான கல்வியை உறுதி செய்தல், சமூகப் பொருளாதார அடிப்படையிலோ, ஆண், பெண் இன வேறுபாட்டினாலோ கல்வி செயல்பாடுகள் குழந்தைகளிடையே நிலவும் இடைவெளியை முற்றிலும் நீக்குதல், அனைத்துக் குழந்தைகளையும் 2010ஆம் ஆண்டில் இடை நிறுத்தமின்றி தக்க வைத்தல் போன்ற உயர்ந்த குறிக்கோள்களின் அடிப்படையில் அனைவருக்கும் கல்வி இயக்கம் முனைப்புடன் நடைபெற்று வருகிறது.

அனைவருக்கும் கல்வி இயக்கம் ஓர் மக்கள் இயக்கமாக இம்மாவட்டத்தில் உருவாகியுள்ளது. பொதுமக்களின் முழு ஒத்துழைப்போடு சிறப்பாக நடைபெற்று வருகிறது. அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் 3 வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடம் 30, ரூ.135 இலட்சம் செலவிலும், 2 வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடங்கள் 30, ரூ.12 இலட்சம் செலவிலும் ஆக 72 பள்ளிக் கட்டடங்கள் ரூ.261 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளன. வட்டார வளர்ச்சி மைய கட்டடங்கள் ரூ.42 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளன. 155 பள்ளிகளில் தலா ரூ.20 ஆயிரம் மதிப்பில் கழிப்பிட வசதி செய்யப்பட்டுள்ளது. 113 பள்ளிகளில் தலா ரூ.15 ஆயிரம் மதிப்பில் குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 1545 தொடக்கப் பள்ளிகள், 280 நடுநிலைப்பள்ளிகள், 132 உயர்நிலைப் பள்ளிகள், 128 மேல்நிலைப்பள்ளிகள் ஆக 2085 பள்ளிகளில் அனைவருக்கும் கல்வி இயக்கம் நடைபெற்று





வருகிறது. மேலும் 1 முதல் 8–ஆம் வகுப்புகளில் பணியாற்றும் 6,538 ஆசிரியர்கள் பணியிடங்கள், அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் 32 தொடக்கப் பள்ளிகள், 11 நடுநிலைப் பள்ளிகள், 20 வட்டார வள மையங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. 20 வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் அமைக்கப் பட்டுள்ளனர். 140 ஆசிரியர் பயிற்றுநர்கள் நியமிக்கப்பட்டு, தொடக்கப் பள்ளிகள் இல்லாத இடங்களில் 28 பள்ளிக் காப்புறுதித் திட்ட மையங்கள் அமைக்கப்பட்டு, 812 குழந்தைகள் கல்வி பயின்று வருகிறார்கள். எஸ்.சி./எஸ்.டி. சிறப்பு பயிற்சி மையங்கள் 1,820 அமைக்கப்பட்டு இதில் 41,564 மாணவ மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். 6–ஆம் வகுப்பில் பயிலும் 34380 குழந்தைகளுக்கும், ரூ.15 இலட்சம் செலவில் 6, 7 மற்றும் 8–ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவியருக்குத் தொழிற்கல்வி பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது. இயலாதோருக்கான கல்வித் திட்டத்தில் அடையாளம் காணப்பட்டோர் 2,665. இதில் பள்ளியில் சேர்க்கப்பட்டவை 524 குழந்தைகள் ஆவார்கள். கற்றல் கற்பித்தல் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 3795. வகுப்பறை கற்பித்தல் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 2685. பள்ளித் தலைமை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் 967 ஆசிரியர்கள் ஆவார்கள்.

சென்ற ஆண்டு ரூ.9.16 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, ரூ.6.87 கோடி செலவு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்றுள்ளது. இந்த ஆண்டு ரூ.14 கோடி நிதி ஒதுக்கீடு கேட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நபார்டு வங்கித் திட்டத்தின் கீழ் பள்ளிகளுக்குக் குடிநீர், கழிப்பிடம், ஆய்வகம் போன்ற அடிப்படை தேவைகளுக்கு ரூ.172 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. தங்கும் விடுதிகள் கொண்ட 6 பள்ளிக் கட்டடம் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்ற நபர்கள் பள்ளியில் படிப்பை நிறுத்தியவர்கள் மீண்டும் பள்ளியில் சேர்ந்து படிக்கவும், பள்ளியில் சேராதவர்களைப் புதியதாகப் பள்ளியில் சேர்க்கவும், அவர்கள் தொடர்ந்து படிப்பைத் தொடரவும் வசதியாக உடல் ஊனமுற்ற நபர்களுக்குத் தனியாக ஒரு மருத்துவ முகாம் இம்மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரின் பெரும் முயற்சியின் காரணமாக ஏற்பாடு செய்யப்பட்டு, ஈரோடு, கோபி, தாராபுரம் கோட்டங்களில் முகாம் நடைபெற்றது.

இம்முகாம்களில் ஊனமுற்ற நபர்கள் கணக்கெடுப்பு மேற்கொண்டதில் உடல் ஊனமுற்ற 2619 மாணவ மாணவியர்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இவர்களை அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் பள்ளியில் சேர்க்க நடவடிக்கை மேற்கொண்டதோடு இவர்களுக்குத் தனியார் தொண்டு நிறுவனங்கள் உதவியோடு மூன்று சக்கர சைக்கிள், காதொலி கருவி, சக்கர நாற்காலி போன்ற உபகரணங்கள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் மாணவர்கள் சேர்க்கை நடைபெற வேண்டும் என்பதற்காக ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் தோறும் பேரணிகள், தெருமுனை பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் முனைப்பு முகாம்கள் நடத்தி கிராமப்புறங்களில் உள்ள பெற்றோர்களுக்குக் கல்வித் திட்டத்தின் அவசியம் குறித்து எடுத்துக் கூறி அதன் அடிப்படையில் பள்ளியில் சேர்த்து மாணவ, மாணவியர்கள் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் மாவட்ட நிருவாகமும், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் முழு முயற்சி எடுத்துள்ளன. ஊராட்சிகள் தோறும் கல்விக் குழுக்கள் அமைத்து அனைவருக்கும் கல்வி திட்டத்தின் அவசியம் குறித்து பிரச்சாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் அனைவருக்கும் கல்வி இயக்கம் ஒரு மக்கள் இயக்கமாக மாறி 2007–ஆம் ஆண்டிற்குள் அனைவரையும் 5–ஆம் வகுப்பு வரை படிக்கச் செய்தல் போன்ற சீரிய பணியில் என்.எஸ்.எஸ்., என்.சி.சி. மாணவர்கள், சாரணர் இயக்கம், இளைஞர் செஞ்சிலுவை இயக்கம் போன்றவற்றின் சேவையையும், மகளிர் சுய உதவிக் குழுக்கள், பல்வேறு தொண்டு நிறுவனங்களின் உதவியையும் பெற்று 100% மாணவர் சேர்க்கையை உறுதி செய்து இம்மாவட்டம் முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டமாக உருவாக்கிட மாவட்ட ஆட்சியர் திரு.கா.பாலச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறார்.

**- எம்.ஆர். லிங்கம்**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்
ஈரோடு.



# காவல்துறை அதிகாரிகளோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 24.6.2003 அன்று காவல் துறை நிருவாகத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்து, காவல் துறை உயர் அதிகாரிகளோடு விரிவான ஆய்வு மேற்கொண்டார்கள். காவல் துறை இயக்குநர், கூடுதல் காவல் துறை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), கூடுதல் காவல் துறை இயக்குநர் (நுண்ணறிவு), கூடுதல் காவல் துறை இயக்குநர் (குற்றப் புலனாய்வு), சென்னை மாநகர காவல் துறை ஆணையர், கூடுதல் காவல் துறை இயக்குநர் (மாநில குற்றப் புலனாய்வு), கூடுதல் காவல் துறை இயக்குநர் (நிருவாகம்), கூடுதல் காவல் துறை இயக்குநர் (தலைமையிடம்) மற்றும் நான்கு மண்டல காவல் துறைத் தலைவர்கள் ஆகியோர் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தலைமைச் செயலாளர் (பொறுப்பு) மற்றும் உள்துறைச் செயலாளர் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். குற்றம், சட்டம் மற்றும் ஒழுங்கு, பெண்களுக்கு எதிரான குற்றங்கள், போக்குவரத்து நிருவாகம், நெடுஞ்சாலை ரோந்துப் பணி, பயிற்சி மற்றும் குறை தீர்ப்பு உள்ளிட்ட காவல் துறை நிருவாகத்தின் அனைத்து அம்சங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

148 அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் செயல்பாடுகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டன. இந்த நிலையங்களில் உள்ள பெண் காவலர்களுக்கு ஒரு குழுவுக்கு 25 பேர் வீதம் குற்றப் புலனாய்வு மற்றும் கலந்தாய்வு குறித்த பல்வேறு அம்சங்களிலும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். காவலர் பயிற்சிக் கல்லூரியால் இதற்காகச் சிறப்பு பாடத் திட்டம் வடிவமைக்கப்படும். பெண்களுக்கெதிரான அனைத்து குற்றங்களையும் பதிவு செய்வதோடு அதிக அளவில் குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தருவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களின் விசாரணையை விரைவுபடுத்துவதற்கு மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம் ஆகிய நான்கு நகரங்களில் மகளிர் நீதிமன்றங்களை நிறுவுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். சென்னையிலும், கோயம்புத்தூரிலும் தற்போது உள்ள மகளிர் நீதிமன்றங்களோடு கூடுதலாக இந்த நீதிமன்றங்களும் அமைக்கப்படும். இவ்வாறு புதிய மகளிர் நீதிமன்றங்கள் நிறுவுவதன் மூலம் தமிழகம் முழுவதும் இது செயல்படுத்தப்படுவது உறுதி செய்யப் படும்.

சாலை விபத்துக்களைக் குறைக் கவும், விபத்துக்களினால் பாதிக்கப் படுவர்களுக்கு விரைந்து சிகிச்சை கிடைக்கவும் ஓர் ஒருங்கிணைந்த செயல் திட்டம் வகுக்கப்பட்டு, அது விரைவாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். சிறப்பான கவனத்திற் குரியவை எனக் கண்டறியப்பட்டுள்ள 80 நெடுஞ்சாலைப் பகுதிகளில் தீவிர ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். இவ்வாறு தீவிர ரோந்துப் பணி மேற்கொள்ள வசதியாக Radar Gun, Breath Analyser மற்றும் முதலுதவிப் பெட்டி ஆகிய நவீனக் கருவிகளைக் கொண்ட, பிரத்யேக வடிவமைப்புடன் கூடிய 80 ரோந்து வாகனங்கள் புதியதாக வாங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்தார்கள். 4 கோடி ரூபாய் செலவில் இது செயல்படுத்தப்படும். நெடுஞ் சாலையில் முறையான ரோந்துப் பணியை உறுதி செய்யப் போதிய எரிபொருள்

"தமிழகக் காவல்துறை, இந்தியாவிலேயே சிறந்த காவல் துறையாக விளங்குகிறது. இந்தப் பாரம்பரியச் சிறப்பை இன்னும் உயர்த்துகின்ற, உயரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது, இந்த அரசு.

காவல்துறையை வலிமைப்படுத்துவது, நவீனப்படுத்துவது, புதிய சாதனைகளைப் படைக்க ஊக்கப்படுத்துவது இவற்றில் இந்த அரசு முனைப்போடு ஈடுபட்டு வருகிறது."

*– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் 2003–2004ஆம் ஆண்டு காவல்துறை மானியக் கோரிக்கையின் மீது ஆற்றிய பதிலுரையிலிருந்து...*

ஒதுக்கீட்டுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள்.

நெடுஞ்சாலை ரோந்துப் பணியிலும், விபத்தில் பாதிக்கப்படுவோரைப் பராமரிப்பதிலும், திறம்படப் பணியாற்றும் வகையில் தொடர்புள்ள துறைகள் நல்லிணக்கத்தோடு செயல்படுவதை உறுதிப்படுத்த காவல் துறை, போக்குவரத்துத் துறை, நெடுஞ்சாலைத் துறை, நல்வாழ்வுத் துறை ஆகிய துறைகளின் அதிகாரிகளைக் கொண்ட ஒரு கூட்டுக் குழு அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

கண்மூடித்தனமாகவும், அலட்சியப் போக்கிலும் வாகனங்கள் ஓட்டப்படுவதைத் தடுக்கும் நடவடிக்கையாக ஓட்டுநர் உரிமங்களுக்குக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மறு சான்றிதழ் அளிக்கும் முறையை அறிமுகப்படுத்துமாறும் மாநிலத்தின் குற்ற நிலைமை குறித்துவிரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கொடுங்குற்றங்களைக் கட்டுப்படுத்த ஏதுவாக, ஜாமீனில் வெளி வர முடியாத பிடியாணை பிறப்பிக்கப்பட்டும், கைது செய்யப்படுவதிலிருந்துநழுவிச்செல்கின்றவர்களைக் கைது செய்ய தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், பதுங்கியிருக்கும் குற்றவாளிகளைப் பிடிப்பதற்கும் தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். ஒவ்வொரு ஆணையரகத்திலும் உள்ள, திட்டமிட்டு நிகழ்த்தப்படும் குற்றங்களைத் தடுக்கும் பிரிவிடம் அந்தப் பகுதிகளில் பதிவு செய்யப்பட்ட கொடுங் குற்றங்களைப் புலனாய்வு செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

கண்மூடித்தனமாகவும், அலட்சியப் போக்கிலும் வாகனம் ஓட்டும் அபாயத்தைத் திறம்பட தடுப்பதற்காக, தகுந்த சட்டத்தைக் கொண்டு வருவதற்கான சாத்தியத்தை ஆய்வு செய்யுமாறு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதுபோல, திருமண ஆசை காட்டி அப்பாவிப் பெண்களை ஏமாற்றும் நிகழ்வுகளைத் தடுக்க தகுந்த சிறப்புச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டு, பெண்களுக்கு மிக விரைவான நீதி வழங்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

மாவட்டங்களில் குறை தீர்க்கும் முறைக்கு உரிய முக்கியத்துவம் அளிக்குமாறு மண்டல காவல் துறை தலைவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். பெறப்பட்ட முறையீட்டு மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். முறையீட்டு மனுக்கள் மீது குறை தீர்ப்பது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள விரிவான வழிகாட்டி முறைகளைப் பின்பற்றி, காவல்துறை அதிகாரிகள், மாநிலத்தில் காவல் துறையினரின் மனோதிடம் உயர்ந்த நிலையில் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள். ★

**தினவர்த்தமானி**
**சுதேசபிமானி**
**உதயதாரகை**
**உதயாதித்தன்**
**உரைகல்லு**
**வித்யாதர்ப்பணம்**
**பாலியர்நேசன்**
**சைவஉதயபானு**
**விஞ்ஞானவர்த்தினி**
**ஜநவிநோதிநி**
**சர்வஜனநேசன்**
**தேஜோபிமானி**

இவைகளெல்லாம் என்ன தெரியுமா? 19ஆம் நூற்றாண்டில் அதாவது 1800களில் வெளிவந்த சில தமிழ்ப் பத்திரிக்கைகளின் பெயர்களே இவைகள்.

- "தமிழ் இதழியல் வரலாறு" நூலிலிருந்து...

# தஞ்சாவூர் மாவட்டத்தில்
# சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் மகளிர் சுகாதார வளாகம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் நடப்பு ஆண்டில் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய போதுமான அளவு கல்வி அறிவு, தேவையான அளவு சுகாதார வசதி இருப்பின் "தரமான வாழ்வு" அமையவழிவகுக்கும் என்ற அடிப்படையில் அனைவருக்கும் கல்வித் திட்டம் மற்றும் சிறப்பு மருத்துவ முகாமின் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் தரமான வாழ்வு அமைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புற மக்களின் நலன் கருதி கிராம மக்கள் கண்டறிந்திராத சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு சிறப்பு மருத்துவ முகாமில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அதிக அளவு பொருட் செலவுகளைச் செய்தாலும் சிறப்பு மருத்துவர்களின் சிகிச்சையைப் பெற முடியாத இக்கால கட்டத்தில் ஒவ்வொரு துறையிலும் வல்லமை பெற்ற மருத்துவர்களை கிராமப்புறங்களுக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தது இச்சிறப்பு முகாமின் பெருமையாகும். கிராமப்புற மக்களுக்கு ஏற்பட்டுள்ள நோயின் தன்மை கூடத் தெரியாமல் அவதிப்பட்ட மக்களுக்கு நோயின் அறிகுறி அறிந்து சிகிச்சை பெற்றுள்ளது மிகப் பெரிய வாய்ப்பாகும். இருதயநோய், புற்றுநோய், நீரழிவுநோய் போன்ற நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை பெற்றுள்ள பொது மக்கள் ஏராளம். அதிக அளவில் பொருட் செலவு செய்து சோதனை செய்யும் ஸ்கேன் பரிசோதனை இ.சி.ஜி. போன்ற சிகிச்சைகள் கூட இம்முகாமில் இடம் பெற்றது.



22 இலட்சம் மக்கள்தொகை கொண்ட தஞ்சாவூர் மாவட்டத்தில் 14 சிறப்பு முகாம்கள் மூலம் 29 ஆயிரத்து 995 நபர்கள் பரிசோதனை செய்து கொண்டுள்ளார்கள். இவற்றில் 2 ஆயிரத்து 56 நபர்களுக்கு இருதய நோய் இருப்பதையும், 870 நபர்களுக்கு புற்றுநோய் உள்ளதையும், 1,527 நபர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பதையும் கண்டறிந்து 448 நபர்களுக்கு ஸ்கேன் பரிசோதனையும், 1,642 நபர்களுக்கு இ.சி.ஜி.பரிசோதனையும் செய்யப்பட்டுள்ளது. இம்முகாம் மூலம் ரூ.4 இலட்சத்து 45 ஆயிரத்து 645 மதிப்புள்ள மருந்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு 580 நபர்களுக்கு குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையத்தின் உதவியுடன் 354 தாய்மார்களுக்கு பிரசவம் பார்க்கப்பட்டுள்ளது. மலேரியா காய்ச்சலுக்கு 53 ஆயிரத்து 497 நபர்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. குடும்பநல அறுவைச் சிகிச்சைக்காக 9 இடங்களில் குடும்பநல சிகிச்சை அரங்குகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**நல்வாழ்வுப் பணிகள்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் தலா ரூ.4.5 இலட்சம் மதிப்பில் 55 துணை சுகாதார மையங்கள் ரூ.2.3 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ளன.

தாய்சேய் மரணத்தைக் குறைப்பதற்காக சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு கருத்தரங்கம் நடத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரூ.60 ஆயிரம் மதிப்பில் இத்திட்டப் பணிகள் நடத்தப்பட்டுள்ளது. ரூ.33 இலட்சம் மதிப்பில் களப்பணியாளர்களுக்கு இரு சக்கர வாகனம் வாங்க கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. ரூ.17 இலட்சம் மதிப்பில் துணை சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்கள் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு துணை சுகாதார மையங்களிலும் உள்ள அறுவை சிகிச்சை அரங்குகளில் பிரசவம் பார்ப்பதற்குத் தேவையான மயக்க மருந்து கொடுக்கும் உபகரணங்கள், இரத்த அழுத்தமானி, கெய்சர், கேஸ் அடுப்பு போன்ற வகைகளுக்காக ரூ.10 இலட்சத்து 82 ஆயிரம் மதிப்பில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## போலியோ சொட்டு மருந்து

கடந்த ஆண்டு 2 இலட்சத்து 74 ஆயிரத்து 908 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 2 இலட்சத்து 76 ஆயிரத்து 732 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து முதல் தவணையாக வழங்கப்பட்டுள்ளன. ரூ.37 இலட்சம் மதிப்பில் 18 ஆயிரத்து 403 போலியோ சொட்டு மருந்துக் குப்பிகள் வழங்கப்பட்டுள்ளன. 6 ஆயிரத்து 780 பணியாளர்களின் உதவியோடு 1,510 முகாம்கள் அமைக்கப்பட்டு இப்பணி சிறப்பாக செயல்படுத்தப் பட்டது. தஞ்சாவூர் மாவட்டம் குடும்ப நலப்பணியில் முதலிடம் வகிக்கிறது. தாய் சேய் இறப்பு விகிதத்தை வெகுவாகக் குறைத்துள்ளது. போலியோ நோய் இல்லாத மாவட்டமாக்கிடும் வகையில் மருத்துவர்களின் உதவியோடு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

தமிழக அரசின் சிறப்புத் திட்டங்களால் ஊரகப் பகுதிகளில் வாழும் மகளிரின் சுகாதார நலன் காக்கும் திட்டமாக ஒவ்வொரு ஊராட்சியிலும் தலா ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு நவீன சுகாதார வளாகம் கட்டும் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் நவீன சுகாதார வளாகம் 10 கழிப்பறைகள், 3 குளியலறைகளுடன் கட்டப்படும். ஒவ்வொரு அறையும் மின்விளக்கு மற்றும் தண்ணீர் வசதியுடன் தனியே மின்விசைப் பம்பும், நீர்த் தேக்கத் தொட்டியும் அமைந்த அனைத்து வசதிகளும் கொண்டது.

மகளிருக்கான நவீன கழிப்பறை கட்டும் திட்டத்தில் 2001–2002ஆம் நிதியாண்டில் முதல் கட்டமாக தஞ்சாவூர் மாவட்டத்தில், ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் 14 ஊராட்சி ஒன்றியங்களிலும் 14 மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவ்வசதி மேலும் 296 ஊராட்சிகளில் ரூ.620 இலட்சம் மதிப்பீட்டில் அரசு உத்தரவிற்கிணங்க செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டு பணிகள் துவக்கப்பட்டுள்ளன. இந்த சுகாதார வளாகத்தை முறையாகப் பயன்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வுப் பிரச்சார இயக்கம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் மீதமுள்ள 287 ஊராட்சிகளிலும் அடுத்த ஆண்டு சுகாதார வளாகம் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.

### சுகாதார மேம்பாடு

வீடு, சமுதாயம் மற்றும் நாட்டு முன்னேற்றத்தில் மகளிர் முக்கிய பங்கு வகிக்கின்றனர். பல்வேறு மகளிர் முன்னேற்றத் திட்டங்கள் மூலம் கிராமப் பகுதிகளில் வசிக்கின்ற பெண்கள் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் சுகாதார நிலையில் மேம்பாடடைகின்றனர். கிராமப் பகுதிகளில் வசிக்கும் பெண்களின் சுகாதார நிலையை பெரிதும் முன்னேற்றுவதற்கென தமிழ்நாடு அரசு நவீன சுகாதார வளாகங்களை பல்வேறு கிராமங்களில் உருவாக்கி வருகின்றது.

மகளிர் சுயஉதவிக் குழுவிலுள்ள 5 அல்லது 6 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து சுகாதாரக்குழு என்ற பெயரில் நவீனக் கழிப்பறை வளாகத்தை முறையாக நிருவாகம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

கழிப்பறை மற்றும் குளியலறையைப் பயன்படுத்தும் பயனாளிகளிடமிருந்து தலைக்கு மாதம் ஒரு தொகை வசூல் செய்து இத்தொகையை கழிப்பறை பராமரிப்பதற்கும் சிறு சிறு செலவுகளை (மின்விளக்குகளை மாற்றுதல், சிறு சிறு பழுதுகளை சீர்செய்ய, பினாயில், சோப்புப் பவுடர் வாங்குவது போன்றவைகளை) ஈடுசெய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கழிப்பறை உபயோகப்படுத்துவோர் மாதம் ஒருமுறை கலந்துரையாடல் கூட்டம் ஏற்பாடு செய்து சுகாதார செய்திகளைப் பரிமாறிக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தண்ணீர் மற்றும் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துதல், பயன்படுத்திய பிறகு அனைத்து




அறைகளையும் பூட்டுதல் போன்ற செயல்களைத் தவறாமல் கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குளியல் தண்ணீர் வெளியேறி அசுத்தமாகத் தேங்குவதைத் தவிர்க்க காய்கறித் தோட்டங்கள் அமைக்க அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

மகளிர் சுகாதார வளாகத்தை மிகச்சிறந்த முறையில் பராமரித்துப் பயன்படுத்தும் மகளிர் குழுக்களுக்கு மூன்று மாதத்திற்கொரு முறை ஊக்கப் பரிசுகள் வழங்க ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

---

– கே.பி.நல்லதம்பி
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்
தஞ்சாவூர்.

# தூத்துக்குடியில் ரூ.4,000 கோடி செலவில் அனல்மின் நிலையம்

## – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் முன்னிலையில் ஒப்பந்தம்



இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்கிட அனைத்துத் துறைகளிலும் மிகச் சிறப்பான முன்னேற்றம் அடையும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வகுத்துத் தந்த 15 அம்சத் திட்டத்தில் எரிசக்திப் பாதுகாப்பு 9 ஆவது அம்சமாகும்.

இதன் அடிப்படையில், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்ற அத்தியாவசிய உள் கட்டமைப்பான மின்துறையின் விரிவான மற்றும் உறுதியான வளர்ச்சிக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்டு வரும் பல்வேறு முன் முயற்சிகளின் ஓர் அங்கமாக, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும், தமிழ்நாடு மின்சார வாரியமும் இணைந்து, தூத்துக்குடியில் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 1000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் புதிய அனல் மின் நிலையம் அமைப்பதற்கான (Memorandum of Understanding) புரிந்துணர்வு ஒப்பந்தம் 19–6–2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மற்றும் மாண்புமிகு மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு.கரியமுண்டா அவர்கள் ஆகியோர் முன்னிலையில் கையெழுத்தானது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக அதன் தலைவர் திரு.கே.ஞானதேசிகன் அவர்களும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் சார்பாக அதன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.எஸ்.ஜெயராமன் அவர்களும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும், தமிழ்நாடு மின்சார வாரியமும் 89:11 என்ற பங்குத் தொகை விகிதத்தில் கூட்டு முயற்சியில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும். தூத்துக்குடியில், தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி இந்த மின் திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் மதிப்பீடு சுமார் 4,000 கோடி ரூபாய் ஆகும். இந்தத் திட்டம், 2007–2008ஆம் ஆண்டில் இயங்கத் தொடங்கும். இதன் மூலம் உற்பத்தியாகும் 1000 மெகாவாட் மின்சாரம் முழுவதும் தமிழ்நாடு மின் தொகுப்புக்கே கிடைக்கும். இதன் மூலம் தமிழ்நாட்டின் தென்பகுதியில் மேலும் தரமான, தங்கு தடையற்ற மின்சாரம் கிடைத்திட வழி ஏற்படும்.

இந்தத் திட்டம் மத்திய அரசின் மின் சக்தி நிறுவனத்திற்கும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குமிடையே கையெழுத்தான இரண்டாவது கூட்டு முயற்சித் திட்டமாகும். இதற்கு முன்பான முதல் கூட்டு முயற்சிக்கான ஒப்பந்தம் தேசிய அனல் மின் கழகத்திற்கும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் இடையே 5,000 கோடி ரூபாய் செலவில் வட சென்னையில் 1000 மெகாவாட் திறனுடைய அனல் மின் திட்டத்தை நிறுவ 12–7–2002 அன்று ஏற்பட்டதாகும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில்

# பல்துறை பணிவிளக்க முகாம்

காஞ்சிபுரம் பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளியில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் பல்துறை பணி விளக்க முகாம் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து நடத்தப்பட்டது. இம்முகாமினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள் துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கினார். இந்தப் பல்துறை பணி விளக்க முகாமில் செய்தி மக்கள் தொடர்புத்துறை, மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், மகளிர் திட்டம், கூட்டுறவுத்துறை, வேளாண்மைத்துறை, குடிநீர் வடிகால் வாரியம், டான்பெட், மாவட்ட தொழில் மையம், கால்நடை பராமரிப்புத்துறை, தீயணைப்புத்துறை, குடும்பநலத்துறை, பொதுசுகாதாரத்துறை, கதர் மற்றும் கிராமத்தொழில் வாரியம் போன்ற 21 துறைகளின் சார்பில் அமைக்கப்பட்ட அரங்குகளை அமைச்சர் தொடங்கி வைத்தார். கடந்த இரண்டாண்டுகளில் இத்துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகளையும், திட்டங்களையும், இலட்சியங்களையும், செயல் பாடுகளையும் விளக்கும் வகையில் அமைக்கப் பட்டிருந்த அரங்குகள் காண்பவர் கண்ணையும் கருத்தையும் கவர்வதாக இருந்தது.




மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப, அவர்கள் பேசும்போது, "காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி துறையின் மூலம் வளர்ச்சிப் பணிகள் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரையில் 10,000க்கு மேற்பட்ட பணிகள் இத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் 9,000 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. ஏறத்தாழ 1,50,000 மகளிர் உறுப்பினர்களாக சேர்ந்து சீரிய பணியாற்றி வருகிறார்கள். இத்திட்டத்தினால் பெண்களின் வாழ்க்கையில் மிகப் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது. சிறுசேமிப்புத் துறையில் குறியீட்டை விஞ்சி நாம் செய்துள்ள சாதனைகளைப் பாராட்டி ரூ.5 கோடி மதிப்புள்ள நிதியினை, அரசு வளர்ச்சி பணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்று அனைத்துத் துறைகளிலும் சிறப்பான சாதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள், "விவசாயிகள் வாங்கிய கடனில் ரூ.310 கோடி வட்டி கடனையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்துள்ளது, தமிழக அரசு. தஞ்சாவூர், திருப்போரூர், நாகப்பட்டினம், டெல்டா விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென ரூ.164 கோடி முதல்வர் வழங்கியுள்ளார். இதன்மூலம் 1 இலட்சம் விவசாயிகள் பயனடைந் துள்ளனர். நீலகிரி தேயிலை உற்பத்தி யாளர்களின் தேயிலைக்கு உரிய விலையைக் கொடுக்க வேண்டு மெனக் கருதி ஊட்டி தேயிலையை நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்துள்ளது. இதன் மூலம் ரூ.25 கோடி மதிப்புள்ள தேயிலை விற்பனை செய்யப்பட்டது.

விவசாயிகளுக்குத் தீபாவளிப் பரிசாக ரூ.21 கோடியை முதல்வர் வழங்கினார். 25,000

நெசவாளர்களுக்கு வேட்டி, சேலை நெய்யும் பணியை உருவாக்கி கொடுத்துள்ளார்.



கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.27.5 கோடி வட்டி மானியத் தொகையை முதல்வர் வழங்கி யுள்ளார். கடந்த காலங்களில் கூட்டுறவு சங்கங்களில் தேங்கியிருந்த பட்டு சேலைகளின் விலையில் 45 சதவீதம் முதல் 55 சதவீதம் வரை தள்ளுபடி விற்பனை செய்ததில் ரூ.117 கோடிக்கு பட்டு சேலைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் நெசவாளர் சமுதாயம் முன்னேற வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

கடுமையான வறட்சி தமிழகத்தில் நிலவினாலும், கடுமையான நிதி நெருக்கடியிலும் ரூ.341 கோடிக்கு நலத்திட்ட உதவிகளை அரசு வாரி வழங்கியுள்ளது.

381 ஊராட்சி ஒன்றியங்களிலும், ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 30 படுக்கைகள் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட, மருத்துவமனை அமைக்க தலா ரூ.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ.80 இலட்சம் மதிப்பில் சி.டி. ஸ்கேன் கருவி, ஒவ்வொரு மாவட்ட தலைமை மருத்துவமனையிலும் பொருத்த அரசு ஏற்பாடு செய்துள்ளது.

பாரதி கண்ட கனவை நனவாக்க ஆண்களுக்கு நிகராக பெண்கள் உயர வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில் மகளிர்க்குப் பல சலுகைகளை இந்த அரசு வழங்கியுள்ளது.

பிளஸ் 1, பிளஸ் 2 ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.12 கோடி செலவில் 47,980 மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது.

745 குழந்தைகளை பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் அரசு தத்து எடுத்து வளர்த்து வருகிறது.

தமிழகத்தை பெண் சிசுக் கொலை இல்லாத மாநிலமாக உருவாக்கிட தமிழக முதல்வர் அவர்கள் பாடுபட்டு வருகிறார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பட்டு ஜரிகை தரத்தைக் கண்டறிய ரூ.24 இலட்சம் செலவில் நவீன எக்ஸ்ரே கருவியை தமிழகத்தில் 3 இடங்களில் அமைக்க உத்தரவிட்டுள்ளார். நெசவாளர்களுக்கு உதவும் வகையில் 83 கோடி ரூபாய்க்குத் தள்ளுபடி விலையில் பட்டுத் துணிகளை விற்றுத் தர மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார் என்று குறிப்பிட்டார்

இவ்விழாவில் நான்கு நபர்களுக்குத் தொழில் தொடங்க ரூ.1,65,000 கடனாக மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள் பல்துறை பணி விளக்க முகாமில் சிறந்த அரங்குகளுக்கு பரிசினை வழங்கினார்கள். அப்போது, "தமிழகத்தில் மக்கள் நலனுக்காக அனைத்துத் துறைகளிலும் சிறப்பான திட்டங்கள், செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக மகளிர் சுய உதவிக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 50 ஆயிரம் சுயஉதவிக்குழுக்கள் துவக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் ஆர்வமுடன் பங்கேற்று வருகின்றனர்" எனத் தெரிவித்தார்.

கூட்டுறவுத் துறைக்கு முதல் பரிசும், மாவட்ட ஊரக வளர்ச்சித்துறைக்கு 2ஆம் பரிசும், வேளாண்மைத்துறைக்கு 3ஆம் பரிசும் வழங்கப்பட்டுள்ளன. மகளிர் திட்டம், தோட்டக்கலைத்துறை, பேரூராட்சித்துறை ஆகிய துறைகளுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன. மற்ற அனைத்துத் துறைகளுக்கும் நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பல்துறை பணி விளக்க முகாம் நடைபெற்ற அனைத்து நாட்களிலும் அரசின் சாதனைகளை விளக்கிடும் வீடியோ படக்காட்சி நடைபெற்றது.

- ந. இளங்கோ,
*செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,*
*காஞ்சிபுரம்.*

★ ★ ★

# இந்தியாவிலேயே முதன்முறையாக தருமபுரியில் தமிழ்வழி புவி தகவல் அமைப்பு

இந்தியாவிலேயே முதன்முறையாக கிராமங்களில், வளர்ச்சியில் தொலை உணர்வு மற்றும் தமிழ் வழி வாயிலான கம்ப்யூட்டர் தகவல் அமைப்பு தருமபுரி மாவட்டத்தில் வடிவமைப்பு செய்து நிறுவப்பட்டுள்ளது.

சமூகப் பொருளாதார மற்றும் இயற்கை வளங்களின் பார்வையில் ஒரு நாட்டின் வளர்ச்சியை தீர்மானிப்பத்தில் கிராமங்களும் அதன் கட்டமைப்புகளும் மிக முக்கியத்துவம் வகிக்கின்றன. செயற்கைக் கோள்கள் மூலம் பெறப்பட்ட தொலை உணர்வு, அறிவியல் தொழில் நுட்பத்தில் மிகச் சிறந்த நிலையில் உள்ள இந்தியா, இத்தொழில்நுட்பத்தை கிராமங்களின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைய பயன்படுத்தி வருகிறது. இதன்மூலம் நாட்டின் இயற்கை வள ஆதாரங்களைப் பற்றிய தகவல்களை துல்லியமாக வரைபடங்கள் மூலம் அறியமுடியும்.

சென்னை அண்ணா பல்கலைக்கழக தொலை உணர்வு மையம், செயற்கைக்கோள் தொழில் நுட்பத்தின் உதவியுடன் தமிழகத்தில் நிலநீர் வளங்களையும், மண் வகைகளையும், நில மேம்பாட்டிற்கான திட்டங்களையும் தயாரிப்பதில் ஈடுபட்டு வருகிறது. தற்போது இந்நிறுவனம் தேசிய தொலை உணர்வு முகமையுடன் இணைந்து செயலாற்றி தருமபுரி மாவட்டத்திற்கான சமூக பொருளாதார தகவல்கள் உள்ளடக்கிய இயற்கை வள ஆதாரங்கள் பற்றிய கம்ப்யூட்டர் புவி தகவலமைப்பை தமிழ் வழி வாயிலாக வடிவமைத்து வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம், ஊரக வளர்ச்சி முகமை மூலம் நிறுவப்பட்டுள்ளது.

இத்தகவலமைப்பின் மூலம் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தத் தேவையான தகவல்களைப் பெறவும், திட்டங்களை செயல்படுத்துவதில் கிராமங்கள் மற்றும் நீர்வடிப் பகுதிகள் முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்தமுடியும்.

இந்த தகவலமைப்புத் திட்டம் குறித்த கருத்தரங்கு இந்திய அளவில் முதன்முறையாக தருமபுரி மாவட்டத்தில் வடிவமைக்கப்பட்டு இதுபற்றிய கருத்தரங்கு மாவட்ட ஆட்சியர் திரு.மு.அ.சித்திக், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கைத் துவக்கி வைத்து மாவட்ட ஆட்சியர் பேசும்பொழுது:

"தேசிய தகவல் கட்டமைப்பு, அண்ணா பல்கலைக்கழக தொலை உணர்வு மையம் ஆகியவை இணைந்து இந்தியாவிலேயே முதன் முறையாக தருமபுரி மாவட்டத்திற்குத் தமிழ்வழி புவி தகவலமைப்பு வடிவமைப்பைத் தந்துள்ளது நமக்குக் கிடைத்தற்கரிய ஒன்றாகும்.




இத்தகவலமைப்பு அரசுத் துறைகளின் எல்லாவிதமான திட்ட செயல்பாடுகளுக்கும் தேவையான பல தகவல்களை வழங்குகிறது. உடனடியாக விவரங்கள் கிடைப்பதால் கால விரயம் தவிர்க்கப்பட்டு விரைந்து சரியான திட்ட அணுகு முறையுடன் கருத்துக்கள் உடனுக்குடன் தயாரிக்க முடிகிறது.

இக்கட்டமைப்பு அரசுப் பணிகளுக்கு திட்டமிடலுக்கு மட்டுமல்லாமல் செயலாக்கத்திற்கும் பல வழிகளிலும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

மாவட்டத்தில் உள்ள அனைத்துத் துறை அலுவலர்களும் முன் மாதிரியாக வடிவமைக்கப்பட்டுள்ள தமிழ் வழி தகவல் அமைப்பை முழுமையாகப் பயன்படுத்தித் திட்ட செயல்பாடுகளை மேம்படுத்தக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

## ஓசூர் குரோமோர் பயோடெக் (திசு வளர்ப்பு) நிறுவனம்

இன்றைய சூழலில், உயிரியல் தொழில் நுட்பமானது மிகவும் பிரபலமாகி வருகிறது. நம் நாட்டின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், நல்ல தரமான விளைபொருள்களை உற்பத்தி செய்யவும், உயிரியல் தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

''திசு வளர்ப்பு'' – உயிரியல் தொழில் நுட்பத்தின் ஒரு கிளையாகும். திசு வளர்ப்பு மூலம் உருவாக்கப்பட்ட பயிர்களான வாழை, கரும்பு மற்றும் பல செடிகள் விவசாயிகளின் நிலத்தில் நல்ல விளைச்சலைப் பெற்று தந்துள்ளன. எனவே, திசுவியல் தொழில்நுட்பமானது. ஏட்டில் மட்டுமல்லாமல், செயல்முறையிலும் நிரூபிக்கப் பட்டுள்ளது. பழைய முறையிலான வேளாண்மையை விட, நவீன தொழில் நுட்பத்தோடு கூடிய திசு வளர்ப்பு முறையில் வளர்த்த செடிகள் அதிக இலாபம் தரக்கூடியதாக இருப்பதை, நம் நாட்டு விவசாயிகள் அனுபவபூர்வமாக உணர்ந்துள்ளனர். திசு வளர்ப்பு செடிகளை ஏற்றுமதி செய்வதன் மூலம், நம் நாட்டுக்கு அதிக அளவிலான அந்நிய செலாவணி ஏற்பட்டு உள்ளது.

குரோமோர் பயோடெக் என்னும் திசு வளர்ப்பு நிறுவனம் திசு வளர்ப்பு மூலம் பல அரிய செடிகளை உருவாக்கி, தமிழ்நாட்டில் மட்டுமல்லாது இந்தியாவிலேயே முதன்மையான திசு வளர்ப்பு நிறுவனமாகத் திகழ்கிறது.

திசு வளர்ப்பு தொழில்நுட்பம், தோட்டக்கலை பயிர்கள், மலைப் பயிர்கள், வனத்துறை பயிர்கள், பூ செடிகள், மூலிகைச் செடிகள் ஆகிய பல துறைகளைச் சேர்ந்த செடிகளை உற்பத்தி செய்வதில் முதன்மை வகிக்கிறது.

### திசு வளர்ப்பின் நன்மைகள்

ஒரு புதிய ரகத்தை வெளியிடுவதற்கு முன்பு தேவைப்பட்டதை விடவும் மிகக் குறைந்த காலத்தில், திசு வளர்ப்பின் மூலம் செடிகளை உற்பத்தி செய்ய முடிகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட தாய்செடியிலிருந்து எடுக்கப்படும் திசுக்கள் குறைந்த அளவேயாயினும், அவற்றிலிருந்து பல ஆயிரக்கணக்கான செடிகளைத் தயாரிக்க முடிகிறது.



திசு வளர்ப்பு மூலம் உற்பத்தி ஆகும் செடிகள், ஒரே சீராக, ஒரே வயதுடையதாகவும் இருப்பதால், அனைத்து செடிகளிலிருந்தும் ஒரே நேரத்தில் சிறந்த அறுவடையை பெறமுடிகிறது.

### குரோமோர் பயோடெக் நிறுவனம்

குரோமோர் பயோடெக் நிறுவனம், ஒசூரில் பகுதி 2இல் அமைந்துள்ள ஒரு திசு வளர்ப்பு ஆராய்ச்சி கூடம் ஆகும். குரோமோரில், 60 விதமான செடிகளை திசு வளர்ப்பு மூலம் உற்பத்தி செய்து, விற்பனை செய்து வருகிறார்கள். இங்கு சுமார் 6 மில்லியன் செடிகள் வரை உற்பத்தி செய்யக்கூடிய தொழில் நுட்ப வசதிகள் உள்ளன.

175 பேர்கள், திசு வளர்ப்பில் தகுதி பெற்று பணியாட்களாக இங்கு வேலை செய்கிறார்கள். அலங்கரிக்கும் செடிகள் பல இங்கிருந்து ஆஸ்திரேலியா, ஹாலந்து, ஜெர்மனி, ஜப்பான், அமெரிக்கா, ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

குரோமோரில் வாழையில் மட்டும் 12க்கும் மேற்பட்ட ரகங்கள் திசு வளர்ப்பு மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செய்த வாழை செடியின் மூலம், தமிழ்நாட்டைச் சேர்ந்த விவசாயிகள் பலர் ஒரு ஏக்கரிலிருந்து ஒரு வருடத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை இலாபம் அடைந்துள்ளனர்.

தோட்டக்கலை மற்றும் வேளாண்மைப் பயிர்களான வாழை, கரும்பு, மூலிகைச் செடிகளான சீனிதுளசி, சிறுகுறிஞ்சான், முசிலி, கத்தாழை, வாசனைச் செடிகளான பச்சோலி, ரோஸ்மேரி, தைம், மர வகைச் செடிகளான சவுக்கு, மூங்கில் கருவேலமரம், உயிரியல் எரிபொருளான ஜட்ரோபா, வனத்துறை பயிர்களான பவ்ரோனியா, சவுக்கு, தைல மரம் போன்றவை குரோமோரில் உள்ள செடி வகைகள் ஆகும்.

குரோமோர் நிறுவனத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ள பல தொழில் உத்திகள் இன்றைய நவீன உலகத்திற்கு ஏற்றதாகவும், அதேசமயம் நம் நாட்டு பொருளாதார நிலைக்கு உகந்ததாகவும் உள்ளது. ஆகையால் இங்கு உற்பத்தி ஆகும் செடியின் விலையும் குறைவாகவே உள்ளது.

- தா. மனோகரன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி

## தெரியுமா உங்களுக்கு...?

★ ஆண் வெட்டுக்கிளிகள் மட்டுமே கிரீச் கிரீச் என்று ஒலி எழுப்புகின்றன.

★ முதலையால் நாக்கை வெளியே நீட்ட முடியாது.



★ தென் அமெரிக்காவில் உள்ள அமேசோன் நதி மீன் வகையான ஈல், ஒரு குட்டி மின் நிலையமாகவே இயங்குகிறது. உயிரினங்களிலேயே அதிக மின்சாரத்தை உடலில் உண்டாக்கும் உயிரினம் இது. 600 வோல்ட் மின்சாரத்தை உருவாக்கும் இந்த ஈல் 10 அடி தூரத்தில் நீந்தும் மனிதனை ஷாக் அடித்துக் கொன்றுவிடுமாம்.

★ துருவக்கரடியின் தோலின் நிறம் கருப்பு. ஆனால் அதன் மயிரின் நிறம் வெண்மை. ஒரு மயிரை எடுத்து வெளிச்சத்தில் பார்த்தால் அது ஒளிபுகும் கண்ணாடி போல் இருக்கும்.



★ கடலுக்கு அடியில் 13 ஆயிரம் அடி ஆழத்தில் அபீஸ் என்ற மிகப் பெரிய சமவெளிப் பிரதேசம் இருக்கிறது. அங்கு மலைகள், படுகுழிகள், எரிமலைகள் என எல்லாம் இருக்கின்றது.

★ சூரிய வெளிச்சம் கடலுக்கடியில் செல்லும்போது மங்கலாகிக் கொண்டே வரும். 100 அடி வரை தான் லேசான வெளிச்சம் இருக்கும். 1000 அடிக்கு மேல் வெளிச்சம் இருக்காது.



# விவசாயிகளின் துயர்போக்கும் அரசின் மாற்றுப்பயிர் பலநோக்குத் திட்டம்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா**

சென்ற ஆண்டில் தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்ததன் காரணமாக, தமிழ்நாடு மிகவும் மோசமான பருவ நிலைமையைச் சந்திக்க நேரிட்டது. அத்துடன், காவிரி நீரில் நமக்குச் சேர வேண்டிய சட்டப்படியான பங்கைத் திறந்து விடாமல் கர்நாடக அரசு தொடர்ந்து பிடிவாதம் செய்ததால், காவிரி வடிநிலப் பகுதிகளும் செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட கடுமையான வறட்சியினால் பாதிக்கப்பட்டன. கர்நாடகம், தண்ணீரைத் திறந்துவிடத் தவறியதன் காரணமாக எழுந்த சூழ்நிலையை அடுத்து சிறப்பு வறட்சி நிவாரணத் திட்டத்தை வகுக்க தஞ்சாவூரில் 24.6.2002 அன்று நான் ஓர் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினேன். ரூ.164.18 கோடி செலவில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் பொது மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது. 2002ஆம் ஆண்டு தீபாவளியையொட்டி, ரூ.21 கோடி செலவில் காவிரி வடிநிலப் பகுதி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 10 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்குப் பரிசுப் பொருட்கள் வழங்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தினேன். சம்பாப் பயிர் பொய்த்ததையடுத்து ரூ.217.09 கோடி மொத்தச் செலவில் காவிரி வடி நிலப் பகுதியைச் சேர்ந்த 9 மாவட்டங்களில் வேலை வாய்ப்பை உருவாக்கும் சிறப்புத் திட்டம் ஒன்றுக்கு நான் ஒப்புதல் வழங்கினேன். இந்தத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட 10 இலட்சம் குடும்பங்களுக்கு, 1.2.2003 முதல் திங்கள் ஒன்றுக்கு 30 கிலோ அரிசி இலவசமாக வழங்கும் சிறப்புத் திட்டம் ஒன்றையும் நான் தொடங்கி வைத்தேன். மாநிலம் முழுவதிலும் தென்மேற்குப் பருவமழையும், வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்ததால், என்னுடைய அரசு, சென்னை நீங்கலாக உள்ள 28 மாவட்டங்களையும் வறட்சி பாதிப்பு மாவட்டங்களாக அறிவித்தது. பயனுள்ள வேலைவாய்ப்பு உருவாக்கம், குடிநீர் வழங்கல், துணை சத்துணவு ஆகிய நிவாரண நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த அனுபவத்தின் அடிப்படையில், நீர்த்தேக்கங்களில் உள்ள நீரின் இருப்பு நிலையையும், பருவமழை தொடங்குவது கால தாமதமாவதையும் கருத்திற்கொண்டு, நடப்பு வேளாண் பருவத்திற்காக செயல் திட்டம் ஒன்றை வகுக்குமாறு வேளாண் துறைக்கும் தமிழ்நாடு வேளாண்பல்கலைக் கழகத்திற்கும் நான் உத்தரவிட்டிருந்தேன். இன்றைய (5.6.2003) நிலவரப்படி, மேட்டூர் அணையின் நீர் மட்ட அளவு 26.19 அடி ஆகும். கடந்த ஆண்டு இதே நாளன்று இருந்த அளவான 38.37 அடியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது மிகவும் குறைவானது ஆகும். கால முறைப்படி நீரைத் திறந்து விடாத கர்நாடகத்தின் பிடிவாதப் போக்கு, கடந்த ஆண்டு குறுவைப் பருவத்தில் மிகவும் இடர்ப்பாடான சூழ்நிலையை ஏற்படுத்தியது. வழக்கமான குறுவை நெல் சாகுபடியைத் தொடங்குவதா, வேண்டாமா என்ற ஒரு நிச்சயமற்ற நிலையை நமது விவசாயிகளிடம் இது ஏற்படுத்தியது.

வழக்கமாக, காவிரி வடி நிலப் பகுதியைச் சேர்ந்த மாவட்டங்களில், 5 இலட்சம் ஏக்கர் பரப்பளவில், குறுவை நெல் பயிரிடப்படுகிறது. இதில், 1.25 இலட்சம் ஏக்கர் பரப்பளவில், குறிப்பாக, மயிலாடுதுறை, சீர்காழி, கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் வட்டங்களில், வடிமுனைக் குழாய் கிணற்றுப்பாசனம் மூலம் நெற்பயிர் பயிரிடப்படுகின்றது. வடிமுனைக் குழாய் கிணற்று நீரை உபயோகிக்கும் விவசாயிகளுக்கு, ஏடிடி–36, ஏடிடி–43, ஐஆர்–50 போன்ற குறுகிய கால நெல் ரகங்களைப் பயிரிடும்படி ஆலோசனை அளிக்கப்படுகின்றது. வழக்கமாக நீண்டகால நெல் ரகங்களின் சாகுபடிக்கு 150 நாட்கள் ஆகும். இந்த ரக நெற்பயிர்களை 105 நாட்களிலேயே அறுவடை செய்துவிட முடியும்.

வடிமுனைக் குழாய்க் கிணறுகள் மூலம் பெறப்படும் நீரின் அளவைப் பொறுத்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் பரிந்துரைத்துள்ள சிறப்புத் தொழில் நுட்ப உத்திகளைப் பின்பற்றுமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்தத் தீவிர நெல் சாகுபடித் திட்டம் (SRI) பல்வேறு நடைமுறைத் தொகுப்புகளை உள்ளடக்கியதாகும். இதனால், அதிக விளைச்சல் கிடைப்பதோடு, செலவும் குறையும். இந்தத் தொழில் நுட்பத்தை, இந்தக் குறுவைப் பருவத்தில் பிரபலப்படுத்த

வேளாண்மைத்துறை நடவடிக்கைகள் எடுக்கும். அதிக பலன்களைப் பெற இந்தத் தொழில்நுட்பத்தைப் பின்பற்றுமாறு நமது விவசாயிகளை நான் கேட்டுக் கொள்கிறேன்.

கர்நாடகம் உரிய நேரத்தில் தண்ணீரைத் திறந்துவிடும் என்ற நிலை தொடர்ந்து நிச்சயமற்று நிலவுவதால், வடிமுனைக் குழாய்க்கிணறு மூலம் நீர் பெறப்படாத ஏனைய வடிநிலைப் பகுதிகளில், பயறு வகை, எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள் போன்ற ஏனைய மாற்றுப்பயிர்களை இந்தப் பருவத்தில் பயிரிடுமாறு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. உளுந்து, பச்சைப் பயறு, மொச்சை போன்ற பயறு வகைகள் வடிநிலப் பகுதி மாவட்டங்களுக்கு உகந்த பயிர்களாகும். இதேபோன்று, வடிநிலப் பகுதிகளைச் சேர்ந்த பாசனம் பெறாத பகுதிகளில் நிலக்கடலை, எள் ஆகியவையும் பயிரிடப்படலாம்.

குறுகிய கால நெற்பயிர் ரகங்களுக்கான விதைகளை போதிய அளவு இருப்பில் வைத்திருக்க நான் வேளாண்மைத் துறைக்கு ஆணையிட்டுள்ளேன். விவசாயிகள், தங்களுக்குத் தேவையான விதைகளை, அருகிலுள்ள வேளாண்மைக் கிடங்குகளிலிருந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள் போன்ற மாற்றுப் பயிர்களின் விதைகள் போதுமான அளவு கொள்முதல் செய்யப்பட்டு இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

இந்த உத்தியைப் பிரபலப்படுத்த பல நோக்குத் திட்டம் ஒன்றை மேற்கொள்ளுமாறு வேளாண்மைத் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். வேளாண்மைத் துறையின் விரிவாக்கப் பிரிவு, இந்த உத்தியை, நேரடித் தொடர்பு மூலமாகவும் மக்கள் தொடர்பு சாதனங்கள் வாயிலாகவும், பரந்த அளவில் விளம்பரப்படுத்தும்.

குறுவைச் சாகுபடிக்கு ஆயத்தம் ஆகும் விதத்தில், வேளாண்மைத்துறையானது, பிற துறைகளுடன் இணைந்து, களைகள் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் கோடை உழவு முறை, ஈரப்பதத்தைத் தக்க வைத்தல், பருவ மழை தொடங்குவதற்கு முன்னதாக விதைப்பை உறுதி செய்வதற்காக சத்து நிறைந்த பண்ணைத்தொழு உரம் இடுதல், போன்ற வேளாண் பொருளாதார நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது.

சென்ற ஆண்டு, குறுவைப் பருவத்தில் காவிரி வடிநிலப் பகுதிக்கான சிறப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 7,000 விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கான ஒரு திட்டத்தை நான் அறிவித்தேன். இத்திட்டம் மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. எனவே, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று மாவட்டங்களில் நடப்பு குறுவைப் பருவத்தில், மேலும் 7,000 விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நான் ஆணையிட்டுள்ளேன். இந்தத் திட்டம் ரூ.40 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

மழை நீரைச் செவ்வனே பயன்படுத்திக் கொள்வதற்கு வசதியாக எனது அரசு ரூ.20 கோடி செலவில் வடிநிலப் பகுதி மாவட்டங்களில் 6,700 பண்ணைக் குட்டைகளை ஏற்படுத்தும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2,600 குட்டைகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டு விட்டன. எஞ்சிய குட்டைகள் விரைவில் அமைக்கப்படும். சென்ற ஆண்டு, 1,139 பண்ணைக் குட்டைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த ஆண்டு அமைக்கப்படும் புதிய குட்டைகளையும் பயன்படுத்தி, விவசாயிகள் குறுவைப் பருவத்தை சமாளிக்கும் வகையில், கிடைக்கின்ற பருவ மழைத் தண்ணீர் முழுவதையும் தேக்கி வைத்து கொள்ள இயலும்.

என்னுடைய வழிகாட்டுதலின்படி, பயறு கிராமத் திட்டத்தின் கீழ், 17 மாவட்டங்களில் தீவிர பயறு சாகுபடியை மேற்கொள்ள வேளாண்மைத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் மூலம் புதிய ரகங்கள் பிரபலப்படுத்தப்படும்; விளைச்சலும் பெருகும்.

என்னுடைய அரசு, உழவர் சமுதாயத்தினரின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

நான் அறிவித்துள்ள விரிவான நடவடிக்கைகள், இந்தப் பருவத்தில் விவசாயிகள் வெற்றிகரமாக, வேளாண் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். எந்தச் சூழலையும் எதிர்கொள்ளத் தேவையான மன உறுதிக்கும், முற்போக்குப் பார்வைக்கும் பெயர் பெற்ற தமிழக விவசாயப் பெருமக்கள், எனது அரசின் துணையோடு எந்தத் தடைகள் வந்தாலும் வெற்றி பெறுவார்கள். ★



பெண்களின் நிலை
உயரும்போது,
ஆண்களின் நிலையும்
உயரும். இவ்விருவரின்
நிலையும்
உயரும்போது,
சமுதாயத்தின் நிலையே
உயர்ந்து விடும்.

– மகாத்மா காந்தி

## பெருந்தலைவரைப் பற்றி பேரறிஞர்...



காமராசர் தம்முடைய பணிகளின் மூலம் நாட்டின் தரத்தை உயர்த்த முயன்றார்; தமிழர்களுக்கு நற்பணி ஆற்றினார்; தமிழர்கள் பெருமைப்படத்தக்க நல்ல காரியங்களைச் செய்தார். கல்லூரியில் அவர் படித்துப் பட்டம் பெறவில்லையே தவிர – அவர் படிக்கவே இல்லை என்று பொருள் கொள்ளக் கூடாது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவர் படித்துக்கொண்டுதான் இருப்பார்.

– அறிஞர் அண்ணா

## தியாகத்தின் சின்னம்



தியாகத்தின் அடையாளச் சின்னம் காமராஜர். போராடிப்போராடி வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டுக் கொண்டு தன்னை உயர்த்திக் காட்டியவர் காமராஜர். மக்களுக்குத்தான் சட்டமே ஒழிய, சட்டத்துக்காக மக்கள் அல்ல என்பதைச் செயலில் காட்டியவர். ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, அழுத்தப்பட்ட, தூக்கியெறியப்பட்ட மக்களின் உள்ளத்திலே உறுதியும், வீரமும், துணிவும், அறிவும் வர செயல்பட்டவர் காமராஜர்.

*– டாக்டர் எம்.ஜி.ஆர்.*

## காமராஜர் உதிர்த்த முத்துக்கள்



★ பெண்கள் விழிப்படைந்தால் குடும்பம் முன்னேறும். கிராமங்கள் முன்னேறும்; தேசமே முன்னேறும்.

★ நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையோடு பாடுபடுவதிலும்தான் நமது முன்னேற்றம் இருக்கிறது.

★ நாடு முன்னேற வறுமையும் அறியாமையும் போகவேண்டும். இவை இரண்டும் போனாலன்றி நாடு முன்னேறியதாகச் சொல்ல முடியாது.

★ யானை சாப்பிடும் போது ஒரு கவளம் சோறு கீழே சிந்தி விடுகிறது. யானைக்கு ஒரு கவளம்தான் நட்டம். ஆனால் அதுவே இலட்சக்கணக்கான எறும்புகளுக்கு ஆகாரமாகக் கிடைக்கிறதே! இதுபோல அளவுக்கு மீறி சம்பாதிப்பதில் கொஞ்சம் வரி கொடுத்தால் பல பேர்களின் பட்டினி தீர வழி செய்யலாமே!



## ஏழைக்கும் கல்வி

**வா**ழும்போதே வரலாறான காமராஜர் அவர்கள் கூர்ந்த அரசியல் மதிநுட்பம், எதார்த்தம் ஆகியவற்றின் அடிப்படையில் சமுதாயத்தின் விதியை நிர்ணயித்த தலைவர்களுக்கு உதாரணமாக விளங்கக்கூடியவர். அவர் உண்மையிலேயே ஒரு மக்கள் தலைவர். மக்களுக்கு என்ன தேவை என்பதை உணர்ந்தவர். மக்களின் தேவைகளையும் குறிக்கோளையும் பிரதிபலிக்கும் கொள்கைகளையும் வகுத்தவர். கல்வியின் பலன்கள் பரம ஏழைக்கும் கிடைக்க வேண்டும் என்று விரும்பினார்.

*– மாண்புமிகு முதலமைச்சர்*
*செல்வி ஜெ ஜெயலலிதா*
*அவர்கள்*

# தொழில்நுட்பக் கல்வியில் தமிழகம் முன்னணி

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்




"தனித்தன்மை வாய்ந்த அண்ணா பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா நிருவாக வளாகத்திற்கு அடிக்கல் நாட்டுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். நாட்டின் உயர்கல்வி பயிற்சி நிறுவனங்களில் முன்னோடி நிறுவனமாக விளங்குவதோடு பன்னாட்டு அளவில் கல்வித்துறையில் தனக்கென்று ஓர் இடத்தை அண்ணா பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

## பன்னாட்டுத்தரம்

இந்த வளாகம் பல்வேறு செயல்பாடுகளுக்கும் பயன்பாட்டிற்கும் ஏற்ற வகையில் பன்னாட்டு தரத்தில் கட்டப்பட உள்ளது. ஒரு இலட்சம் சதுர அடி பரப்பளவில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் இந்த வளாகம் சமீபத்திய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி முறைகளின் மையமாக விளங்கும். மேலும் இந்த வளாகத்தில் நிருவாக அலுவலகம், கூட்டுத் தொழில்நுட்ப மையம், பயிற்சியாளர் மேம்பாட்டு மையம் மற்றும் நிருவாகம் தொடர்பான பல்வேறு துறைகளும் இதில் செயல்பட உள்ளது. இந்தப் புதிய வெள்ளிவிழா நிருவாக வளாகம் நவீன கட்டடக்கலை அழகிலும் மற்றும் பன்னாட்டு அளவில் கல்வித்துறையில் போதுமான மரியாதையையும் பெற்றுத் தரும் என்பதில் எனக்கு எள்ளளவு சந்தேகமும் இல்லை.

கடந்த 1978ஆம் ஆண்டு அப்போதைய தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், 4 கல்லூரிகளை ஒருங்கிணைத்துத் தற்போதுள்ள அண்ணா பல்கலைக்கழகத்தை தனித்தன்மை வாய்ந்த ஒரு பல்கலைக்கழகமாக அமைக்க எடுத்த முடிவின் அடிப்படையில் துவக்கப்பட்டு தற்போது 25 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

## நம்முடைய பங்களிப்பு

கடந்த 1984ஆம் ஆண்டு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், தொழில்நுட்பக் கல்வி வழங்குவதில் தனியாரின் பங்களிப்பும் தேவை என்பதை உணர்ந்து ஒரு கொள்கையை அறிமுகப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து தமிழகம் தொழில்நுட்பக் கல்வித்துறையில் இந்தியாவிலேயே முன்னணியில் விளங்குகிறது.

தமிழ்நாட்டில் தற்போது 250 பொறியியற் கல்லூரிகள் உள்ளன. இது நாட்டின் மொத்த பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கையில் 20 சதவீதமாகும். சென்னை ஐ.ஐ.டி. உள்பட தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் இளநிலை மற்றும் முதுநிலை பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்குகின்றன. இந்த வகையில் பயிற்சி பெற்று வரும் தொழில்நுட்ப வல்லுநர்கள் தென்னிந்தியாவின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான முதுகெலும்பாக மட்டுமல்லாது பன்னாட்டு அளவில் தகவல் தொழில்நுட்பப் புரட்சிக்கும் மூல காரணமாக இருந்து வருகின்றனர்.




பன்னாட்டுச்சந்தையில் தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகள், வர்த்தக நிறுவனங்கள், அலுவலக அடிப்படைப் பணிகள், மெடிக்கல் டிரான்ஸ்க்ரிப்ஷன், டிஜிட்டல் கண்டண்ட் டெவலப்மெண்ட் மற்றும் கால் சென்டர் துறைகள் போன்றவற்றுக்குத் தேவைப்படும் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களை நாம் நம்மிடம் உள்ள ஆங்கிலம் பேசும் மாணவ சமூகத்தையும், தகவல் தொழில்நுட்ப அறிவு கொண்ட மனிதவளத்தையும் வழங்கி நம்முடைய பங்களிப்பைப்பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

என்னுடைய தலைமையிலான அரசு தமிழகத்தை நாட்டிலேயே அந்நிய முதலீட்டை ஈர்க்கும் மாநிலங்களில் முதல் மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டுள்ளது. அந்நிய நேரடி முதலீட்டை தகவல் தொழில்நுட்பம், உயிர் தொழில்நுட்பம், நெசவுத்தொழில், மோட்டார் வாகனங்கள், வேளாண் விளைபொருள் பதப்படுத்துதல் ஆகிய துறைகளில் அதிக அளவில் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

## இரண்டாவது கட்ட பொருளாதார சீர்திருத்தம்

தற்போதைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி தகவல் தொழில் நுட்பத்தை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விரிவுபடுத்தும் வகையிலும், இண்டர்நெட் வசதியை மாநிலத்தின் அனைத்துப் பகுதியில் உள்ளவர்களும் பயன்படுத்தும் வகையிலும் லோக்கல்–லூப்–வயர்லெஸ் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது என்றும், அதே நேரத்தில் தமிழகத்தின் இரண்டாம் நிலை நகரங்களான கோவை, திருச்சி, மதுரை மற்றும் சேலம் ஆகியவற்றை தகவல் தொழில்நுட்ப மையங்களாக மாற்றவும் நாங்கள் உறுதி கொண்டுள்ளோம்.

உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் கொள்கைகள் அமல்படுத்தப்பட்டதால் பன்னாட்டு அளவில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அடுத்து பல்வேறு உற்பத்தி நிறுவனங்கள் தங்களுடைய தொழிற்சாலைகளை வெவ்வேறு இடங்களுக்கு மாற்றி வருகின்றன. இதுபோன்று மாற்றியமைக்கப்படும் உற்பத்தி நிறுவனங்களை தமிழகத்தில் அமைப்பதற்கு ஏதுவாக என்னுடைய தலைமையிலான அரசு இரண்டாம் கட்ட பொருளாதார சீர்திருத்தத்தை செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து செயல்பட்டு வருகிறது.

அதிகாரப் பகிர்வு, பணி–பரிவர்த்தனை காலத்தை குறைப்பது, செலவுகள், வரிச்சீர்திருத்தம் மற்றும் அடிப்படைக் கட்டுமானத் துறைகளான சாலை மற்றும் எரிசக்தித் துறைகளில் முழுமையான பலனைப் பெறும் வகையில் மாற்றியமைக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## தமிழகம் முதலிடம்

2003ஆம் ஆண்டு துவக்க காலங்களில் நேரடி அந்நிய முதலீட்டை ஈர்த்துக் கொண்ட மாநிலங்களில் நாட்டிலேயே தமிழகம்தான் முதலிடம் பெற்றுள்ளது என்ற தகவல், இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். தமிழகத்தில் உள்ள அறிவுசார்ந்த மனிதவளத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலும் அவர்களுடைய திறமைகளையே முதலீட்டாக்கி அதன்மூலம் வேலை வாய்ப்பு அளிக்கத் தேவையான கொள்கையைத்தான் என்னுடைய தலைமையிலான தமிழக அரசு தற்போது செயல்படுத்தி வருகிறது.

தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும், பொறியாளர்களுக்கும் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்பு வசதிகளை எண்ணற்ற அளவிலும் முடிவில்லாத வகையிலும் என் தலைமையிலான அரசு உருவாக்கிக் கொடுத்துள்ளது.

ஆங்கிலக் கவிஞர் டபிள்யூ. பி. ஈட்ஸ் "கல்வி என்பது குடத்தில் இடப்பட்ட விளக்கல்ல; அது வாழ்க்கையில் ஒளி ஏற்றக்கூடிய ஒளிவிளக்கு" என்று கூறியுள்ளார். தற்போது பெரும்பாலான தொழில்நுட்ப கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் குறிப்பாக பொறியியல் பயிற்சி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவிகளைக்கூட தங்களுடைய சிந்தனைத் திறனை பயன்படுத்தப் பழக்கப்படுத்தாமல் மனப்பாடம் செய்வதை ஊக்குவிக்கின்றனர்.

அண்ணா பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்கள் தங்களுடைய பாடத் திட்டங்களைத் தொடர்ச்சியாக ஆய்வு செய்து அலசி ஆராய்ந்து தேவைப்பட்டால் பயிற்சி திட்டங்களையும் மற்றும் பயிற்சி முறைகளையும் மாற்றியமைக்க முன்வர வேண்டும். இதனால் மாணவ மாணவிகளை ஊக்கப்படுத்துவதுடன் உண்மையிலேயே அவர்களுடைய எண்ணங்களில் உள்ள கண்டுபிடிப்புகளையும் திறமைகளையும் வெளிக்கொணர உதவியாக இருக்கும். இதுபோன்ற நடவடிக்கைகளை நாம் எடுப்பதன் மூலம் அறிவிற்சிறந்த மாணவ மாணவிகளை நம்மால் உருவாக்க இயலும்.

## எனது கனவு

எதிர்பார்ப்புகளின் மையமாகவும், வாய்ப்புகள் கிடைக்கும் இடமாகவும், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் ஏற்ற வகையில் தமிழ்நாட்டை மாற்றி அமைக்க வேண்டும் என்பதே என்னுடைய கனவாகும். அண்ணா பல்கலைக்கழகத்தின் இளம் மாணவ மாணவிகள் கனவு காண்பதற்கும் தங்களுடைய கனவை நனவாக்குவதற்கும் அவற்றைச் செயல்படுத்துவதற்கும் ஏற்ற வாய்ப்புகளை உருவாக்கித் தரும் வகையில் இங்கே பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருவதை நான் பார்க்கிறேன்.

ஆகவே, அண்ணா பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா நிருவாக கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த கட்டிடத்தில் கட்டப்படும் ஒவ்வொரு செங்கல்லும், கனவுகளையும் நம்பிக்கைகளையும் கொண்டதாக இருக்க வேண்டும்.

கல்வி என்பது மிகவும் சக்திவாய்ந்த ஓர் ஆயுதம்; அதனைப் பயன்படுத்தி இந்த உலகத்தை மாற்றியமைக்க உங்களால் முடியும்" என்ற நெல்சன் மண்டேலா கூற்றுப்படி, பொறியாளர் மற்றும் விஞ்ஞானியாக வர வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வளாகத்திற்கு வரும் ஒவ்வொருவருக்கும் இந்த அண்ணா பல்கலைக் கழக வெள்ளி விழா நிருவாக வளாகம் சிறப்பான தரமான கல்வியை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்,
9–6–2003 அன்று,
அண்ணா பல்கலைக்கழக வெள்ளி விழா நிருவாக
வளாகத்திற்கு அடிக்கல் நாட்டி
ஆற்றிய உரை.

### வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு புதுப்பித்தல் குறித்து சிறப்புச் சலுகை

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 1–1–2001 முதல் 31–12–2002 வரையுள்ள காலத்தில் பதிவைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு அரசாணை நிலை எண்.51, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (என்.2) துறை, நாள்: 28–4–2003இன்படி சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி மேற்படி காலத்திற்குள் புதுப்பிக்கத் தவறியவர்கள் 27–7–2003க்குள் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்துக்கு வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டையின் நகலுடன் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமோ மனு செய்து தங்களது பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

# சிறப்பான வளர்ச்சிப் பாதையில் தேனி மாவட்டம்

நாட்டிலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்குவதற்கான புதியதோர் வளர்ச்சிப் பாதையை வகுக்கவும் அனைத்துத் துறைகளும் மேலோங்கி வீறுநடை போடவும் நமது தமிழக முதல்வர் அவர்கள் மேற்கொள்ளும் அயராத முயற்சிகளாலும் அரசின் நிதி ஒதுக்கீடுகளாலும் சிறப்பான திட்டங்களாலும் தேனி மாவட்டம் தலைநிமிர்ந்து வீறு நடை போடுகிறது.

2002–2003 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் வீடற்ற ஏழை ஆதிதிராவிடர்களுக்கு ரூபாய் 2,51,742 மதிப்பீட்டில் 376 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதி இல்லாத குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளை செய்திட ரூ.8 இலட்சம் ஒதுக்கீடு செய்து செலவிடப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூபாய் 13,63,267 மதிப்பீட்டில் 951 சைக்கிள்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன. கல்வி உதவித் தொகையாக 15,199 மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 49,02,616 செலவிடப்பட்டுள்ளது. பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் 5,40,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு 540 மாணவிகள் பயன் அடைந்துள்ளனர்.

2002–2003 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் ஏழை பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 12,000 மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 71.90 இலட்சம் செலவில் கல்வி உதவித் தொகையும், உயர் மதிப்பெண் பெற்ற பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட 47 மாணவ, மாணவியர்களுக்கு ரூபாய் 1.08 இலட்சம் பரிசுத்தொகையும் வழங்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் பெரியகுளம், கொத்தப்பட்டி, ரெங்கசமுத்திரம் மற்றும் ஓடைப்பட்டி ஊர்களில் பிற்படுத்தப்பட்டோர் நல அரசு மாணவர் விடுதி கட்டுவதற்கு ரூபாய் 1.28 கோடி அனுமதிக்கப்பட்டு பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்ட குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் செய்திட ரூபாய் 17.14 இலட்சம்



அனுமதிக்கப்பட்டு செலவிடப்பட்டுள்ளது. டாப்செட்கோ நிறுவனம் மூலமாக தனி நபர் கடன் ரூபாய் 17.14 இலட்சமும், டாப்கோ நிறுவனம் மூலம் சிறுபான்மையினருக்கு தனிநபர் கடனாக ரூபாய் 5 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் மகளிர் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பன்னிரண்டு தொண்டு நிறுவனங்கள் மூலமாக அமைக்கப்பட்ட 2691 சுயஉதவிக் குழுக்களில் 43,437 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். தேனி மாவட்டத்தில் உள்ள மகளிர் சுயஉதவிக்குழுக்களின் மொத்த சேமிப்பு ரூபாய் 4.43

கோடியாகும். மகளிர் திட்டத்தில் உள்ள சுயஉதவிக் குழுவினருக்கு பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் 25,000 வீதம் சுழற்சி நிதியாக 286 குழுக்களுக்கு ரூபாய் 71.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தொழில் செய்வதற்காக தொழிற் கடன் 110 குழுவினருக்கு ரூபாய் 1.59 கோடி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட முழுமையான வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 2002–2003 மற்றும் 2003–2004–ஆம் ஆண்டில் தேனி மாவட்டத்தில் 2000 புதிய சுயஉதவிக்குழுக்கள் அமைத்திடவும் இதுநாள்வரை குழுக்கள் அமைக்காத குடியிருப்புகள், தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருப்புகள், மலைவாழ் மக்கள் வாழும் குடியிருப்புகளில் குழுக்கள் அமைத்திடவும் 2000 மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கவும் அனைத்துக் குழு உறுப்பினர்களுக்கும் உறுப்பினர் பயிற்சியும், 4,000 மகளிருக்கு ஊக்குநர் பிரதிநிதி பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

தேனி மாவட்டத்தில் தாட்கோ மூலம் 2002–2003–ஆம் ஆண்டில் இந்து ஆதிதிராவிடர் மற்றும் மலைஜாதி பழங்குடியினர்கள் பயன்பெறும் வகையில் தனிநபர் கடன் மானியத்துடன் 920 நபர்களுக்கு ரூபாய் 76.30 இலட்சமும் குழு கடனாக மானியத்துடன் 459 சுயஉதவிக்குழுவிற்கு ரூபாய் 1,79,80,000மும் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு கசிவு நீர் குட்டை மற்றும் 24 தடுப்பு அணைகள் ரூபாய் 63.23 இலட்சங்கள் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஐந்து கால்நடை மருத்துவமனைகளுக்கான குடிநீர் திட்டம் ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டிலும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆண்டிபட்டி–சேடபட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூபாய் 74 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் தேனி மாவட்டத்தில் 55,220 பேர் பயனடைய உள்ளார்கள்.

நெடுஞ்சாலைத் துறை மூலம் 2002–2003ஆம் ஆண்டில் தேனி மாவட்டத்தில் 20 சாலைப் பணிகள் 66.40 கி.மீ–க்கு ரூபாய் 700.90 இலட்சமும் 3 பாலப் பணிகளுக்கு ரூபாய் 158.90 இலட்சமும் அனுமதி வழங்கப்பட்டு, சாலைப்பணிகள் முடிவு பெற்று உள்ளன.

தேனி மாவட்டத்தில் பெரியாறு அணைக்கட்டுப் பாசனப் பகுதியில் நெல்பயிர் இரு போகங்களில் மொத்தம் 12,000 எக்டேரும் இதரப் பகுதிகளில் 7,000 எக்டேரும் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது தவிர எல்லா வகையான தானியப் பயிர்கள் 34,400 எக்டேரிலும் பயறு வகை பயிர்கள் 18,000 எக்டேரிலும், பருத்தி 10,500 எக்டேரிலும் கரும்பு 14,000 எக்டேரிலும் இயல்பாக சாகுபடி செய்யப்படுகிறது.

தேனி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை மூலம் 13 ஏரிப் பணிகள் முற்றிலும் முடிக்கப்பட்டுள்ளன.

சமூகநலத் துறையின் 2002–2003–ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூபாய் 2,60,000மும், ஈ.வெ.ரா.மணியம்மையார் விதவை மகள் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூபாய் 98,000மும், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூபாய் 50,000மும் அன்னை தெரசா ஆதரவற்ற பெண் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூபாய் 14,000 மும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை மூலம் 2002–2003–ஆம் ஆண்டில் கடும் ஊனமுற்றோர் பராமரிப்பு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 270 நபர்களுக்கு மாதம் ரூபாய் 150 வீதம் ரூபாய் 4,86,000மும் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 374 மாணவ, மாணவியர்களுக்கு ரூபாய் 2,48,700மும், சுயவேலைவாய்ப்பு வங்கிக்கடன் அரசு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 62 நபர்களுக்கு ரூபாய் 1,45,000 மும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், திருமண உதவித் தொகை திட்டத்தின் கீழ் ரூபாய் 10,000மும், மூன்று சக்கர வண்டியும், சக்கர நாற்காலியும், காலிப்பர் மற்றும் காதொலி கருவியும், செயற்கைக் காலும் வழங்கப்படுகின்றன.

எட்டு இடங்களில் சிறப்பு மருத்துவ சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு 12,112 நோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். பள்ளி குழந்தைகள் நலத்திட்டத்தின் கீழ் குழந்தைகள் பரிசோதனை செய்யப்பட்டு, 5851 குழந்தைகள் மேல் சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டது. கடமலைக்குண்டு, கண்டமனூர், டொம்புச்சேரி, சிலமலை ஆகிய பகுதிகளில் நடமாடும் மருத்துவக்குழு மூலம் 16,161 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இரும்புச்சத்து மாத்திரை வழங்கும் திட்டத்தின் கீழ் 3 இலட்சம் மாத்திரைகள் 80,000 பெண்களுக்கு ரூபாய் 3,14,370 மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் 8 ஊராட்சி ஒன்றியங்களில் 104 சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு மொத்தம் 2,19,073 கால்நடைகளுக்கு ரூபாய் 3,74,576 செலவில் சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுபோன்று இன்னும் பல துறைகளின் பல்வேறு திட்டங்களால் பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பான திட்டங்களால் தேனி மாவட்டம் சீரான வளர்ச்சிப் பாதையில் விரைந்து செல்கின்றது.

**- உ.ல.ரவீந்திரன்,**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*தேனி.*

விழுப்புரம் மாவட்டம்

# வளர்ச்சிப் பாதையில் நடைபோடும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள்

"ஆணுக்கு நிகரென பெண்களைக் கொண்டால்
அறிவில் ஓங்கி இவ்வையகம் தழைக்கும்"

– என்று மகாகவி பாரதியார் அறுதியிட்டு உரைத்தார்.

"பெண்ணடிமை தீரும் மட்டும் பேசும் திருநாட்டில்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"

– என்று பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிட்டார்.

இந்த அரிய சிந்தனைகளுக்கு செயல்வடிவம் தரும் வகையிலும், மகளிர் பொருளாதார துறையில் வளர்ச்சி பெற்று தற்சார்பு நிலை அடையும் வகையிலும் தமிழ்நாட்டில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டு வளர்ச்சியடைந்து வருகிறது.

பெண்களுக்கு அதிகாரம் (Empowerment of Women) என்கின்ற உயரிய குறிக்கோளை எய்திட மகளிர் சுயஉதவிக் குழுக்களின் தோற்றமும் வளர்ச்சியும் வழிகோலியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலில் செயல்வடிவம் பெற்ற இத்திட்டம் விழுப்புரம் மாவட்டத்தில் செம்மையாக செயல்படுத்தப்படுகின்றது.

6439 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் சேமிப்புவைப்பு நிதியாக ரூ.31 கோடி வங்கிகளில் வைத்துள்ளனர். இவர்கள் தங்களுக்குள் கடனாக வழங்கிய தொகை ரூ.68.27 கோடி ஆகும்.



4324 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.16 கோடியே 35 இலட்சம் ரூபாய் இதுவரை வங்கி கடனாக வழங்கப்பட்டுள்ளது. 2840 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு பொன்விழா கிராம வளர்ச்சி திட்டத்தின் கீழ் சுழல்நிதி ரூ.7.1 கோடி வழங்கப்பட்டு விழுப்புரம் மாவட்டம் தமிழகத்திலேயே சுழல்நிதி மற்றும் வங்கியிலிருந்து ரொக்கக்கடன் வழங்குவதில் முதலாவது இடத்தை வகிக்கிறது.

தமிழக அரசின் இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டத்தின் கீழ் 279 மகளிர் தேர்வு செய்யப்பட்டு இதுவரை 224மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டு விழுப்புரம் மாவட்டம் மாநிலத்திலேயே முதலிடம் வகிக்கிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் 20 நியாய விலைக் கடைகளை ஒன்றுக்கு மேற்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இணைந்து நடத்தி வருகின்றன.

சிறுபான்மையினருக்காக தனி கவனம் செலுத்தப்பட்டு சிறுபான்மையினரைக் கொண்டு செஞ்சி, தியாகதுருகம், விழுப்புரம் நகராட்சி, கோட்டக்குப்பம் பேரூராட்சி ஆகிய இடங்களில் அதிக அளவிலே குழுக்கள் அமைக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன.

## அரவாணிகளுக்கென்று சுயஉதவிக் குழு

தமிழ்நாட்டிலேயே விழுப்புரம் மாவட்டத்தில் வள்ளலார் கிராம வங்கியின் உறுதுணையுடனும்

தொண்டு நிறுவனங்களின் துணையுடனும் முதன் முதலாக அரவாணிகளைக் கொண்டு 2 சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளது. இக்குழுக்களுக்கு வள்ளலார் கிராம வங்கியில் சேமிப்பு கணக்கும் துவக்கப்பட்டு கடந்த 6 மாதங்களாக சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன.

விழுப்புரம் மாவட்ட நிருவாகம் இந்த அரவாணிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் பொருட்டு இவர்களுக்காக விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அய்யூர் அகரம் ஊராட்சியில் 31 அரவாணிகளுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கியுள்ளது.

தமிழக அரசின் உத்தரவுப்படி விழுப்புரம் மாவட்டத்தில் இதுவரையில் 550 பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

விழுப்புரம் மாவட்டத்தில் மகளிர் கூட்டமைப்புகள் வங்கிகளிலிருந்து நேரடியாக 11 சதவீத வட்டிக்கு கடன் பெற்று அதனை சக சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டியில் கடனாக வழங்கி வருகின்றன. இதன் மூலம் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்தில் இராதாபுரம், தூரவி, ஆசூர், அசோகபுரி பஞ்சாயத்து கூட்டமைப்புகள் மூலம் 2750 மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெற்றனர்.



## பெண்கள் சொந்தக்காலில் நிற்க மகளிர் சுயஉதவிக் குழுக்கள்

*"தமிழகத்தில் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் தங்கள் உழைப்பாற்றலால் உயர வேண்டும்; நாட்டை உயர்த்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.*

*ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமானால், அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும், தன்னம்பிக்கையையும் பெறவேண்டும். அத்தகைய இலட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காகத்தான், மகளிர் சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன".*

*– மாண்புமிகு முதலமைச்சர்*
**செல்வி ஜெ ஜெயலலிதா** *அவர்கள்*



ஒவ்வொரு கூட்டமைப்பும் சிறு சிறு வங்கிகள் போல செயல்படுகின்றன.

அண்மையில் மகாராஷ்டிர மாநில மகளிர் மேம்பாட்டு நிறுவன (MAVIM) வல்லுநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களை பார்வையிட்டு அவற்றின் செயல்பாட்டினை பாராட்டியுள்ளனர். மேலும் அவர்களது அமைப்பின் பேரில் விழுப்புரம் மாவட்ட மகளிர் திட்ட மற்றும் வங்கி அலுவலர்கள் மகாராஷ்டிர மாநிலம் சென்று அங்குள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் சிறப்பாக செயல்பட ஆலோசனை வழங்கியுள்ளனர்.

கல் குவாரிகளில் காலம் காலமாக தொழிலாளர்களாக வேலைபார்த்து வந்த மகளிர் சுயஉதவிக் குழுவினர் இன்று தமிழக அரசின் உத்தரவிற்கிணங்க 2 கிராமங்களில் கல்குவாரி ஏலத்தில் நேரடியாக கலந்துகொண்டு பயன் பெற்றுள்ளனர்.

**பா. நாராயணமூர்த்தி**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*விழுப்புரம்.*



# தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் துணிச்சல்மிக்க நடவடிக்கைகள்

"செல்வி ஜெயலலிதா அவர்களின் அரசு அமைந்து இரண்டாண்டுகள் நிறைவுபெற்றுள்ளன.

பொருளாதார நிலைமையை சீர்செய்ய அவர் மேற்கொண்டுள்ள உறுதியான நடவடிக்கைகள் கருத்தில் கொள்ளத் தக்கவையாகும்.

அவரது சீரிய நடவடிக்கைகள் ஆக்கப்பூர்வமானவையாகும். செல்வி ஜெயலலிதா மேற்கொண்டுள்ள முயற்சிகள் புரட்சிகரமானவை. கடந்தகால சீர்கேட்டிலிருந்து ஒரு மாறுதல் என்ற வகையில் இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கதாகும்.

நடப்பாண்டின் தொடக்கத்தில் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் வேலை நிறுத்தம் செய்த போது, செல்வி ஜெயலலிதா அவர்கள் உணர்ச்சிபூர்வமான எழுச்சியினை உருவாக்கி இந்தப் பிரச்சினையை மக்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றார்கள். அவருடைய வாதம் சக்திவாய்ந்ததாகவும், மக்களை கவரக் கூடியதாகவும் அமைந்தது.

மின்சாரத்துறையில் சீர்திருத்தங்களை செயல்படுத்த அரசு துணிச்சலான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

அண்மையில் தமிழ்நாட்டிற்கு வருகைதந்த உலக வங்கியின் செயற்குழு, நமது மாநிலத்தின் நிலைமை குறித்து திருப்தி அடைந்ததாகத் தெரிய வருகிறது.

மின்சார வசதி, சாலை வசதி, வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி, பெருநகர ரயில் போக்குவரத்து தொடர்பான கட்டமைப்பு வசதி ஆகியவற்றிற்கான நிதி உதவியினைப் பெறுவதற்கான நிலைமை இதன் மூலம் உருவாகியுள்ளது.

மிகச் சிறப்பான நிதிச் சீர்திருத்தத்தின் விளைவுகள், அரசு அதிக அளவிலான வளர்ச்சி விகிதத்தை எட்டுவதற்கான திட்டங்களை செயல்படுத்துவதற்கான துணிச்சலைத் தந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் உற்பத்தித்துறை, வலிமை வாய்ந்ததாகவும், வளரும் தன்மை உடையதாகவும் உள்ளது.

தமிழ்நாட்டின் அனைத்துப் பொருளாதார செயல்பாட்டு நடவடிக்கையிலும் சீர்திருத்த ஒளிக்கதிர்கள் ஊடுருவி உள்ளன.

செல்வி ஜெயலலிதா போன்ற ஆற்றல்மிக்க தலைவரால் தான் தமிழ்நாட்டில் இத்தகைய மகத்தான மாற்றத்தை உருவாக்க முடியும்."

*நன்றி : "இன்டஸ்டிரியல் எகனாமிஸ்ட்"*

# கல்வியில் தொடர்ந்து சாதனை படைக்கும் திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டம் கல்வியில் சிறந்த மாவட்டமாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. இந்தியாவை ஆங்கிலேயர்கள் ஆட்சி புரிந்தபோது ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தில் பல பள்ளிகளையும் கல்லூரிகளையும் அமைத்து கல்விச்சேவை செய்துவந்தனர். தற்போது எடுத்துள்ள புள்ளி விவரப்படி தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டம் அதிக் அளவு எழுத்தறிவு மற்றும் படிப்பறிவு பெற்ற மாவட்டமாக இருக்கிறது.

எனவே கல்வித்துறையில் பல்வேறு சிறப்புகளைக் கொண்ட இம்மாவட்டம் அரசு நடத்துகின்ற பொதுத்தேர்வில் கடந்த பல ஆண்டுகளாக முதன்மைபெற்ற மாவட்டமாக இருந்து வந்துள்ளது. இந்த ஆண்டு நடைபெற்ற 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் மாநிலத்திலேயே அதிக மதிப்பெண்கள் பெற்று முதலிடத்தை பெற்றுள்ளது. பாளையங்கோட்டை ரோஸ்மேரி மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவன் எஸ். ராமசுப்பிரமணியன் 1181 மதிப்பெண்கள் பெற்று மாநிலத்திலேயே முதலிடத்தைப் பெற்றுள்ளார். அதே போன்று மாநிலத்திலேயே நான்காவது இடத்தையும் இம்மாவட்டத்தைச் சேர்ந்த மாணவன் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு மாதமும் தலைமை ஆசிரியர்கள் கூட்டம் நடத்தப்பட்டு எவ்வாறு தேர்ச்சி சதவிகிதத்தை அதிகரிப்பது என்று ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் அனைத்துப் பள்ளிகளிலும் வேலை நேரம் முடிந்தவுடன் ஒரு மணி நேரம் கூடுதலாக மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. தேர்ச்சி பெறுவதற்குத் தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்கள் பெறுவதற்கு சிரமப்படும் மாணவ மாணவியரை ஒரு பிரிவாகவும் மீதி திறன் உடையவர்கள், கூடுதல் மதிப்பெண்கள் பெறுவதற்கு வசதியாக அவர்களை இரண்டாம்



பிரிவாகவும் ஏனையோரை மற்றொரு பிரிவாகவும் பிரித்து இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய தொடர் நடவடிக்கைகளால் இம்மாவட்டம் அரசுப் பொதுத்தேர்வுகளில் தொடர்ந்து சிறந்து விளங்குகின்றது. இம்மாவட்டத்தில் இந்த வருடம் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 86.38 விழுக்காடு மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். 18 பள்ளிகள் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று இந்த ஆண்டு நடைபெற்ற 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்விலும் இம்மாவட்டதைச் சேர்ந்த மாணவிகளே முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளனர். பாளையங்கோட்டை சாராள் தக்கர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவி எம். ஆஷாபெனாசீர் 494 மதிப்பெண்கள் பெற்று மாநிலத்திலேயே முதலிடம் பெற்றுள்ளார். செங்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவி எஸ். கிருஷ்ணப்பிரியா 493 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார். 492 மதிப்பெண்கள் பெற்று, பாளையங்கோட்டை சாராள் தக்கர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவி பானுப்பிரியா மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார். மாநிலத்திலேயே ஐந்தாம் இடத்தையும் இம்மாவட்டத்தைச் சேர்ந்த மாணவனே பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாவட்டம் 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் 92.1 விழுக்காடு தேர்ச்சி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. 16 அரசுப் பள்ளிகளும் 57 தனியார் பள்ளிகளும், 38 மெட்ரிக் பள்ளிகளும், 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றுள்ளன. இதனையொட்டி 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மதிப்பெண்களைப் பெற்ற மாணவ மாணவியர்களை பாராட்டும் வகையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி அவர்கள் மற்றும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சுனீல்பாலீவால் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி அவர்கள் பேசும் போது, "இந்தியாவிலேயே தமிழ்நாடு கல்வியில் சிறந்த மாநிலமாக இருந்து வருகிறது. தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டம் அரசு பொதுத் தேர்வுகளில் சிறப்பான சாதனைகளைத் தொடர்ந்து செய்துவருகிறது. இச்சாதனைகளைத் தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் பெறும் வகையில் மாணவ மாணவியர்கள் கடுமையாக உழைக்க வேண்டும்'' என்று பேசினார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் "இச்சாதனை புரிவதற்கு உதவியாக இருந்த ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் அரசு சார்பில் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து நீங்கள் சிறந்த முறையில் கல்வி பயின்று எதிர்காலத்தில் இந்திய ஆட்சிப்பணி மற்றும் இந்திய காவல் பணி,மருத்துவர்கள், பொறியாளர்களாக ஆக வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்'' எனப் பாராட்டினார்.

- *சிவ. சு. சரவணன்*
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி

## நம் உணவில் உப்பின் பங்கு

நாம் நாள்தோறும் மூன்றுவேளை உண்ணும் உணவில் எவ்வகையிலாவது உப்பைச் சேர்த்துக் கொள்கிறோம். உணவில் உப்பின் அளவை, இப்போது நாம் வழக்கமாக உண்ணும் அளவைவிடப் பாதியாகக் குறைத்துக் கொள்வது நல்லது.

நாம் உண்ணும் உணவை வேகவைக்கும் போதே உப்பைக் கலந்துவிடுகிறோம். அடுத்து அதன் சுவையை அதிகரிக்க காரம், புளிப்பு இவற்றுடன் உப்பையும் சேர்த்து உண்டு பழகிவிட்டோம். மேலும் சில உணவு வகைகளை (ஊறுகாய் போன்றவை) பல நாள் பாதுகாத்து வைத்து உண்பதற்காக உப்பில் ஊறவைக்கிறோம்.

சோளப்பொரி, ஊறுகாய்கள், அப்பளம், தொகையல், சட்னி, வெண்ணெய், செயற்கை வெண்ணெய், புட்டிகளில் அடைக்கப்பட்ட உணவு வகைகள் , வடகம், வற்றல், வறுவல் வகைகள், ரொட்டி, கேக், பிஸ்கட் ஆகியவை தேவையான அளவைவிடச் சற்று அதிகமான உப்பு சேர்க்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

நம் உணவு வகைகளில் கலந்துள்ள உப்பின் அளவு :

| உணவு | உணவின் அளவு | உப்பின் அளவு |
|---|---|---|
| சோளப்பொரி | 100 கிராம் | 2.5 கிராம் |
| அப்பளம் | 2 எண்ணிக்கை (10 கிராம்) | 1.5 கிராம் |
| வறுவல் | 100 கிராம் | 2.5 கிராம் |
| தொகையல் | 1 தேக்கரண்டி | 0.20 கிராம் |
| ஊறுகாய், சட்னி | 100 கிராம் | 2.75 கிராம் |
| ரொட்டி | 40 கிராம் | 0.5 கிராம் |
| வெண்ணெய் | 10 கிராம் | 0.25 கிராம் |
| பிஸ்கட் | 100 கிராம் | 2.75 கிராம் |

# அரியலூரில் கண்டெடுக்கப்பட்ட அரியப் பொருட்கள்

பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன் இந்தியாவின் பல பகுதிகள் உள்நாட்டுக் கடலாக இருந்தன. இதை நிலவியலாளர்கள் ஆதாரத்துடன் தெரிவித்திருக்கிறார்கள். உதாரணமாக அரியலூர் வட்டாரத்தில் பல பகுதிகள் உள்நாட்டுக் கடலாக இருந்தன.

கடலாக இருந்து நிலமாக மாறிய இப்பகுதிகளில் கடலாக இருந்த சமயம் இங்கு வாழ்ந்து மறைந்துபோன கடல் மிருகங்களின் படிமங்களையும் தாவர இனங்களின் படிமங்களையும் இப்பொழுதும் இங்கு காணலாம். படிமங்கள் என்பதனை ஆங்கிலத்தில் பாசில்ஸ் என்று கூறுவார்கள்.

பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன் உள்நாட்டுக் கடலிலும், கடற்கரையிலும் கொடிய மிருகங்கள் வாழ்ந்தன. பல தாவர இனங்கள் வாழ்ந்தன. இயற்கையின் மாறுதலால் கடல் நிலமாக மாறியது. கடல் நிலமாக மாற முடியும் என்பது, பெரும் புயல் போன்ற காற்றின் அழுத்தத்தால் கடல்மீது மணல் வந்து மழையைப்போல கொட்டியது. தட்பவெப்ப மாறுதலாலும் காற்றின் அழுத்தத்தாலும் கடலாக இருந்த பகுதிகள் மீது மணற் பரப்பிலிருந்தும் மலைகளிலிருந்தும் காற்றின் கடும் வேகத்தால் மழையைப்போல் வந்து விழுந்த மணல், கடலை தரையாக்கியது. இதை நிலவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அப்போது அங்கு வாழ்ந்த கடல் மிருகங்களும் தாவரங்களும் மடிந்து மண்ணுக்குள் படிந்தன. அப்படி மடிந்த மிருகங்களும், தாவரங்களும் மிகவும் குளிர்ச்சியான அமைப்பில் இருந்ததால் அவைகள் அப்படியே இறுகிவிட்டன. கொஞ்சங்கூட உருவம் மாறாமல் படிந்து படிகமாக இன்றும் இப்பகுதியில் கண்டு எடுக்கலாம்.

அரியலூர் வட்டாரத்தில் சில அடி ஆழம் நிலத்தில் வெட்டினால் போதும். பலவிதமான அழகிய அபூர்வ படிமங்கள் கிடைக்கும். படிமங்களைப் பார்த்தால் அவை பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன் கடலிலோ அல்லது கடற்பரப்பிலோ வாழ்ந்த மிருகமாகவோ, தாவரமாகவோ இருப்பதைக் காணலாம். அது ஒரு மிருகமாகவோ அல்லது முழு தாவரமாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ இருக்கும். இவற்றைத்தான் படிமங்கள் என்று சொல்லுவார்கள்.

இவ்வட்டாரத்தில் படிமங்களைத் தவிர ஜிப்சம் எனப்படும் வெள்ளைக் களிமண் ஏராளமாகக் கிடைக்கிறது. கல்கண்டைப் போன்ற உருவ அமைப்புள்ள ஜிப்சம் அரியலூரில் இருந்து தினசரி நூற்றுக்கணக்கான டன்கள் வெட்டி எடுக்கப்பட்டு சிமெண்ட், கல்நார் தகடுகள், அமிலங்கள், இரசாயன எரு முதலியன தயாரிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப் படுகின்றன.



பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன் கடலாக இருந்து நிலமாக மாறிய அரியலூர் வட்டாரம் ஒரு விந்தையான நில அமைப்பைக் கொண்டது.

### பாசில்ஸ் மற்றும் டைனோசர் முட்டை

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த உயிரினமான டைனோசரின் முட்டை அரியலூர் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் ஆலை சுண்ணாம்புக்கல் சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்டு பாதுகாக்கப் பட்டு வருகிறது. அரியலூர் மற்றும்

அதன் சுற்றுப்புற பகுதிகள் அனைத்தும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வங்காள விரிகுடாவின் கடல்பகுதியாக இருந்தது. அரியலூரில் உள்ள தமிழ்நாடு சிமெண்ட் ஆலைக்கு சொந்தமான கல்லங்குறிச்சி சுண்ணாம்புக்கல் சுரங்கத்தில் பல்வகையான கடல்வாழ் உயிரினங்களின் உருக்காப்பிகள் அல்லது படிமங்கள் கிடைத்துள்ளன. கடற்கரை மணற்பரப்பில் குழிபறித்து முட்டையிடும் இனமான டைனோசர் என்னும் மிருகத்தின் முழு அளவிலான முட்டை சுண்ணாம்புக்கல் சுரங்கத்தில் தோண்டும்பொழுது கிடைத்துள்ளது. இதனை ஜெர்மனியில் இருந்து வந்து ஆராய்ச்சி செய்த ஆராய்ச்சியாளர்கள் (ஹோரிங், பேண்டல், கோர்டம் ஆகியோர்) இதனை பல்வேறு சோதனைகள் செய்தும், உலகின் பல்வேறு பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட டைனோசர் முட்டை உருநகல்களுடன் ஒப்பிட்டு ஆய்ந்து இது டைனோசர் முட்டையின் உருநகல்தான் என தங்களது ஆராய்ச்சி அறிக்கையில் தெரிவித்து உள்ளனர். மேலும் இங்கு சுரங்கத்தில் சுண்ணாம்புக்கல் தோண்டும்பொழுது கடல்வாழ் உயிரினங்களாகிய கடல்நத்தை எனப்படும் அமோனைட், கிளிஞ்சல்களைப் போல் தோற்றமளிக்கும் டெரிபிரேட்டுலா, நட்சத்திர மீன்வகையைச் சார்ந்த ஸ்டிர்மைட்டோபைகெஸ் மற்றும் சிரேபியா, அலக்ரோண்யா, நாட்டிலஸ், எக்ஸோகைரா, ஆஸ்டிரியா போன்ற பல்வேறு வகைப்பட்ட உயிரினங்களின் படிவங்களும், இலைகளின் பதிவுகளை கொண்ட பிளாண்ட் பாசில், மரம் கல்லாக ஆகிவிட்ட




வுட்பாசில் போன்ற பாசில்களும் இங்கு பெருமளவில் கிடைத்து வருகின்றன. சுமார் 10 அடி ஆழத்திலேயே சுரங்கத்திற்கு ஜிப்சம், மண் எடுக்கும்போது இவ்வகை படிவங்கள் கிடைக்கின்றன. பல கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உயிரினங்களான டைனோசர், கடல்நத்தை போன்றவற்றின் உருநகல்கள் மிகவும் பாதுகாப்புடன் அரியலூர் சிமெண்ட் ஆலை நிருவாகத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. புவியியல் ஆராய்ச்சியாளர்களுக்கு இவ்வாறு கிடைக்கும் அபூர்வ படிவங்கள் உண்மையாகவே அப்பொழுது வாழ்ந்த கடல்வாழ் உயிரினங்களின் உருக்காப்பிகள் என சான்றுகள் அளித்துள்ளனர்.

– து. மருதுபிள்ளை

*உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி),*
*பெரம்பலூர் மாவட்டம்.*

★ ★ ★

## உடற்பயிற்சியின் பயன்கள்





*சுறுசுறுப்பான நடை, நீச்சல், மிதிவண்டி ஓட்டுதல், திறந்தவெளிப் பயிற்சிகள் பின்வரும் பல பயன்களைத் தருகின்றது.*

- ★ உள்ளத்திற்குப் புத்துணர்வு
- ★ உடல்நிலை நன்றாக இருப்பதாக உணர்தல்
- ★ எச்.டி.எல். கொழுப்பு அதிகரித்தல்
- ★ மொத்தக் கொழுப்பு, ட்ரைகிளைசரலட்ஸ் மற்றும் எச்.டி.எல். குறைகிறது
- ★ இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது
- ★ உடல் எடையை சீராக வைக்கிறது
- ★ நீரிழிவு (டையாபெட்டிஸ்) நோயைக் கட்டுப்படுத்தல்
- ★ இதய இரத்தக் குழாயை விரிவடையச் செய்கிறது (நேச்சுரல் பைபாஸ்)
- ★ இரத்த உறைதலைத் தடுக்கிறது

# உவகை மலர்ந்த உதகை மலர்க் கண்காட்சி

நீலகிரி மாவட்டம், மலைப்பிரதேசங்களில் ஒரு தனியிடத்தை வகித்து வருகிறது. இம்மாவட்டத்தில் நிலவி வருகின்ற பல்வேறு வகைப்பட்ட தட்பவெப்ப நிலை மண்ணின் வகை மற்றும் நீரின் தன்மை தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்ய ஏற்றதாக இருப்பதால் இம்மாவட்டத்தில் சுமார் 77 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. எனவே இம்மாவட்டம் ஒரு தோட்டக்கலை மாவட்டமாக திகழ்ந்து வருகின்றது.

தோட்டக்கலைத்துறை, நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை சுமார் ரூ.550 இலட்சம் செலவில் ஆண்டுதோறும் செயல்படுத்தி வருகின்றது. தோட்டக்கலை வளர்ச்சியை இம்மாவட்டத்தில் மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடன் ஆண்டுதோறும் உதகை தாவரவியல் பூங்காவில் மலர்க் கண்காட்சி வெகு சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது.

மலர்க் கண்காட்சி நடத்தப்படுகின்ற இப்பூங்கா ஒரு காலகட்டத்தில் நீலகிரி மலைப்பகுதியில் முதலில் குடியேறிய ஆங்கிலேயர்கள் தங்களுக்கு வேண்டிய காய்கறிகளை உற்பத்தி செய்ய ஒரு கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்தி காய்கறி தோட்டம் அமைத்தனர். பின்னர் அப்போதைய சென்னை மாநில ஆளுநராக இருந்த Marquis Tweedale என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க 1847 ஆம் ஆண்டு இப்பூங்கா அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு புகழ்வாய்ந்த இலண்டன் கியூ பூங்காவில் பயிற்சி பெற்ற Thiru. Melvor என்பவரை அரசு நியமித்து இந்தப் பூங்கா நிறுவப்பட்டது. தற்சமயம் இந்தப் பூங்கா ஆசியாவிலேயே மிகச்சிறந்த பூங்காவாகத் திகழ்ந்து வருகின்றது. இப்பூங்காவில் சுமார் 2000க்கும் மேற்பட்ட தாவர வகைகள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

1995 ஆம் ஆண்டு 100 ஆவது மலர்க்காட்சி நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு ஒரு மலர்த்திருவிழாவாக வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. 100 ஆவது மலர்க்காட்சியின் நினைவாக நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆலோசனை பேரில் ரோஜாவிற்கு என்று சிறப்புப் பூங்கா ஒன்று உதகையில் அமைக்கப்பட்டு நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.

இந்த ரோஜா பூங்கா நமது இந்தியாவிலேயே அதிகமான ரோஜா ரகங்களை கொண்டுள்ளது. இப்பூங்காவை இந்திய ரோஜா சம்மேளனம் சென்ற ஆண்டு பார்வையிட்டது. இப்பூங்காவை அவர்கள் வெகுவாகப் பாராட்டி இந்தியாவிலேயே மிக சிறந்த பூங்கா என்று வர்ணித்தனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த பூங்காவை நிறுவ காரணமாக இருந்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்களை பாராட்டினர்.



இந்த ஆண்டு 107வது மலர்க்காட்சி இரண்டு நாட்கள் சிறப்பாக நடைபெற்றன. மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. அ. மில்லர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. இரா. ஜீவானந்தம் அவர்கள் தலைமையில், மேதகு தமிழக ஆளுநர்

திரு. பி.எஸ். ராமமோகன்ராவ் மற்றும் அவரது துணைவியார் திருமதி. உமாராவ் மலர்க் கண்காட்சியை துவக்கிவைத்தனர். பார்வையாளர்களைக் கவரும் வண்ணம் மலர் அலங்காரம் சிறப்பாக செய்யப்பட்டு, சுமார் 12,000 தொட்டிகளில் வளர்க்கப்பட்ட மலர்ச் செடிகள் பல்வேறு வண்ணங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டன. இதுதவிர போட்டியாளர்கள் கொண்டு வந்த சுமார் 1,500 மலர்த் தொட்டிகள் காட்சிக்காக வைக்கப்பட்டன. சுமார் 150 வகையான மலர்கள் பல்வேறு வண்ணங்களில் அழகாக காட்சிக்கு வைக்கப்பட்டன.

நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை வளத்தினை சித்தரிக்கும் வகையில் இம்மலர்க் கண்காட்சியில் மலர்கள் மட்டுமின்றி காய்கறிகள், பழங்கள், மூலிகை வகைகள் மற்றும் வாசனைத் திரவியங்கள் விவசாயிகளால் காட்சிக்கு வைக்கப்பட்டு தோட்டக்கலை வளத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை வளர்ச்சியை மென்மேலும் பெருக்கவும் வணிக ரீதியாக மலர்கள் வளர்த்து ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழக அரசால், நீலகிரி மாவட்டமானது மலர்களுக்கான வேளாண் ஏற்றுமதி மண்டலமாக அறிவிக்கப் பட்டுள்ளது. இத்திட்டம் மூலம் இம்மாவட்டத்தில் மலர்ச்சாகுபடிக்கு ரூ.15.89 கோடி முதலீடு செய்யப்படவுள்ளது.

மலர்க் கண்காட்சியில் பூங்கா போட்டியின் கீழ் 250 போட்டியாளர்களும் சிறந்த தோட்டக்கலை காட்சி பொருட்களுக்கான போட்டியில் 200 போட்டியாளர் களும் பங்கேற்றனர். போட்டிகளில் வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு 60 சுழற்கோப்பைகளும், 620 பரிசுக் கோப்பைகளும், ரொக்கப்பரிசுகளும் வழங்கப்பட்டன.

பி. முத்தையா
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்
நீலகிரி மாவட்டம்

# நூற்றாண்டு ரோஜா பூங்கா

உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் உதகை மலர்க்கண்காட்சியின் 100ஆவது மலர்க் கண்காட்சியின் நினைவாக இந்த நூற்றாண்டு ரோஜா பூங்கா 1995ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந்த ரோஜா பூங்கா உதகை நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள விஜயநகரம் பகுதியில் 4 எக்டேர் பரப்பில் 5 படி மட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது. உதகை புகைவண்டி நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள இப்பூங்கா நான்கு பக்கங்களிலிருந்தும் சாலையால் இணைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூங்காவில் நடவு செய்யப்பட்டுள்ள ரோஜா இரகங்கள் பல்வேறு பகுதிகளிலிருந்து பல்வேறு நிறுவனங்களிலிருந்து வரவழைக்கப்பட்டு நடவு செய்யப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும், சில இரகங்கள் சேர்க்கப்பட்டு தற்சமயம் 2150 இரகங்கள் இப்பூங்காவில் உள்ளன. ஹைபிரிட், புளோரிபண்டா, பாலியான்தா, மினியேச்சர் கொடி வகைகள் போன்ற பல வகையான ரோஜாக்கள் இப்பூங்காவில் உள்ளன. இந்தப் பூங்காவில் இனிவரும் காலங்களில் மேலும் பல இரகங்கள் வரவழைக்கப்பட்டு மொத்தம் 5000–க்கும் மேற்பட்ட இரகங்கள் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தற்சமயம் இந்தியாவில் மிக அதிகமான இரகங்களை ஒரே இடத்தில் பெற்றுள்ள பெருமை இந்த பூங்காவிற்கு உள்ளது. இந்தப் பூங்காவில் மேலும் பல அலங்கார வடிவமைப்புகள் உள்ளன. இவைகளில் ரோஜா வளைவுகள், ரோஜாக் குடைகள், ரோஜா இளைப்பாறும் மறைவுகள், பசுமைக் குடில்கள், செயற்கை நீரூற்றுகள், இளைப்பாற நிலா மாடம் போன்றவை முக்கியமானவை.

இந்தப் பூங்கா ஒரு மிக பெரிய சரிவில் அமைக்கப்பட்டுள்ளது. பூங்காவின் மேல் மட்டத்திற்கும் அடிமட்டத்திற்கும் சுமார் 100 மீட்டர் உயர வித்தியாசம் உள்ளது. ஒரே இடத்தில் நின்று இந்தப் பூங்காவின் அழகு முழுவதையும் பார்க்க முடியாது. எனவே இந்தப் பூங்காவின் அழகினை ரசிக்க இப்பூங்காவில் மிக முக்கிய பகுதிகளில் அமைந்துள்ள இளைப்பாறும் இடங்களிலிருந்து பார்த்தால் அனைத்து பகுதிகளையும் பார்த்து ரசிக்கலாம். தற்சமயம் இந்தப் பூங்கா ஐந்து மிகபெரிய படிமட்டங்களில் அமைந் துள்ளது. இதுவல்லாமல் பூங்காவின் மத்தியில் ஒரு சாலை அமைந்துள்ளது. முதல் படிமட்டம், பூங்காவில் இணைப்புச் சாலைக்கு கீழே அமைந்துள்ளது. இந்தப் படி மட்டத்தில் மினியேச்சர் ரோஜா இரகங்கள் அதிகமாக நடவு செய்யப் பட்டுள்ளது. இதற்கு "மினியேச்சர் ரோஜா தளம்" என்று பெயரிடப் பட்டுள்ளது. ★



அச்சமும், மடமையும் இல்லாத பெண்கள் அழகிய தமிழ்நாட்டின் கண்கள் என்றார் புரட்சிக்கவிஞர். அதற்கு ஓர் அருமையான எடுத்துக்காட்டுதான், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் நடைபெறாத ஓர் அறிவுப்புரட்சி சாதனை சரித்திரம்.

ஆம்! தமிழகக் காவல்துறையின் மணிமகுடமாக அமைந்துள்ளது "பெண் கமாண்டோ" அதிரடிப் படையினர்.

மண்ணுக்கும் கேடாய் மதிக்கப்பட்ட பெண்ணினம் இன்று ஆண்களை விடவும் எதிலும் மிஞ்ச முடியும் என்று கல்வித்துறையில் சாதனை களைப் படைத்துக்காட்டி வருகிறது. அதுபோல், பெண்களை ஏதோ மெல்லியலார் என்று வர்ணித்து வீரமும், துணிவும் அவர்களுக்குத் தொலைதூரப் பண்புகள் என்ற புரட்டினை உடைத்துக் காட்டியுள்ளனர்.



# பெண்ணினம் பெருமையுறும் வகையில் சாதனை படைத்தவர்



இதற்கு முழுமுதற்காரணம், பெண்ணினம் பெருமையுறும் வகையில் ஆக்கமும், ஊக்கமும் தந்து இந்த சாதனை சரித்திரத் தினை உருவாக்கிய பெருமைக்குரியவர், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களையே சாரும்.

1929இல் செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் தந்தை பெரியார் நிறைவேற்றிய தீர்மானம் இதோ செயலுருவின் உச்சத்திற்குச் சென்றுள்ளது. இந்த பெண் கமாண்டோ படைத்திறனால்!

"போலீசிலும், இராணுவத்திலும்கூட பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டும்" என்று தந்தை பெரியார் அவர்கள் 74 ஆண்டுகளுக்கு முன்பு தீர்மானத்தை நிறைவேற்றியபோது அதைக் கேள்விக்குறியோடும் கேலிப் பார்வையோடும் பார்த்தனர்.

இன்று அய்யாவின் தொலைநோக்கு, செயல் உருவம் பெற்றுள்ளது எத்தனைச் சிறப்பு.

நமது முதல்வர் நியாயமான வகையில், 100 ஆண்டுகளில் நடந்திராத சாதனை இது என்று கூறியது சரியான ஒன்றாகும்.

*நன்றி : விடுதலை*

*ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்* : **வ. கனகராஜ்**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

மொத்த சந்தா செலுத்துவீர்!

# 10வது மாத சந்தா இலவசம்

மேலும்

## அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!**

| மாதச் சந்தா ரூ. 1 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. 2 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 3 | கூடுதல் தொகை (2+3) ரூ. 4 | அரசு தள்ளுபடி ரூ. 5 | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 6 |
|---|---|---|---|---|---|
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. | அங்கயற்கன்னி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.



Visit us at: www.cooptex.com    Visit us at: www.tn.gov.com

**பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை**


தமிழரசு
R.N.I.NO.21446/70
RGN.NO.TN/PMG/(CCR)836/03-05 WPP-518